உ

சிவமயம்

# புளியம்பொக்கணை நாகதம்பிரான்

## ஆண்டுற்சவ மலர்



269
புளிய
SL PR.

புளியம்பொக்கணை, கண்டாவளை.

**விவசாயப் பெருமக்களே!**
**உலகின் உயிர் நாடிகளே!**

உங்கள் விவசாயத்தைப் பெருக்க
நாட்டை வளம்பெறச் செய்ய
இன்றே

# போட் - FORD

உழவு யந்திரங்களின் உதவியை நாடுங்கள்.

★ சிக்கனம்

★ சிறந்த உழைப்பு

★ நீடிய பாவிப்பு

போட் (FORD) உழவு யந்திரங்கள் மற்றும்
உதிரிப் பாகங்களுக்கு

யாழ். மாவட்ட ஏக விற்பனையாளர்கள்

# யாழ் கார்ப்பரேசன்

பரந்தன்

போன்: 214

உ
சிவமயம்

K. SOMAKANDH...
Justice of the Peace for All Island
Reg. No. 2000/07/1/All B/311
218 G 1/1, Park Road, Colombo-

269
SYPR.



புளியம்பொக்கணை

# நாகதம்பிரான் கோவில்

# ஆண்டுற்சவ மலர்

1971

39849

24.08.06

அச்சுப்பதிப்பு
விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம்

# பொருளடக்கம்



1. மலரைப்பற்றி
2. சரித்திரச் சுருக்கம்
3. வாழ்த்து
4. ஆசி உரைகள்
   - (1) வி. ஆனந்தசங்கரி
   - (2) இரா. சபாநாயகம்
   - (3) சோ. அருணாசலம்
   - (4) ச. சோமசுந்தரம்
   - (5) தி. முருகேசபிள்ளை
   - (6) இ. யோகநாதன்
   - (7) கா. செல்லையா
   - (8) மு. யோகலிங்கம்
   - (9) சி. க. வேலாயுதபிள்ளை
   - (10) த. செல்லத்துரை
   - (11) இ. கிருஷ்ணராசா
   - (12) நா. துரைசாமி
   - (13) வி. சிவசுப்பிரமணியம்
   - (14) ச. ஆறுமுகம்
   - (15) அ. சிவசுந்தரம்
   - (16) ம. ஸ்ரீகாந்தா
5. காத்திடும் தெய்வம்
6. அற்புதம் நிகழ்த்திய .....
7. அருள் மழை பொழி .....
8. திருநீறு
9. புளியம்பொக்கணையில் .....
10. 1966 - சிரமதான நிர்வாகக் குழு
11. சு. விநாயகமூர்த்தி டாக்டர்
    - (1) க. வே. அருணாசலம்
    - (2) பொ. வேலாயுதபிள்ளை
12. வரலாற்றுச் செய்யுள்
13. ஸ்ரீ நாகதம்பிரான் கும்மி
14. நாவலரின் நாவன்மை
15. மலர்க்குழு உறுப்பினர்
16. பெருமானுடைய அற்புதங்கள்
17. அறிவியலும் அரும் சைவமும்
18. வகுத்தான் வகுத்த வழி
19. வித்தியாலயம்
20. தாள்கள் போற்றி
21. உற்சவப் பணியிலே......
22. நமக்கோர் அன்பர்
23. போற்றித் திருப்பதிகம்
24. எங்கே? புளியம்பொக்கணையில்
25. நன்றியுரை
26. மணிக்கூட்டுக் கோபுர நிதி
27. சமர்ப்பணம்




தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

(படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்.)

# மலரைப் பற்றி



கலைமகள் ஆசிரியர் உயர்திரு. கி. வா. ஜெகந் நாதன் 'உயர்ந்திடும் மலர்தான் இனிதலர்க' என்று வாழ்த்தும் இம்மலரின் கண் 'சைவசித்தாந்த சாகரம் உயர்திரு. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை யவர்கள் தலமகிமையைத் தன் சொல்லமுதத்தா லும் பாவாலும் பலகூறிப் பரிமளிக்கச் செய்கின் றார். தலவரலாற்றை அடியேன் வசனத்தில் தர அதனை பண்டிதமாணவியர் பாமாலையாகப் புனைந்து சூட்டுகின்றனர். அறிஞர்கள் பலர் இனிய கட்டு ரைகளாலும் அருமைப் பாமாலைகளாலும் மலரை அலங்கரிக்கின்றனர். மலர் வாடாமலராய் நறு மணங்கமழுகின்றது.

ஆண்டுற்சவத்தின் ஒழுங்குகளை நேரடியாகக் கவனித்து நிர்வகிக்கும் கரைச்சிப்பகுதிக் காரியாதிகாரி உயர்திரு. இ. யோகநாதன் அவர்கள் மிகவும் இரத்தினச் சுருக்கமாக எமது திருப்பணிக்கு உதவும்படி கேட் டுள்ளார்.

இவ்வரிய மலரை குறுகிய காலத்தில் மிகச் சிறப்புற அமைத்த விவேகானந்த அச்சகத்தாரையும் அவர்களின் மகிமையை உரைத்து வழி காட்டிய காரியாதிகாரி திரு. சோ. அருணாசலத்தாரையும் எஞ்ஞான்றும் போற்றுதல் தகும்.

இத்தகைய மலரை அலரவைக்கப் பலர் படும்பாடு யாவரும் அறிவர். ஆனால் எமக்கு எம்பெருமான் தோன்றாத்துணையாக முன்னின்று வழி காட்டியமையால் எங்கள் முயற்சி இலகுவில் இதமாக நிறைவுற்றது.

பற்பல வணிகப் பிரமுகர்கள் மலர்க்குழுவினரைக் கண்டதும் இன் முகங்காட்டி விளம்பரதானம் செய்து பெரும்பொருள் உபகரித்தனர். அன்பர்கள் பலர் பொருளுதவியும் செய்தனர்.

தூய உள்ளத்துடன் ஆசியுரை நல்கியவர்களின் ஆசி பலித்தது, மலர்ந்தது இம்மலர் வாடாமலராய். இம்மலரில் நுழைவாயிலில் வாசகர் களை வரவேற்றுபசரித்து மலரின் உள்ளே சென்று ஆநந்தத் தேனைப்பரு கும்படி சிரந்தாழ்த்தி வணக்கத்துடன் கேட்கின்றோம்.


சி. சு. சின்னத்தம்பி

கௌரவ செயலாளர்

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆண்டுற்சவ மலர்க்குழு

கண்டாவளை

உ
சிவமயம்

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோயில் சரித்திரச் சுருக்கம்

சி. சு. சின்னத்தம்பி ( கி. சே. ) செயலாளர் மலர்க்குழு

பல வளங்களும் பொருந்தி, பல துறையிலும் மேம்பட்டுயர்ந்த புளியம் பொக்கணை என்னும் திருப்பதியிலே, வன்னிய குலத்திலே நீதிநாயக முதலியார் என்பவர் வாழ்ந்து வந்தார். பெண்மைக்கே இலக்கணம் வகிக்கத் தகுந்த கமலம் என்னும் மங்கை நல்லாளை இவர் மணம்செய்து, வள்ளுவன் வழியில் வாழ்ந்த காலை, இவர்கள் செய்த தான தவப்பயனாக, உமா பாகருடைய திருவருளினாலே ஒன்றன்பின் ஒன்றாக இரு ஆண் மகவுகளை பெற்றெடுத்தனர். ஆனால் அதன்பின்பு நடந்ததுதான் விந்தை. கமலம் அம்மாள் மூன்றாவது தடவையாகக் கர்ப்பமுற்றனள். பங்குனி மாதத்திலே - உத்தரம் பூரணை சேர்ந்த சுபதினத்திலே, ஓர் அழகான பெண்மகவை பெற்றதோடு ஒரு நாக பாம்பையும் பெற்றனள். இதைக்கண்ட சுற்றத்தினர் பயந்து பாம்பை எடுத்து வெளியில் போட, அது நகர்ந்து தாயின் படுக்கையிலே வந்து சேர்ந்தது. அதைக் கண்ணுற்ற அந்தத்தாய் அப்பாம்பிற்கும் பாலூட்டி வளர்த்தனள்.

காலதேவதை கணிசமான தூரத்தைக் கடந்தாள். நீதிநாயக முதலியாரும் கமலம் அம்மாளும் முதுமை அடைந்தனர். அவர்களின் குழந்தைகளும் தகுந்த பருவம் அடைந்து இல்லறத்தில் ஈடுபட்டனர். பெற்றோர் தமது சொத்துக்களைக் குழந்தைகளுக்குப் பகிர்ந்து எழுதப் புகுந்தகாலை, இப்பாம்பானது கோபிப்பதைக் குறிப்பினாலறிந்து அதற்கும் ஒரு பங்கீந்து சாதனம் எழுதினார்கள். பாம்பு கோபம் தணிந்தது. பாம்போடுகூட அவதரித்த சகோதரி பாம்பின் சார்பில் அதன் சொத்தைக் கவனித்து வந்தார். காலம் செல்லச் செல்ல அக்கம் பக்கத்திலுள்ள சர்ப்பங்களும் இப்பாம்பினோடு சேர்ந்து பல்கிப் பெருகி வீடு முழுவதும் நிறைந்து வாழ்ந்து வந்தன.

ஒருநாள் தாயார் முற்றம் கூட்டும்போது இப்பாம்புகள் சென்று குப்பைகளைச் சிதறியும், தேகம் முழுவதும் சுற்றியும் செய்யும் உபத்திரவம் தாங்க முடியாமல் கையிலிருந்த விளக்குமாற்றினாலே அடித்து "தொலைந்து போங்கள்" என்று மொழிந்தனள். உடனே சர்ப்பங்கள் யாவும் மறைந்தன.

சர்ப்பங்களைக் காணாத தந்தையார் மனம் வருந்தி பலவிடங்களிலும் தேடிக் காணாமையால் மனமுடைந்து ஊண்வெறுத்து, உறக்கம் மறந்து திரிந்தார். ஒருநாள் மனமும் உடலும் சோர்ந்து சிறிது நேரம் தூங்கியபோது சிவபெருமான் கனவில் தோன்றி, "பாம்புகள் கொக்காவில் என்னும் காட்டு வழியாக வன்னிநாடு சேர்ந்து புதூரென்னும் இடத்தில் தங்கி இருக்கின்றன. தகுந்த வரிசைகளோடு சென்று அழைத்துவந்து இங்கே ஓர் ஆலயம் அமைத்து, அச்சர்ப்பத்தினைத் தெய்வமாக வணங்கிவரில் நன்மை மிகவுண்டாகும்" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

அவ்வண்ணமே வரிசையோடு சென்ற தந்தையார் குறித்த இடத்திலே சர்ப்பம் இருக்கக்கண்டு, மனமகிழ்ந்து, குறையிரந்து, அழைத்து வந்து, ஆலய மமைத்துப் பூசைசெய்து, அரவு பிறந்த தினத்தில் பெரும் பொங்கல் செய்து சிலகாலம் செல்ல இறைவன் திருவடியடைந்தார்.

அவரின் பின்பு அவரது மகன் வவனியன் என்பவர் அர்ச்சகராகி, பூசைசெய்து வருங்காலத்தில், ஒரு பொங்கலை முன்னிட்டு, ஊர்கள் தோறும் பணம், பொருள் முதலியவை பெற்றுக்கொண்டு சகல வரிசை வாத்தியங்களோடும் (இன்றும் வரிசை வாத்தியத்தோடு பண்டம் சாவகச்சேரியிலிருந்து இக்கோவிலுக்கு வருவது அடியார்கள் அறிந்ததே) திரும்பி மடுக்கரை என்னுமிடத்தில் தங்கியிருந்தபோது, அக்காலத்தில் இலங்கையை ஆண்டு வந்த ஒல்லாந்த அதிகாரிகள் கண்டார்கள். சைவ சமயத்தையே வேரறுத்த அவ்வதிகாரிகள் ''இப்படியான காரியங்களைச் செய்தால் உம்மை உடனே சுட்டுக் கொல்வோம்'' என்று பூசகரை மிரட்டினர். மிகவும் பயந்த பூசகர் ''ஐயா! யாம் ஏதும் அறியோம், எமது முன்னோர் செய்தபடியே அதுவும் எமது குலதெய்வத்தின் ஆணைப்படியே செய்தனம்'' என்றனர். ''உங்கள் குலதெய்வமா? அது எது?''. இது அதிகாரியின் கேள்வி.

'பாம்பு'' இது பூசகர் பதில்.

''அப்படியாயின் அப்பாம்பை இப்போது காட்ட முடியுமா?''

''காட்டுகிறேன்'' என்றார் பூசகர். ஒல்லாந்த அதிகாரி பார்த்துக் கொண்டே இருந்தான். பூசகர் முறைப்படி பூசை புரிந்து ஒரு வெள்ளைத் துணியை முறுக்கி ஒரு வளந்தினுள் (பெரிய பானை) போட்டு, பாம்புருவமாகக் காட்சியளிக்க வேண்டுமென மன்றாடினர். என்னே எம்பெருமானின் அற்புதம்! உடனே ஒல்லாந்த அதிகாரிகள் காணும் பொருட்டு ஐந்து தலை நாகமாய் வளந்தினுள்ளிருந்து பேரிரைச்சலோடு எழுந்து படம் விரித்தாடியது. அதைக் கண்டவுடன் ஒல்லாந்தர் மனம் கலங்கித் தடுமாறி நடுநடுங்கினர். பூசகரை நோக்கி வணங்கி ''நாம் செய்த தவறைப் பொறுத்தருள வேண்டும்'' என்று கூறி அகன்றனர். பின்பு அந்த அதிகாரிகள் பொங்கலன்று கோயிலுக்கு வந்து தாங்கள் கண்ட சர்ப்பம் போலவே வெள்ளியினால் செய்து கொடுத்து ஆலயத்தைக் கட்டுவதற்கான பொருட்களும் கொடுத்துச் சென்றனர். அன்று தொடக்கம் வெள்ளியுருவத்திற்கும் பூசை நடைபெற்று வருகிறது.

இப்படியே ஒருவர் பின் ஒருவராக இன்றுவரை தவறாது எம்பெருமான் நாகதம்பிரானுக்குப் பூசை செய்து வருகின்றனர்.

நீதிநாயக முதலியாரின் வழித்தோன்றலான திரு. நா. வீரகத்திப் பிள்ளை அவர்கள் (ஐங்கரன்) தற்போது பூசகராகி, சீர்சிறப்புடன் தொண்டாற்றுகிறார். புதிய கட்டடங்களுடனும் புதுப் பொலிவுடனும் இப்பொழுது இவ்வாலயம் பிரபல்யமடைந்து வருகிறது.

நாகதம்பிரானும் எல்லோர்க்கும் நல்லருள் பாலித்து விளங்காநிற்பர். ஆதலின் நாமும் எம்பிரான் நாகதம்பிரானை இடைவிடாது சிந்தித்து, பூசித்து நல்லருள் பெற்றுய்வோமாக.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

# வாழ்த்து

இலங்கைத் தீவில் வடதிசையில்
இலங்கும் புளியம் பொக்கணையில்
நலங்கள் கொடுக்கும் திருக்கோயில்
நாகத் தம்பி ரான்அருளால்
கலங்கள் பொலியும் பாலோடு
கனியும் நாகம் உண்ணவரும்;
துலங்கும் இந்த அற்புதத்தைத்
தொக்கு மக்கள் கண்டிடுவார்.

இந்தத் தலத்தின் ஆண்டுவிழா
வினிலே தலத்தின வரலாறும்
முந்தும் சமயக் கட்டுரையும்
மொய்ப்ப மலரொன் றினையழகாய்ச்
சந்தத் தோடு வெளியிடற்குத்
தக்க முயற்சி நடைபெறுதல்
உந்தும் மகிழ்ச்சி யுறக்கேட்டேன்
உயர்ந்திம் மலர்தான் இனிதலர்க!

கி. வா. ஜகந்நாதன்
(கலைமகள் ஆசிரியர்)

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆண்டுற்சவ

மலர்க்குழுப் போஷகரும், கிளிநொச்சித் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினருமான

## 'சிவமணி' வீரசிங்கம் ஆனந்தசங்கரி அவர்கள் வழங்கிய

## ஆசியுரை



கரைச்சி புளியம்பொக்கணைப் பகுதியிலுள்ள நாகதம்பிரான் சிவாலயத்திலிருந்து, வற்ருத ஊற்ருகப் பிரவாகித்துப் பெருக்கெடுக்கும் அருள்வெள்ளத்தில் மூழ்கித் திளைக்கும் ஓர் அடியவன் என்ற முறையில், அப்பெருமானுடைய பாத கமலங்களில் சாத்தப்படும் நறுமணங்கமழும் இவ்வாடாமலருக்கு ஆசியுரை வழங்கக் கிடைத்தமையைப் பெரும்பேருகக் கருதுகிறேன்.

சிவப்பணியும், சமூகப்பணியும் இணைந்து இலங்கும் இத்திருப்பதியைச் சூழ்ந்து, நெற்கழனிகளும், வானுயர் காடுகளும், குடிசைகளுமே உள்ளன என்ற நிலைமாறி மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், பெருவீதிகளும், கல்விச்சாலைகளும்—இன்னும் ஒரு பெரும் நகரத்திற்குத் தேவையான அத்தனை வசதிகளும் நிறைந்து விளங்கும் ஒரு தெய்வீகப் பட்டினமாகப் பரிணமிக்க வேண்டுமென்ற எனது இலட்சியம் நிறைவேறத் துணைபுரிய வேண்டுமென எல்லாம் வல்ல நாகதம்பிரானை வேண்டுகின்றேன்.

சிவானந்தத்தில் திளைக்கும் அடியார்கள் இம்மலருக்காகக் கொடுக்கும் காணிக்கையை ஆரம்ப நிதியாகக் கொண்டு, அடுத்த ஆண்டு உற்சவத்தன்று, பிரமாண்டமான மணிக்கோபுரத்திலிருந்து ஓங்கார மணியோசை இப்பகுதி முழுவதற்குமே கேட்கவிருக்கிறது. இத்தலையாய திருப்பணியைச் செய்ய முனைந்துள்ள இம்மலர்க் குழுவினரை மனமாரப் பாராட்டுகின்றேன்.

நாகதம்பிரானின் நல்லருள் நாடெங்கணும் சூழ்க.

*கிளிநொச்சி*
*6—3—1971*

உ
சிவமயம்



"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

### கொழும்பு மாநகர் கதிர்காம யாத்திரீகர்கள் தொண்டர் சபைத் தலைவர்
### உயர்திரு. இரா. சபாநாயகம் அவர்கள்

# வழங்கிய ஆசியுரை

**அன்புடையீர் !**

சமயம் தழைத்து ஓங்க வேண்டுமானால், மக்கள் சைவத்தில் வாழ வேண்டும். பொதுவாக எங்கள் இளைஞர்கள் சமய பழக்க வழக்கங்களை ஒழுக்க ஒழுங்குகளை அறிந்திருப்பது இன்றியமையாதது. ஆகவே, சமயம் கற்பிக்கும் ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு கடவுள் இவர் என்பதையும் அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்கள், விலக்கப்பட்ட பாவங்கள் ஆதியனவற்றையும், அவரை வழிபடும் முறைகளையும் கற்பித்து வரவேண்டும்.

பிள்ளைகளை ஆதரித்து, உற்சாகப்படுத்தி சமயதீட்சை, சமய வகுப்புகள் வைத்து, அகில இலங்கைப் பரீட்சைகளில் சித்திபெறச் செய்விப்பது ஆசிரியர்களின் தலையாய சமயத் தொண்டாகும்.


சமயப்பணியோடு, சமூகப்பணியும் செய்துவரின் சமயம் தானாகத் தழைத்து ஓங்கிவிடும். சமயத் தொண்டுகளனைத்தும், சொற்ப காலத்தில் அநுகூலமடைந்து தமிழ் மக்களையும் ஆதி தொட்டு எமது திலகமாக ஒளி வீசி நிற்கும் சைவ சமயத்தையும் முன்னிருந்த நிலையிலும் பார்க்க அதி உயர்ந்த நிலையை அடையப்பண்ண எல்லாம் வல்ல நாகதம்பிரான் சிவனருளை வேண்டிநிற்போம்.

வணக்கம்.

பச்சிலைப்பள்ளிப் பிரிவுக் காரியாதிகாரியும், சிறந்த சைவப் பெரியாருமாகிய

## உயர்திரு. சோ. அருணாசலம் C. A. S. அவர்கள் வழங்கிய

# ஆசியுரை



புளியம்பொக்கணைப் புனித நற்பதியில் புதுமைகள் புரக்கப் புராதன கோயில் கொண்டிருக்கும் நாக தம்பிரானுக்கு அவ்வூர் மக்கள் பூசையும் வருடா வருடம் பொங்கல் உற்சவமும் ஆற்றி வருதல் மிகவும் வேண்டற்பாலது. வேண்டுதல் வேண்டாமை இலாத இறைவனுக்குப் பொங்கலேது பூசையேது என்ற கேள்வி எழலாம். பரிபூரணனான இறைவனுக்கு வேண்டுவன யாதொன்றும் இல்லை. ஆனால் மன்னுயிர்கள் யாவும் எண்ணற்ற பொருட்களை வேண்டி நிற்கின்றன. அவர்களின் மயக்கத்தை நீக்கும் பொருட்டு உண்மையை உணர்ந்த உத்தமர்களாகிய நம்முன்னோர் மனிதன் பெற வேண்டிய பொருட்களை அறம், பொருள். இன்பம், வீடு என நாற்பொருளாக வகுத்தனர். இந்நாற் பொருள்களை அடையும் நெறியையும் வகுத்தார்கள். இவை யாவற்றுக்கும் இன்றியமையாத இறைவனது திருவருளைப் பெறும் வழிவகைகளையும் வகுத்தார்கள். இறைவன் எங்கும் வியாபகமாய் உள்ளவர். அறிவுக்கு அறிவாகி, விஞ்ஞானத்துக்கு வித்தாகி, புவனங்களையும் புவனபோகங்களையும் படைத்தும் காத்தும் தோன்றாது நின்று துணைபுரிகின்றார். அவரே நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம் இயமானன், சந்திர சூரியர் எனப்படும் அட்டமூர்த்தியாகியும் நிற்கிறார். ஆகவே அவரை வழிபட்டு அவருடைய திருவருளைப் பெற்று நாற்பொருளையும் நனிபெறுவதற்கு ஆலயங்களும் பொங்கல்களும் பூசைகளும் விழாக்களும் இன்றியமையாதவையாகும். ஓர் உருவம், ஓர் நாமம் ஒன்றுமில்லா இறைவன் ஆயிரமாயிரந் திருநாமங்களும் திருவுருவங்களும் கொண்டு உலகத்தை உய்விக்கும் விந்தையை உணர்ந்துரைத்தல் அரிது. அவரை எவ்வெவ் வடிவங்களில் வழிபடினும் அவ்வவ் வடிவங்கள் தோறும் நின்று அருள் புரிவார். நாகதம்பிரானாகவும், விநாயகராகவும், சுப்பிரமணியராகவும், இன்னோரன்ன ஏனைய வடிவினராகவும் ஒரே இறைவன்தான் பல படத் தோற்றி அருள் பாலிப்பார். புளியம்பொக்கணை மக்களும் நாகதம்பிரான் வடிவத்தில் ஒப்பற்ற அப்பரம்பொருளையே வணங்குகிறார்கள். பொங்கல் உற்சவத்தில் அவ்வூர் மக்களும், யாழ்ப்பாணத்தின் பல்வேறு பாகங்களிலிருந்து வரும் பல்லாயிரம் அடியாரும் பிணக்கின்றிப் பேதமின்றி, ஒரே மனத்தினராய் ஒன்றுகூடி தங்கள் மனங்களெல்லாம் மலர, இறைவன் அருட்கதிர் பரவ. எங்கும் மங்களம் பொங்க வழிபடுவார்கள். எவ்வளவு சிரத்தையோடும் சிறப்போடும் வழிபாடு செய்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு இறைவனும் அருள் சுரப்பான். நாட்டில் நல்குரவும், பிணியும், துன்பமும் நீங்கி செல்வமும் சீரும் ஓங்கிப் பெருகும்.

மேற்கூறிய காரணங்களினால் இறைவணக்கமும் பொங்கலும், பூசையும், உற்சவங்களும் ஒரு நாட்டின் நலனுக்கு அத்தியாவசியமாகின்றனவென்பது வெளிப்படை.

> ''பூதங்கள் தோறும்நின் றாயெனி னல்லால்
> போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
> கீதங்கள் பாடுதல் ஆடுத லல்லால்
> கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரை ''

—மணிவாசகர்

★

ஓம்

## திருக்கேதீசுவர ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவர்
## உயர்திரு. ச. சோமசுந்தரம் அவர்களின்
# ஆசியுரை.

"தொண்டர் நாள்தொறுந் துதிசெய அருள்செய்கே தீச்சரமதுதானே"

### புளியம்பொக்கணை நாகதம்பிரான் சிவாலயம்

மேற்படி கோவில் ஆண்டுற்சவ மலர் வெளியிடத் திருவருள் கிருபை செய்தது மகிழ்ச்சிக்கிடமான விஷயம். இம்மலரைச் சிறப்பாக அச்சடித்து விட சைவமக்கள் கூடிய உதவி செய்ய வேண்டும்.

சைவமக்கள் முன்னேற்றத்திற்கு எங்கள் கோவில்களின் முற்காலத்தில் நடந்து வந்த விழாக்களும் மற்றைய வைபவங்களும் இக்காலத்திலும் நடத்த வேண்டியது அவசியம்.

மேற்படி கோவில் சிறப்பாக எக்காலத்திலும் நடந்துவர எல்லாம் வல்ல நாகதம்பிரான் அநுக்கிரகம் செய்ய வேண்டும் என்று நாமெல்லோரும் பிரார்த்திக்க வேண்டும்.

வெளியிட இருக்கும் மலருக்கு ஆசி ஒன்றை என்னையும் எழுதும்படி கேட்டுக் கனம் பண்ணியமைக்கு என் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

தலைவர்,
திருக்கேதீசுவர ஆலயத் திருப்பணிச் சபை,
26, பொலிஸ் பார்க் அவன்யூ,
கொழும்பு - 5.

உயர்திரு. தி. முருகேசபிள்ளை அவர்கள் வழங்கிய

(உதவி அரசாங்க அதிபர், கச்சேரி, யாழ்ப்பாணம்)

# ஆசியுரை


வன்னி நாட்டில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் சிறந்த சைவ ஆலயங்களுள் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயமும் ஒன்று. சைவத் தமிழ் மக்கள் எங்கிருந்தாலும் புளியம்பொக்கணை நாகதம்பிரானை வழிபடுவது வழக்கம். அன்பாக வழிபடும் அடியார்களுக்கு புளியம்பொக்கணை நாகதம்பிரான் அருள்மாரி பொழிவது ஏராளமான அடியார்கள் அறிந்த உண்மை.

பல்லாண்டுகளாக நாகதம்பிரான் ஆலயத்தில் வருடாந்த உற்சவ ஒழுங்குகளைப் பார்த்தும், பரிபாலித்தும் இருக்கிறேன். சாவகச்சேரியில் இருந்து வருடாவருடம் 'வளந்து' கொண்டு செல்லப்படும்போது வழியெல்லாம் பக்தர்கள் புடைசூழ பரவசத்தோடு உபயங்கள் கொடுப்பதைப் பார்த்திருக்கிறேன். நவநாகரீகமும், விபரீதமும் நிறைந்த இக்காலத்தில் சைவ அடியார்கள் இப்படியான தெய்வ வழிபாட்டு முறைகளில் பங்குபற்றும்போது சைவத்தின் எதிர்காலம் சிறப்புடையதாயிருக்குமென்பது திண்ணம்.

போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் இலங்கையின் கரையோரங்களில் அரசுபுரிந்த போது வன்னிநாடு ஒருவிதத்தாலும் பாதிக்கப்படாமல் சிறப்பும், சீரும், செல்வமும் நிறைந்த நாடாக இருந்தது. ஆங்கிலேயர் வந்து வன்னி நாட்டிற்குள் புகுந்து அதிக அக்கிரமங்கள் செய்து வன்னிநாட்டு அரசர்களை அழித்ததன் பெறுபேறாக வன்னிநாட்டிலுள்ள வீரத்தமிழ் மக்கள் ஆங்கிலேயரின் பட்டாளத்தின் கையில் மாண்டனர். எத்தனையோ சிறந்த சிவாலயங்கள் தற்போதும் காட்டால் மூடியபடி அழிந்து கிடக்கின்றன. இச்சிவாலயங்களைத் தேடித் துரந்து புனருத்தாரணம் பண்ணி இவ்வாலயங்களின் அண்மையில் முன்னிருந்தது போல தமிழ் மக்களின் மாநகரங்களையும், குடியேற்றத் திட்டங்களையும் அவசியம் அமைத்தல் வேண்டும். இதற்குச் சைவத் தமிழ்த் தலைவர்கள் மறு சமயத்தவர்கள் என்ன சொல்வார்கள் என நினைத்துப் பயப்படாமல் துணிந்து முன்வந்து முயற்சி எடுக்க வேண்டும்.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் சரித்திரத்தை உற்று நோக்கும்போது இது உண்மையா அல்லது உபகதையா என்று தற்கால மக்கள் வினவக்கூடும். ஓர் வன்னித்தலைவனின் மனைவி இரட்டைக் குழந்தைகளைப் பெற்றாள் என்றும், அதில் ஒரு குழந்தை நாகபாம்பின் உருவத்தைக் கொண்டதென்றும், அப்பாம்புக் குழந்தைக்குத் தாய் பாலூட்டி வளர்த்தாள் என்றும், அங்குள்ள பாம்புகள் வந்து அந்தப் பாம்புப் பிள்ளையோடு விளையாடுவதென்றும், அப்பாம்புகளின் விளையாட்டால் வசதியீனமடைந்த தாய் விளக்குமாற்றால் தட்டி 'போய்த் தொலையுங்கள்' என்று சொல்ல பாம்புப்பிள்ளையும் ஏனைய பாம்புகளும் ஒரே கூட்டமாகப் புறப்பட்டு 'புதூர்' சென்றதென்றும், பின் சொற்பனத்தின் உதவியோடு வன்னித் தலைவன் வேண்டிய மரியாதைகளுடன் புதூர் சென்று அப்பாம்புப்பிள்ளையையும் ஏனைய பாம்புகளையும் திருப்பி அழைத்து வந்து புளியம்பொக்கணையில் கோவில் அமைத்து அவர்களை வழிபட்டதையும் தற்போது வாழும் இளைஞர்கள் நம்பத் தயங்குவார்கள்.

தமிழ் மக்களின் சரித்திரத்தைப் பார்த்தால் தெய்வ நம்பிக்கை மருந்து, மாந்திரீகம், வானசாஸ்திரம், சோதிடம் முதலிய விஞ்ஞான விஷயங்களில் சிறந்து மேம்பாடு உடையவர்களாக எம்முன்னோர் இருந்தனர் என்பது வெளியாகும். புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயமும் அதற்கு ஓர் சான்று. *



# ஆசியுரை

**திரு. இ. யோகநாதன் சி. ஏ. எஸ்.**
காரியாதிகாரி
**கரைச்சிப் பிரிவு**

கரைச்சிப் பிரிவின் புராதன கிராமங்களில் ஒன்ருகிய புளியம்பொக்கணையில் எழுந்தருளியிருக்கும் நாகதம்பிரான் சரித்திர சம்பந்தமும் புதுமையும் வாய்ந்த தெய்வமென்பது யாவரும் அறிந்ததே.

இத்தெய்வத்துக்கு ஆண்டு தோறும் எடுக்கின்ற பொங்கற் பெருவிழா இவ்வாண்டும் அதிவிமரிசையாக எடுப்பதற்கு ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன என்பதை அறிகின்றபொழுது பெருமகிழ்வு எய்துகிறேன்.

தெய்வநெறி தழைத்தோங்க சிவநேயச் செல்வரெல்லாம் திரண்டொன்ருய்ப் பிரசுரிக்கின்ற மலர் இத்திருக்கோவிலின் மகிமையையும் மகத்துவத்தையும் மெய்யன்பர்களுக்கு எடுத்துக் காட்டுவது மட்டுமல்லாமல் கோவிலின் வளர்ச்சிக்கு உதவுவதாகவும் அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



முருகமோட்டை பயிர்செய்கைக்குழுச் செயலாளரும்
முருகமோட்டை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவரும்
கரைச்சி கிராம சபை அக்கிராசனருமாகிய

**உயர்திரு. கா. செல்லையா அவர்கள்**

வழங்கிய

# ஆசியுரை

புராதன சரித்திர வரலாறுடைய எங்கள் நாகதம்பிரான் சிவாலயத்திற்குச் சிரமதானத்தொண்டு புரிந்து சிவப்பணியும் செய்யும் அடியார் கூட்டம் மனங்குளிர மாண்புறு வகையில் ஆண்டுற்சவ மலரொன்றை அலரவைக்கும் இச்சிவப்பணிக்கு எனது உளமார்ந்த ஆசிச்செய்தியை மிகவும் மகிழ்ச்சியுடன் வழங்குகின்றேன்.

பழம்பதியாகிய இத்தலம் சகல பெருமையும் வளமும் பெற்றிலங்க எமது கிராம சபையும் நாமும் எம்மால் இயன்ற உதவியும் ஆசியும் வழங்கத் தயாராகவிருக்கும் இவ்வேளையில் இம்மலர் சரித்திர வரலாற்றுடன், புதுப்பொலிவும், சிறந்த கட்டுரைகளுடனும் மிளிர எல்லாம் வல்ல எம்பெருமானைப் போற்றுகின்றேன்.



சமாதான நீதிபதி

## உயர்திரு. மு. யோகலிங்கம் அவர்கள்

வழங்கிய

# பாராட்டுரை

சேவையுள்ளம் படைத்த சைவாபிமானிகள் இக்கோயிலுக்குச் சிரமதான முறையில் தெருவும் (1966-ல்) அமைத்துள்ளனர். பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு அப்பணியைச் செய்தபோது நானும் கலந்து உரையாற்றி உதவிகளும் செய்யும் பேறு பெற்றிருந்தேன். இக்கோயில் திருக்கேதீசுவரம் போன்று அதிதீவிரமாக வளருகின்றது. வளர வேண்டியது. பெருமானுக்கு மேலும் பல கட்டடங்கள் அமைக்க வேண்டும். இத்தல விசேடத்தைப் பற்றிக் கர்ண பரம்பரையாக வழங்கிவரும் சரித்திரத்தை நாம் கேட்டு மெய்யன்புடன் வழிபட்டுவரும் இவ்வேளையில், தல வரலாற்றையும், பெருமானின் அற்புதச் செயல்களையும் இன்னும்பல அடியார்களின் சேவைகளையும் தெளிவுபெற ஒரு வாடாத மலராக நறுமணம் கமழத் தயாரித்து இச்சந்நிதானத்தில் மெய்யடியார்களுக்குச் சமர்ப்பிக்கும் ஆண்டுற்சவ மலர்க் குழுவினரின் சிவத்தொண்டைப் பாராட்டுகின்றேன். இம்மலருக்காக அடியார்கள் அளிக்கும் நிதி ஒரு மணிக்கூட்டுக் கோபுரமும் மணியுமாக அமையப் போவதையிட்டு மேலும் சந்தோஷமடைகின்றேன். மலர்க்குழுவின் இலட்சியத்திற்கு உதவுவது எங்கள் தலையாய கடனாகும்.

வணக்கம்.



அகில இலங்கைக் காந்தி சேவா சங்கச் செயலாளர்

உயர்திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்களின்

# ஆசியுரை.

சைவ மக்களும் நீர்வளமும் பசுச் செல்வமும் பொலிவுற்று வாழும் பதியே புளியம்பொக்கணை. இது பரந்தனில் இருந்து பத்துக் கல் தொலைவில் உள்ளது. அவ்வூரில் பாலும் தயிரும் வேண்டியளவு இலவசமாகவே இன்றும் மக்கள் வழங்குவர். திருமகள் அங்கு நிரந்தர வாசம் செய்கின்றாள். இத்தகைய புண்ணிய பூமியாகிய புளியம்பொக்கணையில் இருந்து கிருபாநோக்கஞ் செய்து, பல்லாயிரக் கணக்கான அடியார்களின் குறை தீர்க்கும் நாகதம்பிரான் ஆண்டுற்சவ மலர் அலர்ந்து, மணங்கமழ்ந்து மக்களின் மனத்துயர் தீர்ப்பதுடன் அம்மலரின் நிதி கோபுரத்து மணியாகி, ஓங்கார நாதமெழுப்பி நல் வாழ்வுக்குக் கலங்கரை வெளிச்சமாகத் துலங்கவிருப்பதை நினைந்து புளகாங்கித மடைந்து இவ்வன்புடன் கூடிய ஆசியை வழங்குகின்றேன்.

முன்னைநாள்
கரைச்சி கிராம சபைத் தலைவர்

## உயர்திரு. த. செல்லத்துரை அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

---




ஆரிய வரலாறுடன் கூடிய நாகதம்பிரான் சிவன் கோவிலை முன்னிட்டு எமது கிராம சபை அப்பகுதிக்கு விசேட கவனம் செலுத்தி கோவில் பிரதேசத்தில் இரண்டு கிணறுகளை அமைத்ததுடன் சிரமதானத் தொண்டர்கள் அமைத்த கோவில் வீதிக்கு இரண்டாயிரம் ரூபா செலவழித்து கிறவல் போட்டு ஆண்டு தோறும் பராமரித்தும் வந்துள்ளது.

குறைந்த வருவாயுள்ள கிராம சபையாகவிருந்தபோதும் பாடசாலைவரை மேற்படி வீதியை நீட்டும்படி அக்கால உறுப்பினர் திரு. அ. வைரமுத்து கோரியபோது ரூபா 9150/- ஒதுக்கினேம். கிராம முன்னேற்ற சபையில் தலைவராக விளங்கிய திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் சங்கப் பெயரில் டீ ஒப்பந்தத்தை எடுத்தபடியால் மிகவும் திருத்தமான முறையில் பாடசாலை வரை வீதி நீண்டுள்ளது.

எனக்கு என்ன சிக்கல் வரினும் நாகதம்பிரானை வணங்க அவை விலகி விடுவதை அனுபவத்தில் அறிவேன். அப்படியே அடியார்களும் விசுவாசத்துடன் பெருமானை வணங்கி சகல பேறுகளையும் பெற்று நல் வாழ்வுப் பெருவாழ்வு எய்த இறையருள் கூட்ட வேண்டுமென வணங்குகின்றேன்.

Justice of the Peace for All Island
Reg-No. 2000/07/W/AI/ B/311
216 G 1/1, Park Road, Colombo-5



புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆண்டுற்சவ மலருக்கு

கிளிநொச்சி பட்டணசபை அங்கத்தவரும்

முன்னாள் கரைச்சிக் கிராமசபை உப அக்கிராசனருமாகிய

## திரு. இ. கிருஷ்ணராசா அவர்கள் வழங்கிய

## ஆசியுரை.

கரைச்சி - புளியம்பொக்கணைப் பகுதியிலுள்ள நாக தம்பிரான் சிவத்தலத்திலிருந்து செஞ்சுடரோன் ஒளிபோன்று பிரகாசித்து, அமுதத் தண்ணொளி நிலவுபோல் அருள் வெள்ளம் சுரந்து அடியவர்களுக்கு அருள்பாலிக்கும் அப்பெருமானின் அடியவன் என்ற முறையில் சிவமணம் கமழும் இம்மலருக்கு ஆசியுரை வழங்க அடியவனுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினை பெரும் பேருகக் கருதுகின்றேன்.

அந்நாள் கரைச்சி கிராமசபையில் அங்கம் வகித்தகாலை இவ்வாலயத்திற்கு நீண்ட ஓர் புதிய வீதியமைக்கும் பணியில் சிரமதானப் பணியை சிரமேல் ஏற்று சிவப்பணியே தம்பணி என அயராது உழைத்தும் உற்சாகம் காட்டியும் முன்னின்று உழைத்த உயர் திருவாளர்கள். H. E. புள்ளைநாயகம் (காரியாதிகாரி) V. ஆனந்தசங்கரி (கிராமசபைத் தலைவர்) ஆர். ரி. சுப்பிரமணியம் (தலைமை ஆசிரியர்) க. சங்கரப்பிள்ளை (த. ஆ.) சி. சு. சின்னத்தம்பி (கிராம சேவையாளர்) வே. அருணாசலம் (உடையார்) நா. வீரகத்திப்பிள்ளை (பூசகர்) ஆகியோருடன் ஆயிரக்கணக்கான தொண்டர்களுடன் சேர்ந்து என்னாலியன்ற சிரமதானப் பணியினை செய்யும் பேறு கிடைத்தமையைப் பெரும் பாக்கியமாகக் கருதும் அதே வேளையில் தொடர்ந்தும் இச்சரித்திர வரலாறு உடைய திருப்பதிக்கு மெய்யடியார்கள் மேன் மேலும் தங்கள் ஆதரவை நல்கி அருளைப்பெற்று கடைத்தேற எம்பெருமான் அருள் பாலிப்பாரக.

கொழும்பு தமிழ்ச் சங்க



நூலகம்

கிளிநொச்சி வட்டாரக் கல்வி அதிகாரி

## உயர்திரு. நா. துரைசாமி அவர்களின்

# ஆசியுரை

புதிய ஆலயங்களை ஆங்கு ஆங்கு அமைப்பதிலும் வரலாற்றுப் பெருமை கொண்ட பழைய சிவஸ்தலங்களை புனருத்தாரணஞ் செய்வது மேலான பணியாகும். புளியம்பொக்கணை நாகதம்பிரான் சிவன் கோவிலை இன்னும் சிறப்பான கட்டடங்களுடனும், மணிக்கூட்டுக் கோபுரத்துடனும் துலங்க வைக்கும் நோக்குடனே ஆண்டுற்சவ மலர்க் குழுவினர் திவ்விய மலர் ஒன்றை அலரவைப்பது பாராட்டுக்குரியது. எனது வட்டாரத்தைச் சேர்ந்த கரைச்சி தமிழாசிரியர் சங்கத்தலைவர் திரு. ஆர். ரீ. சுப்பிரமணியம் இம் மலர்க்குழுவின் தலைவராகவிருப்பது எனக்கும் ஆசிரிய உலகுக்கும் பெருமை அளிக்கின்றது.

அவர் மேற்படி கோவிலுக்குச் சமீபத்தில் முடிக்குரிய ஐந்து ஏக்கர் காட்டை (சிரமதான முறையில்) கிராம முன்னேற்றச் சங்கத்து உதவியுடன் வெட்டி, அரசினரிடம் ஒருசதமும் பெறாது பாடசாலைக்கான கட்டடங்களை நிறுவியவர். கிராம முன்னேற்ற சபைத்தலைவர் என்ற முறையில் கரைச்சி கிராம சபையாரிடம் சுமார் 10,000/- பெற்று பாடசாலைக்குத் தெரு ஒன்றைப் போட்டு கோவில் தெருவுடன் இணைத்தவர். இவை அனைத்தும் அவருடைய சமூகப்பணிக்கு ஞாபகசின்னங்கள், அவர் ஒரு கர்ம வீரர்.

கிராம சேவையாளர் திரு. சி. சு. சின்னத்தம்பியைத தலைவராகக் கொண்ட சிரமதான இயக்கத்திற்கு இவர் ஒரு சீவநாடி, செயலாளர், இவர்களும், இவர்களுக்கு உறுதுணையாக இயங்கும் மலர்க்குழு உறுப்பினரும் எடுத்த காரியங்களைத் தொடர்ந்து சித்திபெற முடிப்பவர்கள்,

செல்வம் நிலையில்லாதது. ஆகவே நிலையற்ற செல்வத்தை நிலைபேறுனதும் மறுமைக்கு உதவுவதுமான சிவப்பணியில் முதலீடு செய்வதே தக்கது. சிவப்பணி என்னும் வங்கியில் இட்ட பணமே மறுமையில் நாம் மாற்றக்கூடிய காசோலை, திருப்பணிக்கு உதவித் தரித்திரராவார் இலர். அவர்களிடம் தரித்திரம் தரித்திருக்கமாட்டாது. ஆகவே இவ்வாண்டுற்சவ மலர்க்குழுவின் வேண்டுகோளுக்குப் பூரண உதவி அளித்து ஷெ கோவிலைச் சிறப்பிப்போமாக. தலங்கள் சிறக்க நாடு சிறக்கும். வானம் வழங்கும். நல்வாழ்வு பெருகும்.

★

இளைப்பாறிய நீதியரசர்

**உயர்திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள்**

உவந்தளித்த

# ஆசியுரை.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில் ஆண்டுற்சவத்தோடு ஓர் மலர் வெளியிடப்படும் என அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எங்கள் சமுதாயம் முன்னேறுவதற்கு சமய அறிவு மக்களிடையே ஓங்கி வளர வேண்டும். இப்பொழுது சில காலமாக சமய விஷயத்தில் இந்நாட்டில் ஓர் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், சமய வளர்ச்சிக்கு இன்னும் அதிக இடமுண்டு. சமய அறிவு பரவுவதற்கு புளியம்பொக்கணை சைவப்பெரியார்கள் வெளியிடவிருக்கும் மலர் போன்ற பிரசுரங்கள் மிகவும் துணையாகவிருக்கும். ஆதலின் அப்பெரியோர்களின் சேவைக்குச் சைவ உலகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது. இவ்வரிய தொண்டை அவர்கள் தொடர்ந்து வருங்காலத்திலும் செவ்வனே நிறைவேற்ற நாகதம்பிரான் அவர்களுக்கு அருள் புரியுமாறு பிரார்த்திக்கிறேன்.

இளைப்பாறிய இலங்கை நீர்ப்பாசனப்பகுதி உதவிப் பணிப்பாளர்

**உயர்திரு. ச. ஆறுமுகம் அவர்கள்**

புளியம்பொக்கணை நாகதம்பிரான் சிவாலய ஆண்டுற்சவ மலருக்கு அளித்த

# ஆசியுரை.

ஆதிகாலத்தில் வன்னிநாட்டினை சீருடனும் சிறப்புடனும் பொலியச்செய்து, திருமகளும் நாமகளும் விரும்பிக் குடிகொள்ளும் வகைக்கு அதனைப் பெருநாடாக ''நாகரீகமாக'' சிறப்பித்தவர்கள் நாகர் என்னும் நன்மக்கள்.

பல நூற்றுண்டுகளுக்குப் பின், மனுநீதிகண்ட சோழனின் அருந்தவப் புதல்வனாகிய குளக்கோட்டு மன்னன், வன்னியரை ஈழத்திற்கு அழைப்பித்தான். இவ்வன்னியர்கள் வன்னி நாட்டினை மறுபடியும் மேலோங்கித் திகழச் செய்தனர்.

'கதிரவனைக் கண்ட பங்கயம்போல' சிதைவுற்றுப் போயிருந்த வன்னிநாடும் வன்னியரின் திறமையால் செல்வச் சிறப்புடன் விளங்கியது.

இப்படிப்பட்ட பெரும் பாக்கியங்களைப் பெற்ற பிரதேசத்தில் உள்ள புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோயிலும், இந் நூற்றுண்டில் ஓர் ஒப்பான பாக்கியத்தைப் பெற்றுள்ளது. பெரியோர்கள் சைவமக்கள் மனதில் சிவநாமம் என்றும் விளங்கச் செய்வதற்காக அரும்பாடுபட்டு, ஒத்துழைத்து இக்கோயிலின் ஆண்டுற்சவங்களைச் சிறப்பாக நடாத்தி வருகின்றனர்.

இவ்வரும்பணியைச் செய்வோரும், ஆதரவு அளிக்கும் மெய்யன்பர்களும், நாகதம்பிரானின் திருவருளைப் பெற்று சிவபக்தியுடன் இன்பமாக வாழவேண்டும் என மனமாரப் பிரார்த்திக்கின்றேன்.



கிளிநொச்சித் தொகுதி முன்நாள்

பாராளுமன்ற உறுப்பினர்

**உயர்திரு. அ. சிவசுந்தரம் J. P. அவர்களின்**

# ஆசிச்செய்தி.

பன்னெடுங் காலமாக, பரிவுடன் அருளினை அள்ளி வீசும் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆண்டு உற்சவ மலருக்கு ஆசிச்செய்தி வழங்கக் கிடைத்தமையைப் பெரும் பாக்கியமாகக் கொள்கின்றேன்.

இத்தலத்திற்கு வீதியமைக்கும் திருத்தொண்டில் பல்லாயிரக் கணக்கான தொண்டர்களோடு அடியேனும் ஒருவனுகச் சிரமதானப் பணியில் ஈடுபடக் கொடுத்து வெத்தவனுனேன். மென்மேலும், கரைச்சிக் காரியாதிகாரிப் பிரிவு வாழ் விவசாயப் பெருமக்களின் குலதெய்வமாகத் திகழும் நாகதம்பிரானின் திருத்தலத்திற்குப் பணி புரியும் பாக்கியம் கிடைக்க எல்லாம் வல்ல நாகதம்பிரானின் நல்லருளை வேண்டுகின்றேன்.

இம்மலர் வெளியீடு, இவ்வாலயத்தின் மணியில்லாக் குறையை நிவர்த்திக்க உதவுமென அறிந்து புளகாங்கிதமடையும் அதே வேளையில், இம்முயற்சி வெற்றி பெற நாகதம்பிரானின் நல்லருளை முன்னிறுத்தி எனது மனப்பூர்வமான ஆசிகளை வழங்குகின்றேன்.

நாகதம்பிரானின் நல்லருள் நாடெங்கும் சூழ்க.

உ

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆண்டுற்சவ மலர்

# ஆசியுரை.

இலங்கை வாழ் தமிழர்களின் வரலாற்றில் வன்னியர்கள் அரசு ஓர் பெருமைச் சின்னமாகும். எமது இனத்தையும் மதத்தையும் அன்னிய ஆக்கிரமிப்பினின்றும் காக்க வன்னியர்கள் என்றும் தயங்கியதில்லை. வீரமும் சைவப்பற்றும் கொண்ட வன்னியர்கள் தம் காவல் தெய்வமாக வணங்கிவரும் புளியம்பொக்கணை நாகதம்பிரான் பழமையும் பெருமையும் பெற்ற தெய்வமாகும். இப்பெருமானின் புகழ்பரப்பும் அடியவர்களின் முயற்சி பாராட்டிற்குரியது. தன்மானத்துடனும் சைவத்தில் ஆழ்ந்த ஈடுபாடுடனும் வாழும் விவசாயிகளின் காவலரான நாகதம்பிரான் வன்னியர்களை மட்டுமல்லாது, நம்மவர் எல்லோரையும் ஒன்று கூட்டும் ஓர் சக்தியாக விளங்க அவர் திருப்பாதத்தினை வேண்டி, நீங்கள் வெளியிடும் இவ் ஆண்டுற்சவ மலர் நாகதம்பிரானின் புகழ் பரப்புவதுடன், சைவத்தின் பெருமையினையும் கூறும் திருமலராக மலர எனது உளம் கனிந்த வாழ்த்துக்கள்.

ம. ஸ்ரீகாந்தா

19, வாசல அவன்யூ,
தெகிவளை, 19-3-71.

## அமுத வாக்கு

பிரம்பும் தடியும் உபயோகிக்காமல்; கோபமும் குறையும் இல்லாமல்; சம்பளத்தையும் வெகுமதியையும் எதிர்பாராமல்; நமக்குக் கற்பிக்கும் சிறந்த ஆசான் நூல்களே. நூல்களைச் சென்றடைந்தால் உறங்காமல், சோர்வு கொள்ளாமல் அவை நமக்கு அறிவு கற்பிக்கும். நீங்கள் தேடும்போது எதையும் மறைக்காமல் அளிக்கும். நீங்கள் பெருந்தீங்கு செய்தாலும் வசைமொழி கூறுமல் உங்கள் அறியாமையைக் கண்டு நகைக்காமல் கற்பிப்பனவும் நூல்களே.

— றிச்சட் - டி. பியூறி

அன்பளிப்பு: மில்க்வைற் ஸ்தாபனத்தார்

✶ மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப் படியுங்கள்.

# 'ஆதவன்ஸ் ரெக்ஸ்'

பலவித நவீன றெடிமேற் உடைகள்
விவாக வைபவத்திற்கேற்ற புடவைகள்

மலிந்த விலையில்பெற

**ஆதவன்ஸ் ரெக்ஸைத்**

தவறாது தரிசியுங்கள்

## ஆதவன்ஸ் ரெக்ஸ்

உரிமை:- த. செல்வராசா

**மாக்கற் வியூ -:- சாவகச்சேரி**



உ
சிவமயம்

# முருகன் ஸ்ரோர்ஸ்

உரிமையாளர்:- V. P. சதாசிவம்
மொத்த வியாபாரிகளும் கொமிஷன் ஏஜன்டுகளும்

**கண்டி வீதி - பரந்தன்**

தலைமைக் காரியாலயம்: கிளிநொச்சி

**எங்களிடம்:**

பலசரக்குச் சாமான்களும், சாய்ப்புச் சாமான்களும், லங்கா சலுசலா கூப்பன் பிடவைத் தினுசுகளும் மற்றும் றெடி மேட் வகைகளும், கைத்தறிப் பிடவைகளும், றங் பெட்டி, சூட்கேஸ், சைக்கிள் பாட்ஸ் முதலியனவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**ஒருமுறை விஜயம் செய்தால் உண்மை விளங்கும்**

ஏஜென்சி: சிலோன் ருபாக்கோ கொம்பனி சிகரட் வகைகள்

# கணேசா ஸ்டோர்ஸ்

பரந்தன்

உங்களுக்குத் தேவையான
சகலவித உணவுப் பொருள்கள்
சுத்தமாகவும் விலை சகாயமாகவும்
எங்களிடம் கிடைக்கும்

கட்டடத் தளபாடச் சாமான்
சாய்ப்புச் சாமான், சிமேந்து
ஓடு, சிலிங் பலகைகள்
சலாகை வகை
முதலானவைகள்

GANESHA STORES
GENERAL MERCHANTS
PARANTHAN

மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

ஏஜென்சி:

தினகரன், டெயிலி நியூஸ், தினமின, சிலுமின
முதலான தினசரிப் பத்திரிகைகள்
அதிகாலையிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் தேவையான பொருள்களுக்கு இன்றே
கணேசா ஸ்ரோஸை
நாடுங்கள்.

# வேல் பிறதர்ஸ்

இக்காலத்துக்கேற்ற
நவீன முறையில் தயாரிக்கப்பட்ட
றெடிமேட் உடுப்புகள்
விவாக வைபவத்திற்குரிய பிடவைகள்
லங்கா சலுசலா துணிகள்
இன்னும் பலவற்றை மிக மலிவான விலையில் பெற
வேல்பிறதர்சைத் தரிசியுங்கள்

## வேல் பிறதர்ஸ்

உரிமை: வே. மார்க்கண்டு
சந்தையின் உள்ளே இலக்கம் 9, சாவகச்சேரி

# சுரேஸ் ரேணேர்ஸ் அன் வெல்டேஸ்

கண்டி வீதி, பரந்தன்

இயந்திர வாகன உரிமையாளர்களே!

தங்களுக்கு வேண்டிய கடைச்சல், மின்சார ஒட்டு வேலைகளைத் திறமையாகவும் திருப்திகரமாகவும் செய்து முடிக்க இன்றே விஜயம் செய்யுங்கள்.

" தங்கள் திருப்தியே எங்கள் நோக்கம் "

வணக்கம்.

## SURESH TURNERS & WELDERS

KANDY ROAD -::- PARANTHAN

உ
சிவமயம்

அன்பளிப்பு:


* வாடகை ஒலிபெருக்கி
* திறம் சுருட்டு
* திறம் புகையிலை
* பலசரக்குச் சாமான்கள்
* யானை மார்க் சோடா
* மற்றும் தேவைகளுக்கு

# வரதன் ஸ்ரோர்ஸ்

கண்டி வீதி — கிளிநொச்சி

# VARATHAN STORES

KANDY ROAD — KILINOCHCHI




# ஆறுமுகம் நல்லதம்பி



75, கன்னாதிட்டி, போன்: 664, யாழ்ப்பாணம்.


தங்கப்பவுண், வைரம், பலவித இரத்தினக்கற்கள்
சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

ஓடர் நகைகள் குறித்த
தவணையில் உத்தரவாதத்
துடன் செய்து
கொடுக்கப்படும்



Give us a Trial before
Going Elsewhere

**Honesty & Promptness
Are Our Motto**



# A. NALLATHAMBY

**75, Kannathiddy — JAFFNA.**

*Telegrams:* "KAMALAM" *Telephone:* 664

எங்களிடம் :-



திறம் சுருட்டு
புகையிலை
நல்லெண்ணெய்
பலசரக்குச் சாமான்கள்
சாய்ப்புச் சாமான்கள்
சைக்கிள் உதிரிப்பாகங்கள்
றேடியோ பற்றறி
லைற் பற்றறி
குழந்தைகளின் பால் உணவுகள்

மற்றும்

களை நாசினி
கிருமி நாசினிகளும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

இன்றே விஜயம் செய்யுங்கள்.

## தர்மராசா ஓர்கனைசேஸ்

கண்டி வீதி — பரந்தன்

## THARMARAJAH ORGANIZERS

GENERAL MERCHANTS

KANDY ROAD, PARANTHAN

# ஆறுமுகம் பிறதர்ஸ்

கண்டி வீதி — பரந்தன்

எங்களிடம்:

எல்லா விதமான
பலசரக்குச் சாமான்களும்
சாய்ப்புச் சாமான்களும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

ஏஜென்ஸ்:

டெயிலி மிரர்
ரைம்ஸ்
லங்காதீப
ஈழநாடு
வீரகேசரி
மித்திரன் வாரமலர்
வீக்கென்ட் ரைம்ஸ்
முதலாய பிரபல்ய பத்திரிகைகள்
எம்மிடம் உடனுக்குடன்
பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே தேவையான சாமான்களுக்கு
விஜயம் செய்யுங்கள்.

# ARUMUGAM STORES

KANDY ROAD — PARANTHAN

★ உழவுயந்திர உப-உறுப்புக்கள்

★ மோட்டார் உப-உறுப்புக்கள்

★ ரயர் வகைகள்

★ விவசாய இரசாயனப் பொருள்கள்

★ சைக்கிள் உப-உறுப்புக்கள்

★ பற்றறி வகைகள்

★ மின்சார இணைப்புக்கள்

★ பசளை வகைகள்

★ தோட்டாக்கள்

★ பெயின்ற் வகைகள்

★ சிறந்த புகையிலை, சுருட்டு

ஆகியவை மொத்தமாகவும் சில்லறையாகவும்
எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்

என்றென்றும் உங்கள் தேவைகளுக்கு

# வி. ஆர். தம்பிப்பிள்ளை

கிளிநொச்சி

தொலைபேசி: 249

தொலைபேசி: 410 ஆரம்பம்: 1939

★ புகைப்படங்கள்

★ புளொக்குகள்

# கொழும்பு ஸ்ரூடியோ

ஸ்ரான்லி வீதி -:- யாழ்ப்பாணம்

புளியம்பொக்கணை நாகதம்பிரான் பொங்கலிலே
அடியார்களின் உள்ளங்களில்
அருள், அன்பு, இன்பம் பொங்கட்டும்.

# திருப்பதி ஸ்ரோர்ஸ்

கண்டி வீதி -:- கிளிநொச்சி

எங்களிடம் பிடவைகள், றேடியோக்கள், எவர்சில்வர் பாத்
திரங்கள் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
றேடியோக்களும் பழுதுபார்க்கப்படும்.

# மகாலட்சுமி தளபாட நிலையமும் தொழிற்சாலையும்

(உரிமை: பொன். சுப்பிரமணியம்)

கண்டி வீதி — பளை

கிளை: புளியம்பொக்கணைச் சந்தி

முதிரை, வேம்பு, பாலை, யாவறணை, மா, பலா முதலிய மரங்களினால் செய்யப்பட்ட சிறந்த தரமான நம்பிக்கையுள்ள

* வீட்டுத் தளபாடங்கள்
* வீட்டு நிலை, யன்னல், கதவு, நிராந்தி, பலகை
* விளையாட்டுப் பொருட்கள்

முதலானவைகளை குறைந்த விலையில் பெறுவதற்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

குறிப்பு:- விரும்பும் முறையில் குறித்த தவணையில் தரமான நம்பிக்கையுள்ள பொருட்கள் ஓடருக்குக் குறைந்த செலவில் எந்நேரமும் செய்து கொடுக்கப்படும்.



அன்பளிப்பு:

* கஸ்தூரி மருந்துச் சரக்குகள்
* அபிஷேகத் திரவியங்கள்
* திரம் நல்லெண்ணெய் வகைகள்
* பாடசாலை உபகரணங்கள்

மற்றும் பொருட்கள்
மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

விஜயம் செய்யுங்கள்:-

# விநாயகர் ஸ்ரோர்ஸ்

உரிமை:- V. S. பொன்னுத்துரை

37, கண்டி வீதி — பளை

FOR YOUR

INDUSTRIAL, AGRICULTURAL

&

BUILDING REQUIREMENTS

CONTACT

# SAMUEL SONS & Co., Ltd.

KANDY ROAD
KILINOCHCHI

HEAD OFFICE:
371, OLD MOOR STREET
COLOMBO - 12

சிக்கனமானது!　　　　சிறந்த தயாரிப்பு!!

# விஜயாஸ் நீல சோப்

குறைந்த செலவில் நிறைந்த சேவை
செய்கின்றது




பிறரைக் கவர்வது அன்பு
அன்புக்கு வித்து சுத்தம்
சுத்தத்திற்கு விஜயாஸ் நீல சோப்
பாவியுங்கள்

தயாரிப்பாளர்கள்:-

## முருகானந்தா குடிசைக்
## கைத்தொழிற்சாலை

முகமாலை　—　எழுதுமட்டுவாள்

விஜயம் செய்யுங்கள்

# ஸ்ரீ கபே - பளை

உரிமை:- நா. முருகேசு　　　　கண்டி வீதி — பளை

(இருபத்து நான்கு மணி நேர சேவை)

✶ சுத்தமான முறையில் சகல உணவு வகைகளுக்கும்!
✶ சிற்றுண்டி வகைகளுக்கும்!
✶ குளிர்பானம் முதலியவைகளுக்கும்

மிகச் சிறந்த இடம்.

உங்கள் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்.

எங்கள் நோக்கம் தங்கள் திருப்தி!

# விக்னேஸ்வரன் ஸ்ரோர்ஸ்

உரிமை - K. செல்வத்துரை
உத்தரவுபெற்ற விநியோகஸ்தர்
பதிவு இல: 86

இறக்கம் — செம்பியன்பற்று

எம்மிடம்

✶ புதினப் பத்திரிகைகள்
✶ குளிர்பானங்கள்
✶ திறம் புகையிலை, சுருட்டு வகைகளும்
✶ பலசரக்கு, சில்லறைப் பொருட்களேயும்

மலிவான முறையில் பெற்றுக் கொள்ளலாம்.

"உங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி".

# மணியம் ஸ்ரோர்ஸ்

உரிமை:- வ. சுப்பிரமணியம்
மருதன்கேணி சந்தி
செம்பியன்பற்று

இங்கே

❋ மிட்டாய் வகைகள்
❋ பிஸ்கட் வகைகள்
❋ கேக் வகைகள்
❋ குளிர்பானங்கள்

மற்றும் காரம், மணம், குணம் நிறைந்த புகையிலை, சுருட்டு வகைகளும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

புளியம்பொக்கணை
நாகதம்பிரான் சிவன் கோயில்
ஆண்டுற்சவ மலர்
நறுமணம்பெற்ற வாடா மலராய் மலர
— எமது ஆசி —

உரிய காலத்தில்
நாணயமான நல்ல அச்சக வேலைகளுக்கு

கிளிநொச்சி இம்பீறியல் அச்சகம்
கண்டி வீதி, கிளிநொச்சி

'முரளி சவுண்ட் சேவிஸ்'
உரிமை:- எஸ், தவம்
கண்டி வீதி -:- பளை

★ தெளிவான ஒலிக்கும்
★ தேன் சிந்தும் கீதங்களுக்கும்
முரளி சவுண்ட் சேவிஸ்
★ பக்திப் பாடல்களா?
★ பைந்தமிழ் சினிமாப் பாடல்களா?
அத்தனையும் எம்மிடம் உண்டு.
★ திருமண வைபவமா! ★ திருவிழாக்களா!
★ திறப்பு விழாக்களா!
எந்த வைபவங்களுக்கும் சிறந்த ஒலிபெருக்கி குறைந்த செலவில் அமைக்க எம்முடன் தொடர்பு கொள்க.
விபரங்கட்கு:- எஸ். தவம்
கண்டி வீதி - பளை

## விவசாயிகளுக்கு எமது
## அருஞ்சேவை

புதிய உழவு யந்திரங்கள்
இல்லாத வேளையில்
உண்மையான உதிரிப் பாகங்களைக்கொண்டு
திருத்தி அமைக்கப்பட்ட யந்திரங்களினால்
சிறந்த பலனை அடையுங்கள்.

* நிதிக்கடன் உதவியும் அளிக்கப்படும்.

# பிறவுன் அன் கோ.

பரந்தன் — வவுனியா.

தொலைபேசி: பரந்தன் 232
வவுனியா 574

தரமான உடைகளை
நிதான விலையில் பெற்றுக்கொள்ள

**யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்திற்கு**

விஜயம் செய்ய மறவாதீர்.

★ பலரக சேலைகள்


★ ரவுக்கைத் துணிகள்

★ பருத்தி, பட்டுகளும்


★ உயர்தர புடவைகளும்

சகாய விலையில்
பெற்றுக்கொள்ளுங்கள்.

**181/183, கண்டி ரேட்,**
**கிளிநொச்சி.**



கோவில் முன்புற வெளித் தோற்றம்



நாகதம்பிரான் கோவிலுக்குச் செல்லும் அடியார் கூட்டம் 7-ம் கட்டையில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானை வணங்கியே செல்வர்.

உ



# காத்திடும் தெய்வம்

கற்பனைக் கெட்டாத ஆதியாய்ச் சோதியாய்க்
    கண்கள்மூன் றுடைய கோவாய்க்
காசினி தழைத்திட வன்னியாம் பதிமேவிக்
    காத்திடுந் தெய்வம் நீயே
அற்புதம் பலகாட்டித் தீராநோய் தீர்த்தருளும்
    ஐயனே அன்னை வாமத்
தமர்கின்ற மூர்த்தியே அணிதங்கு வாளரவு
    அணைக்கின்ற மூல மூர்த்தி
பொற்பதி யெனப்புகழ வளர்கின்ற செஞ்சாலி
    பொலிகின்ற நல்ல தளியே
போற்றவரு முயர்புளியம் பொக்கணைத் தலம்மேவி
    புதுமைதரு கின்ற சிவமே
நற்பதந் தந்தினிது ஆண்டருளும் ஐயனே
    நானிலம் புகழு மரனே
நாதாந்த மேஞான வேதாந்த நாதனே
    நாக தம்பிரான் தெய்வமே.

— கவிமணி, வே. செல்வநாயகம்

# அற்புதம் நிகழ்த்திய நாகதம்பிரான் —
# — களவைக் காட்டிக் கொடுத்த நாகதம்பிரான்

சு. குமாரமூர்த்தி
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

இது போன்ற ஓர் ஆண்டு உற்சவம். ஏராளமான அடியார் கூட்டம், வயல்கள் யாவும் அன்னசத்திரமாகக் காட்சியளித்தன. பகல் முழுவதும் ஊர்வலத்துடன் நடந்த களைப்பு ; அடியார்கள் பலர் கோயில் முன்றிலிலும், அயற்புறங்களிலும் படுத்துறங்கினர்.

ஒரு தாய் தன்னுடைய பிள்ளையுடன் அயர்ந்து விட்டாள். பக்கத்திலும் பலர் உறங்கி விட்டனர். பூசை மணி கேட்டது. அடியார்கள் அனைவரும் எழுந்தனர்.


தன்னுடைய பிள்ளையின் கையில் ஆசையுடன் பல நாட்களாகச் சேமித்து வாங்கிப் போட்ட பொற்காப்புகள் இரண்டையுமே காணவில்லை. அழுதாள்—புலம்பினாள் ''இதற்கோ உன்னிடம் வந்தேன்,'' என்று பெருமானை நோக்கிக் கண்ணீர் தாரை தாரையாக வடியப் புலம்பினாள். அடியார் பலர் பச்சாத்தாபப்பட்டனர். தேடினர், படுத்த பாயைப் புரட்டிப் பார்த்தனர், அயலில் படுத்த ஒரு மாது மிகவும் துன்பப்பட்டுத் தானும்கூடத் தேடினாள்.

ஒரு சிறிய சர்ப்பம் ; ''திடீர்'' என்று ஊர்ந்து வந்து கூடித் தேடிய அந்தமாதின் உடையில் ஏறியது. ''ஐயோ பாம்பு'' என்று கத்தித் துடித்த அவள், தன் துகிலை உரிந்து உதறி உதறி ஓடினாள். துகிலை உதறியதும் இரண்டு காப்புகளும் அவள் மடியில் இருந்து தெறித்து விழுந்தன. காப்பை உடையவள் மகிழ்ந்தெடுத்து நாகதம்பிரானை மனமார வாழ்த்த—நாணிக்கூனிய அம்மாது மக்கள் கூட்டத்துள் விரைந்து மறைந்தாள்.



இச்சம்பவத்தைக் கண்ட எனது பாட்டியார் தவமூதாட்டி ''ஐயாச்சி'' அம்மையார் கூறக் கேட்க வல்லவா வேண்டும். அவர்தான் திருவடி நீழலை அடைந்து விட்டார்களே. அங்கிருந்தும் எனது பாட்டியார் ஐயாச்சி அவர்கள் எனக்குக் கதை கூறி வந்தும் இருக்கின்றார். இத்தலத்திற்கும் அவர் அனந்தம் தடவை வந்து வழிபாடாற்றி நற்கதி அடைந்துள்ளார்.

மெய்யடியார் கூட்டத்திற்கு வணக்கம்.
எம்பிரான் திருவடி வாழ்க!
போற்றுவம் போற்றுவம் அவர்தம் கழலடிகளை.
சுபம்.




நல்ல நாகங்கள் உறையும் கோயிற்றல விருட்சம்



கூட்டுப் பிரார்த்தனை முடிந்ததும் பூஜைகள் ஆரம்பமாகும். பூஜை முடிந்து அர்ச்சகர் அடியார்களுக்கு கற்பூரதீப தரிசனை செய்விக்கும் காட்சி.

# அருள்மழை பொழி நாகதம்பிரானே!



— பச்சிலைப் பள்ளியூரான் —
துணைச் செயலாளர், மலர் வெளியீட்டுக் குழு

அன்பினு லென்னுடை ஆவியோ டாக்கையும்
ஆனந்த மாக உருக
அடியேனை ஆட்கொண்ட அண்ணலே அடியார்கள்
அகத்தினில் அமைந்த உருவே
என்பரம் நீக்கியோர் இன்னருள் தந்தெனது
இதயமே விட்ட பொருளே
எண்ணிலா அடியார்கள் இன்னல்கள் தீர்த்தருளை
ஈந்திடும் சோதி வடிவே
முன்பதாய் பின்பு முழுதுமா யாகியே
முடிவிலா அருள்செய் திருவே
மூவுல கங்களிலும் தேடரிய செல்வமே
முத்தனே வேத முதலே
பொன்கொணர் நெல்லினை பொங்கவே தந்திடு
பொன்னிகர் வயல்கள் நடுவே
புளியம்பொக் கணையிலே பொலிவாக அருள்மழை
பொழிநாக தம்பி ரானே.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

ஆதியே நடுவே அந்தமில் பொருளே
அடியவர் துயர்களை திருவே
அன்பினால் உன்பதம் நம்பிடில் சந்ததம்
அருளினைப் பொழியு நல்மழையே
சோதியாய் தோன்றிடும் தூயனே வையகம்
சூழ்ந்திடும் இருள்களை ஒளியே
சுந்தரா உன்பதம் அன்பினு லடியவர்
சூடிடு லருள்செய் முதல்வா
நிதினை எம்மிடை சிறக்கவே யகற்றியே
செய்திடும் கருணை மழையால்
செப்பிடற்கரிய வுன் சீரினை யெண்ணியே
சிந்தை கொள் அருளின் நிறைவால்
பேதையே யானதால் புகன்றிடும் வார்த்தையில்
பொருந்திடும் பிழைகள் பொறுப்பாய்
புளியம் பொக்கணையிலே பொலிவாக அருள்மழை
பொழி நாக தம்பிரானே.

அள்ளியே அருளினை அடியார்க்கு நல்கிடும்
ஐயனே அன்பி(ன்) உருவே
அடியவர் குறைகளை உடனுடன் தீர்த்திடும்
அருமருந் தன்ன பொருளே
வெள்ளியாம் நாளதில் உன்தலப் பூசகர்
வேண்டிய பூஜை யெல்லாம்
விருப்புடன் முடித்தபின் வீதியில் அமைந்திடு
மேன்மைகொள் அரசின் அடியில்
தெள்ளிய பாலொடு தீஞ்சுவைக் கனிவகை
தேர்ந்துமே வைத்து மீள
நிதினை அகற்றியே தேசத்தோர் யாவரும்
சிறப்புடன் வாழ வேண்டி
புள்ளிகொள் நாகமாய் போந்தவை யாவையும்
புசித்தருள் கொடுக்கு மிறைவா
புளியம் பொக்கணையிலே பொலிவாக அருள்மழை
பொழி நாக தம்பிரானே.

---

நேற்றைக்கு உளன் எனப்பட்டான் இன்றைக்கு இலன் எனப்படுதல் கண்டும், உன் உயிர்க்குப் பயன்படுவனவற்றைச் செய்யாது, வீண் நாட் கழிப்பது ஐயையோ எவ்வளவு அறியாமை.

—ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

# திருநீறு

**K. கணபதிப்பிள்ளை ஆசிரியர்**
(தலைவர், சைவ மகாசபை, நுவரெலியா)



திருநீறு சைவ சாதனங்களுள் ஒன்று. சாதனம்—ஒன்றை அடைவதற்கு உதவியான கருவி. சிவபெருமானை அடைதற்கு திருநீறு கருவியாதலின் அது சாதனமாயிற்று. திருநீறு சாதனம், சிவபெருமான் சாத்தியம். மனிதப் பிறவியின் பயன் சிவபெருமானுடைய திருவடிகளை அடைதலே.

திருநீற்றுக்கு வழங்கும் பெயர்களாவன—விபூதி, க்ஷாரம், இரட்சை, பசிதம், பஸ்பம். விபூதியென்பதன் பொருள் மேலான செல்வம். இங்கு செல்வம் முத்தி எனப்படும். க்ஷாரம் என்பது அஞ்ஞான இருளைப் போக்குவது இரட்சை உயிர்களைக் காப்பது. பசிதம் ஞானவொளியைத் தருவது. பஸ்பம் பாவங்களை நீக்குவது.

அங்கவீனமில்லாததும் கோபமற்றதும் கன்றுள்ளதும் பால் கொடுக்கக்கூடியதும்; உரோமம், துணி முதலியதுமான அசுத்தப் பொருட்களை உண்ணாததும் நோயில்லாததுமாய பசுவின் சாணத்தை தரையில் விழும் முன்னரோ, அல்லது சுத்தமான தரையில் விழுந்த பின்னரோ எடுத்து வெய்யிலில் உலர்த்தி அக்கினியிலிட்டு நீற்றியெடுப்பது சிறந்த விபூதியாகும்.

திருநீற்றை நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லி வலக்கையின் நடுவிரல் மூன்றினாலுந் தரித்தல் வேண்டும். வாய் அங்காந்து கொண்டும் தலை நடுங்கிக்கொண்டும் கவிழ்ந்து கொண்டுந் தரித்தலாகாது. விபூதியை உத்தூளனமாகவேனும் திரிபுண்டரமாகவேனும் தரிக்கலாம். உத்தூளனமாவது பரவப் பூசுதல், திரிபுண்டரமாவது மூன்று குறியுள்ள முறையில் தரித்தல். விபூதி வெண்ணிறமானதாகவே இருத்தல் வேண்டும். இதுதான் அணிபவர்களுக்கு இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் கொடுக்கும். நோய் நீக்கம், ஞானம், செல்வம் முதலியவற்றை விபூதி நல்கும், செந்நிற விபூதியும், கருநிற விபூதியும் ஆகா. வறுமை, பிணி, கடன் முதலியவற்றை இவை தருமாதலால் இந்நிறமுடைய விபூதியைத் தவிர்க்க வேண்டும்.

"திருநீறிட்டார் கெட்டார்" என்றொரு பழமொழி வழங்குகிறது. திருநீறு இட்டு ஆர் கெட்டார் என்ற கருத்தைத் தருவதோடு திருநீறு இட்டவர்கள் அகங்காரம் கெட்டார் என்ற பொருளையும் தருகிறது.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாண்டியனுடைய சுரநோயை திருநீற்றினால் நீக்கினார். அவரது "மந்திரமாவது நீறு" என்ற பதிகமே திருநீற்றின் பெருமையை விளக்குவதற்குப் போதுமானது. ★

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.

விபூதியணிபவர்களைச் சிவனெனவே எண்ணி வழிபடுதல் வேண்டும். சிவபெருமானே திருநீற்றை அணிந்திருக்கின்றாரெனின், அதன் பெருமை சொல்லுந்தரமன்று.

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே.

—திருமந்திரம்

பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியி னான்தன் தொழும்பரோடு அழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீறு
அணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சும் ஆறே.

—மணிவாசகர்


மனிதனுக்கு இறைவன் நெற்றியைப் படைத்த காரணம் சிவசின்னமாகிய திருநீறு அணிவதற்கே. ஆதலினாற்றான் ஒளவையார் ''நீறில்லா நெற்றி பாழ்'' என்று குறிப்பிட்டார். திருநீறு பூசுகின்றவன் இரண்டு விதத்தில் நன்மை செய்கின்றான். தான் பூசும்போது ''சிவ சிவ,'' என்று சொல்லிக் கடவுளை நினைக்கின்றான். அவன் பூசிக் கொண்டு வெளியே செல்லும்போது அவனைப் பார்ப்பவர்களுக்குச் சிவனது நினைவை உண்டாக்குகின்றான். தான் கடவுளை நினைப்பதோடு மற்றவர்களையும் கடவுளை நினைக்கச் செய்கின்ற செயல்தான் உலகத்தில் உயர்ந்த செயலாகும்.

இறைவனைப் பாடுதற்கு வேண்டிய இனிய வாக்கை அளிப்பதும், பாலுஞ் சோறும் பரிந்து அளிப்பதும், கூடற்கு அரிய அடியாரிடம் தம்மைக் கூட்டி வைப்பதும், ஓடி ஓடி அலையும் மனத்தை அடக்கி இறைவனை நினைக்கச் செய்வதும், வாழ்க்கையில் தேடுவதற்கு அரிய செல்வங்களையெல்லாம் அளிப்பதும் திருநீறு. பூதங்களையும் விலங்குகளையும் பேய்களையும் நம்மண்டை அணுக விடாமல் தடுத்துக்காப்பது திருநீறு.

நன்மைகளை யெல்லாம் தன்னகத்தே கொண்டு விளங்கும் திருநீற்றை, பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை தரும் திருநீற்றை யாம் எல்லோரும் பணிவன்புடன் அணிந்து பரமன் அருளுக்குப் பாத்திரர்களாவோமாக. வாழ்க திருநீறு.

---

நாம் சிற்றறிவு, சிறு தொழில் உடையேம். ஆதலால், முற்றறிவு முற்றுத்தொழில் உடைய கடவுளை வணங்கி அவருடைய திருவருள் வசமாய் நிற்பின், அன்றி, பாவ புண்ணியங்களை உள்ளபடி அறிதலும், பாவங்களை ஒளித்துப் புண்ணியங்களைச் செய்தலும் நம்மால் இயலாவாம்.



தல விரிட்சத்தின் கீழ் கூட்டு வழிபாடு செய்யும்
அடியார் கூட்டம்



கோவில் விருட்சத்தில்
உறையும் நாகங்களுக்கு
பாலும் பழமும் வழங்கு முன்பு

# புளியம்பொக்கணையில் *புயங்க அருட்பிரவாகம்



— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை —
சர்வகலாசாலை வீதி, திருநெல்வேலி

எங்கள் பெருமான் எழில்நாக பூஷணங்கள்
தங்கள் பெருமானுந் தானேயாய் — இங்கொருகால்
தோற்றம் எடுத்துத் துகளறுத்த செய்தியெல்லாம்
போற்றல் நமக்குப் புகல்.

எங்கள் பெருமான் — இறைவன், எழில் நாக பூஷணங்கள் — இறைவனின் அழகிய ஆபரணங்களாகிய நாகங்கள், தங்கள் என்றது நாகங்களை. தங்கள் பெருமான் — நாக தம்பிரான், தானே பெருமானும் ஆய் — இறைவன் தானே நாகதம்பிரானுமாய், இங்கு — இந்தப் பூமியில் (ஈண்டு புளியம்பொக்கணை என்ற தலத்தில்), ஒருகால் — ஒருமுறை. தோற்றம் எடுத்து — (நாகதம்பிரானுய்) உருவம் எடுத்து, துகள் அறுத்த — (பக்தர்களின்) குற்றங்களைப் போக்கிய, செய்தியெல்லாம் — அற்புதச் செயல்களை எல்லாம் போற்றல். — (கர்ணபரம்பரைக் கதைகளாலும் புளியம்பொக்கணைத் தல புராணத்தாலும் கேட்டு) பேணுகிற முறையிற் பேணுதல், நமக்கு — நம் வாழ்க்கைக்கு, புகல் — தக்கதொரு அரணும்.

எம்பெருமான் தானே நாகதம்பிரானுமாய் உருவந் தரித்து புளியம் பொக்கணை என்னுந் திவ்ய தலத்தில் உள்ளவர்களும், அங்கே வந்து தம்மைத் தரிசித்து வணங்குபவர்களுமாகிய பக்தர்களின் குற்றங்களைப் போக்கிய, பழைமையாகிய புராணச் செய்திகளை யெல்லாம் பேணுதல் செய்து போற்றுதல், நம் வாழ்வைப் புனிதஞ் செய்தற்கு வாய்த்ததொரு பாதுகாப்பாம் என்றவாறு.

★ ★ ★

அருட்சத்தியின் கூறுகிய குண்டலிசத்தி, பாம்பு வடிவாய்ச் சுருண்டு மூலாதாரத்தில் உறங்கிக் கிடப்பதென்றும், அதனை யோக சத்தியால் தட்டி எழுப்பி மேனேக்கச் செய்து, சிரசில் வதியும் சந்திர கலையைக் குண்டலியால் தீண்டி, சந்திர கலையிலிருந் தொழுகும் அமிர்த தாரையை நரம்புகளில் பரவச் செய்து, பிரபஞ்ச சேட்டைகளடங்கிச் சும்மா இருப்பதாகிய சுகானுபவம் என்கின்ற நிட்டை கைகூடுபவர்கள் யோகிகள் என்று கூறுவார்கள்.

யோகிகள் அகத்தே காணும் பாம்புவடிவாகிய குண்டலியை, புறத்தே நம்மனேரும் தரிசித்து உய்யும்படி அமைந்திருக்கிறது. புளியம்பொக்கணை

* புயங்கம் - பாம்பு

என்கின்ற திவ்விய தலம். அங்கே நாகபாம்புகள் அருட் சத்தியாகிய குண்டலி மேலிட்டு, நச்சுத் தன்மை அடங்கி, அமிர்தமாகிய பால் பருகிச் சாத்துவித குணத்தை உடையனவாய்த் தெய்வத் தன்மையோடு கூடிச் சாதுக்களாய் உலாவுகின்றன. துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்கின்றன என்றுங் கூறலாம். சிஷ்டர்கள் – நல்லவர்கள், பத்தர்கள். துஷ்டர்களையே அவைகள் நிக்கிரகஞ் செய்கின்றன. நிக்கிரகம் – தண்டனை.

★ ★ ★

காடுகளிலே ஆசிரமங்களில் வதியும் முனிவர்கள் துஷ்ட மிருகங்களை அடக்குவதற்கென்று ஆயுதங்கள் வைத்திருப்பதில்லை. எல்லா உயிர்களையும் உள்நின்று இயக்கும் சிவசத்தி, துஷ்ட மிருகங்களையும் உள்நின்று இயக்கும் இரகசியத்தை முனிவர்கள் அறிவார்கள். முனிவர்களின் பார்வை விசேடத்தால் துஷ்ட மிருகங்களின் கொடுந்தன்மை கீழ்ப்பட உள்நின்றியக்குஞ் சிவசத்தி மேற்பட்டு விடுகின்றது. கரடி ஓம விறகை ஒடித்து ஓம குண்டத்தில் இடப் புலியும் ஏற்ற சேவை செய்யும். முனிவர்கள் முன்னிலையில் எல்லாம் பசுக்களாய் விடுகின்றன.

முனிவர்களின் முன்னிலை போலவே விசேட புண்ணிய தலங்கள் புண்ணிய காலங்கள் என்றிவைகளும் அருட்சத்தி மேலிடுதற்கு உபகாரமான இடமும் காலமுமாம்.

★ ★ ★

'ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும், ஆதிமாண்பும், கேட்பானள வில்லை கிளக்க வேண்டா' என்பது சம்பந்தப் பிள்ளையின் அருள்வாக்கு.

ஆட்பாலவர் - திருவருளால் ஆளத்தக்க பக்குவர். அவர்களுக்கு இறைவன் அருளும் வண்ணம் இத்திறம் என்று அறுதியிட்டுக் கூறுதல் இயலாது. அத்திறத்துக்கு அளவே இல்லை.

★ ★ ★

புளியம்பொக்கணையில் இறைவன் நாகதம்பிரானைக் கோயில்கொண்டு எழுந்தருளியிருப்ப, நாகங்கள் பரிவாரங்களாய் அருட்பிரவாகத்தின் அமைதியைப் புலப்படுத்துகின்றன.

★ ★ ★

ஆறறிவு படைத்த மனிதன் நாகங்கள் மூலம் சாந்தநிலையைப் பயின்று எவ்வுயிரிலும் அன்புசெய்து நாகதம்பிரான் திருவருளுக்குப் பாத்திரம் ஆவான் ஆக.

புதுமையிற் புதுமை பேசும் புளியம்பொக் கணைப்பு ராணம்
மதிதவழ் வேணி யண்ணல் மகிழுமா பரணந் தன்னில்
அதிகமென் றுரைக்கு நல்ல *அரவுஇறைப் புராணமாகும்
விதிமுறை வழிபட் டோர்கள் விழைந்தன பெறுவர் மாதோ.

---

* அரவு இறை - நாகதம்பிரான்

## 10-2-1966 தொடக்கம் 11-2-1966 வரை புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோயிலுக்குச் செல்லும் பாதையை சிரமதான மூலம் அமைத்த நிர்வாகக் குழு

---

N. SOMAKANDHAN
Justice of the Peace for
Reg. No. 2000/07/WIAV
1/1, Park Road, C

**காப்பாளர்கள் :**

உயர்திரு. வீ. ஆனந்தசங்கரி, கரைச்சி கி. ச. தலைவர்
,, H. E. புள்ளைநாயகம், காரியாதிகாரி, கரைச்சி
,, அ. சிவசுந்தரம், J. P.
,, M. யோகலிங்கம், J. P.

தலைவர் : திரு. சி. சு. சின்னத்தம்பி, கி. சே. புளியம்பொக்கணை

உப-தலைவர் : M. சண்முகம், உப-தலைவர், ப. நோ. கூ. ச, புளியம்பொக்கணை

இணைக்காரியதரிசிகள் : திரு. இ. த. சுப்பிரமணியம், தலைமை ஆசிரியர்
திரு. க. சங்கரப்பிள்ளை, தலைமை ஆசிரியர்

பொருளாளர் : திரு. வே அருணாசலம், (இளைப்பாறிய உடையார்)

உப-பொருளாளர் : திரு. S. செல்லையா, 2-ம் யூனிற், முரசுமோட்டை

(அ) உணவுக்குழு
திருமதி வே. சிவபாக்கியம்
,, த. பசுபதி
,, ஐ. நாகமுத்து
,, சி. சின்னப்பிள்ளை
திரு. நா. வீரகத்திப்பிள்ளை
,, செ. தம்பிஐயா
,, கா. தம்பு
,, அ. வயிரமுத்து
,, மு. நல்லையா
,, சி. தம்பிப்பிள்ளை

(ஆ) பிரசாரக்குழு :
திரு. இ. த. சுப்பிரமணியம் (த. ஆ.)
,, சி. சு. சின்னத்தம்பி (கி. சே.)
,, M. வாரித்தம்பி (கூட். உத்.)

(இ) வாகனக்குழு:
திரு. S. K. ஐயம்பிள்ளை
,, A. வீரசிங்கம்
,, க. சடையர்
,, கா. செல்லையா
,, V. நடேசலிங்கம், J. P.
,, த. சண்முகம் (வெளிக்கண்டல்)
,, த. இரத்தினராசா

(ஈ) ஆயுதவசதிக்குழு :
திரு. வ. சின்னத்தம்பி
,, சி. தம்பிப்பிள்ளை
,, பொ. தனபாலசிங்கம்
,, T. குசைநாயகம், ஆசிரியர்

(உ) தொண்டர்களின் போக்குவரத்து வசதிக்குழு
திரு. இ. கிருஷ்ணராசா, கி. ச. அங்கத்தவர்
,, V. தனுக்கோடி ,, ,,
,, அ. வேலாயுதபிள்ளை ,, ,,
,, கா. நாகலிங்கம் ,, ,,
,, ஆ. கந்தையா
,, சி. கதிர்காமர்
,, க. பொன்னையா
,, க. சோமசுந்தரம், கி. ச. அங்கத்தவர்
,, S. காராளசிங்கம் ,, ,,

(ஊ) குடிதண்ணீர் வசதிக்குழு
திரு. க. சங்கரப்பிள்ளை, த. ஆசிரியர்
,, இ. பரஞ்சோதி, ஆசிரியர்

(எ) முதலுதவிக் குழு
திரு. சு. விநாயகமூர்த்தி (டாக்டர்)
,, ஆ. கந்தையா
,, N. தர்மலிங்கம்
,, மு. கார்த்திகேசு
,, பெ. பொன்னம்பலம்

(ஏ) உபசாரக்குழு
திரு. சி. சின்னத்துரை
,, V. S. கந்தையா
,, சு. ஜெயக்கொடி
,, கா. வே. கணபதிப்பிள்ளை
,, நா. நமசிவாயம்
,, நா. கோவிந்தபிள்ளை

(ஐ) மாதர் பகுதிக்குழு

செல்வி வே. பரமேஸ்வரி, ஆசிரியை
,, க. பரமேஸ்வரி ,,
,, ஆ. ஜானகி
,, சி. செல்லம்மா
திருமதி தெய்வானை

(ஏ) செயற்குழு உறுப்பினர்

திரு. வ. இராசையா
,, சி. மாயாண்டி
,, மு. செல்வரத்தினம்
,, சி. சிங்கராசா
,, ஆ. கந்தவனம்
,, சி. செல்லத்துரை
,, க. நாகலிங்கம்
,, P. ஆறுமுகம்
,, த. சின்னத்தம்பி
,, அ. ஐயாத்துரை
,, K. ஐயாச்சாமி
,, க. வயிரமுத்து
,, த. கணேஷ்

திரு. S. கதிரவேலு
,, சி. சிதம்பரப்பிள்ளை
,, சி. ஐயாத்துரை
,, இ. சித்திவிநாயகர்
,, க. சிவக்கொழுந்து
,, க. பொன்னம்பலம்
,, ஆ. கந்தையா
,, S. பரராசசிங்கம்
,, ப. சுப்பையா

உரிமையாளர் சித்திவிநாயகர் ஸ்ரோர்ஸ்

உரிமையாளர் கணேசா ஸ்ரோர்ஸ், பரந்தன்

திரு. S. பாலசுப்பிரமணியம் (கிளி)
,, R T. சோமசுந்தம்
,, வே. சுப்பிரமணியம், கி. ச. அங்.
,, கா. செல்லையா ,, ,,
டாக்டர் சு. விநாயகமூர்த்தி
திரு. சி. கணபதிப்பிள்ளை, உடையார்
,, மு. செல்வமாணிக்கம்

---

சபைக்கு அஞ்சி நடுங்கும் வித்துவான்களிடத்தில் கல்வியும், சபைக்கு அஞ்சாத மூடர்களிடத்தில் ஆரவாரச் சொற்களும், உண்டாதலினும் உண்டாகாமையே நன்று.


நன்மை தீமையைப் பகுத்தறியும் அறிவை மயக்கி அதுபயக்கும் ஒழுக்கத்தைக் கெடுத்தலால், கள்ளுண்டலே பாவத்துக்கெல்லாம் தலையாயது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

புளியம்பொக்கணை



சிறந்த சமூகத் தொண்டர்
கண்டாவளை கி. ச உறுப்பினர்
திரு. கு. ஐயம்பிள்ளை
(தம்பிராசா)



நாகதம்பிரான் ஆலய முன்புறத் தோற்றம்




10-2-66-ல் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய
சிரமதான விதியை ஆரம்பிக்குமுன் தொண்டர்கள்
பிரார்த்தனை செய்யும் காட்சி



சிறந்த சமூகத் தொண்டர்
கண்டாவளை கி. ச. உறுப்பினர்
**திரு. கு. ஐயம்பிள்ளை**
(தம்பிராசா)

புளியம்பொக்கணை



நாகதம்பிரான் ஆலய முன்புறத் தோற்றம்



10-2-66-ல் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய
சிரமதான வீதியை ஆரம்பிக்குமுன் தொண்டர்கள்
பிரார்த்தனை செய்யும் காட்சி



திரு. வீ. ஆனந்தசங்கரி (கரைச்சி கிராமசபை அக்கிராசனர்) உழவு மெஷினிலிருந்து தெருவை ''லெவல்பிளேட்'' போட ஆரம்பிக்கு முன் எடுக்கப்பட்ட படம். அமரர் திரு. கா. நாகலிங்கம் அவர்கள் (முரசுமோட்டை கி. ச. உறுப்பினர்) அருகில் நிற்கிறார்.

உ
சிவமயம்

எல்லோர் இதயத்திலும் அகலா இடம்பெற்ற
புளியம்பொக்கணை சிரமதானத் தொண்டர்

# சு. விநாயகமூர்த்தி (டாக்டர்)



தோற்றம்: 21-6-42 மறைவு: 20-7-70

1. அன்னாரின் ஆத்மா சாந்தியடைக.
— மலர் வெளியீட்டுக் குழு
2. சிறந்த கைராசிக்கார டாக்டர்.
— திரு. வி. ஆனந்தசங்கரி, பா. உ.
3. அற்புதமான வைத்தியர்.
— திரு. த. செல்லத்துரை, தலைவர் கரைச்சி இ.ச.
4. நல்ல பரம்பரை வைத்தியர்.
— திரு. சோ. அருணாசலம், காரியாதிகாரி, பச்சிலைப்பள்ளி.
5. மூர்த்தி ஒரு தெய்வப்பிறவி.
— திரு T. முருகேசபிள்ளை, உதவி அரசாங்க அதிபர்
6. நின் சேவையைப் பூவுலகில் மறக்க முடியாது.
— திரு. சி. சின்னத்தம்பி, கிராம சேவையாளர்
7. உன்னைப்போல் இனிஒருவர் என்று கிடைப்பாரோ?
— மீசாலை, சாவகச்சேரி, வட்டக்கச்சி, இராமநாதபுரம்
புளியம்பொக்கணை வாசிகள்.
8. செ. சிவப்பிரகாசம்
— தமிழ் தலைமைப் பண்டிதர், கொக்குவில் இந்துக்கல்லூரி
9. க. வே. அருணாசலம், உடையார்
10. பொ. வேலாயுதபிள்ளை, கிராமச் சங்க உறுப்பினர், இராமநாதர்

சிவமயம்

# அமரர் விநாயகமூர்த்தி நவமணி

க. வே. அருணாசலம் (உடையார்)

## ஆசிரிய விருத்தம்

நாமெலாம் போற்றுந் தெய்வ நாகதம் பிரானின் பாதம்
நாமெலாம் பணிந்து வாழ்த்தி நல்லின்பம் இனிது மேவ
நாமெலாம் நன்கு வாழும் புளியம்பொக் கணையா மூரில்
நாமெலாம் போற்றும் நல்ல வைத்தியன் தனையுங் கண்டோம்

தம்பிரான் பாதந் தன்னைத் தலைமிசை வைத்து வாழும்
நம்பிதான் இவனென் றோத நல்லபல் பணிகள் செய்தோன்
எம்பிரான் அருளே எல்லாம் என்றுதன் எண்ண மெல்லாம்
தம்பிரான் பணிக்கே வைத்த தனிப்பெருந் தியாக மூர்த்தி

சுப்பிர மணிய மென்று சொல்லும்நற் சொல்லின் செல்வன்
இப்புவி மீது செய்த இரும்பெருந் தவத்தால் வந்தோன்
தப்பிலா வைத்ய பூபன் தகுகுணம் பலவும் பூண்டோன்
ஒப்பிலா விநாயக மூர்த்தி என்றுபேர் ஓங்கும் நல்லோன்

தம்பிரான் சுவாமி தன்னைத் தன்மனந் தாங்கி வாழ்ந்தோன்
நம்பிவந் துள்ளோர்க் கெல்லாம் நயவுரை பலவுங் கூறி
உம்பிணி எதுவென் றாலும் உடனுடன் தீர்ப்பே னென்றே
தம்பணி தலைமேற் கொண்டு தகுவைத் தியங்கள் செய்தோன்

அருள் - பொறை அடக்கம் வாய்மை ஆராய்ச்சி அன்பு பண்பு
உருள்பெரு முள்ளங் கொண்டோன் ஓங்குநற் குணத்து மூர்த்தி
அருள்முறை அவனி வந்து ஆனந்த சங்க ரிக்கும்
தெருள்மனந் தெளிய நல்ல தேசியப் பணிகள் செய்தோன்

சமூகநன் மணியா மூங்கள் தந்தையார் போல என்றும்
சமூகநற் பணியே செய்தீர்; சங்கரன் தந்த வாழ்நாள்
சமூகநற் றொண்டுக் கென்றே சால்புட னுணர்ந்து வாழ்ந்தீர்
சமூகநற் போற்றல் பெற்றீர் தகும்விநா யகநன் மூர்த்தி

புளியம்பொக் கணையான் பாதப் புனிதநன் விழாவைக் காணப்
புளியம்பொக் கணையிலுள் ளோர் புனிதராய் நிற்கும் நாளில்
புளியம்பொக் கணையா னும்மைப் பொன்னுல கத்திருத்திப்
புளியம்பொக் கணையி லுன்றன் புகழெலாம் நிறுவி னானே

நாகதம் பிரானின் பாத நளினங்கள் வாழ்த்தும் நல்லோர்
நாகதம் பிரானின் பாத நல்லருள் பெறுதல் திண்ணம்
நாகதம் பிரான்மே லன்பு நன்குள அமர மூர்த்தி
நாகதம் பிரானி னுண்டு மகோற்சவம் வந்து காணீர்!

தோன்றிற் புகழொடு தோன்றலே நன்றெனும் தொன்மை மிக்க
ஆன்றமெய்ப் புலவோர் சொல்லும் அறவுரைக் காணி யானீர்!
வான்பதம் வாய்க்கப் பெற்றீர்! வளமுடன் வான நாட்டிற்
தோன்றவோ சென்றீர் மூர்த்தி! தோன்றிநீர் வாழ்க! வாழ்க!!

---

# அமரர் டாக்டர் மூர்த்தி

பொ. வேலாயுதபிள்ளை — கி. ச. உறுப்பினர் — இராமநாதபுரம்

### ஆசிரிய விருத்தம்

அன்பே யுருவாய் அருள்வடிவாய் அகிலம் துதிக்க வரும்முதல்வா
இன்போ டெவரும் மகிழ்வுறவே இனிதாம் பணிக ளியற்றினையே
பண்போ டெவர்க்கு முறுபிணிகள் பரிவாய் அகற்ற வல்லவனே
பொன்போல் மலர்ந்த திருமுகத்தைப் புவியிலினி மேற்காண் போமோ.

ஆர்மு செய்த அருந்தவத்தால் அவனி தலத்தி லவதரித்தாய்
பூர்வீ கத்தின் புணர்ப்பதனால் புவியோர் போற்றப் பணிபுரிந்தாய்
பேரூர் இராம நாதபுரம் பெரிதும் வருந்தி யழுதரற்றக்,
காரூர் கைலை மலைக்கிறைவன் கழலை யடைந்தாய் கதிபெறவே.

### வேறு

உளமகிழ் மதலை மொழிபகர் சிறுரோ டொப்பிலா ஆடவர் மகளிர்
பழவினைப் பயனு லடைந்திடு நோயைப் பரிதிமுன் னிருளெனப் போக்கி
அளவிலாப் புகழோ டரும்பொறை ஈகை யாகுநற் குணங்களைப் பூண்டு
மழவிடை யெனவே மாநிலம் போற்றும் மாண்பினேன் விநாயக மூர்த்தி.

---

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் வரலாற்றுச் செய்யுள்

செல்வி இரத்தினம் இந்திரவதனி
பாலபண்டிதை - பயி

## நேரிசை ஆசிரியப்பா

புளியம் பொக்கணைப் புனித ஊர்தனில்
வன்னியர் குலத்தில் வந்த பெருமகன்
கல்வி ஞானம் கருது பெருங்குணம்
நிரம்பப் பெற்ற நீதி நாயகம்
எனும்பெயர் தாங்கிய எழிலார் மகளுர்
கமலம் என்னும் காரிகை தன்னுடன்
இல்லற மென்னும் நல்லற மாற்றி
வாழ்வாங்கு வாழ்ந்து வந்தன ரெனினும்
மக்கள் இல்லாமை மனத்தை வருத்த
இறைவனை நாளும் இதயத் திருத்தி
வழிபா டாற்றி மனக்குறை தீர்க்க
முயன்றனர் முயன்று முன்னவ னருளால்
இருவர் மைந்தரை இன்புறப் பெற்றனர்
பெண்மக வில்லாப் பெருங்குறை வருத்த
பெரிதும் பெரிதும் பேணினர் அரனை
அவனரு ளாலே அடைந்தனர் பேறு
பங்குனித் திங்கட் பான்மதிப் பூரணை
உத்தர நன்னாளில் உலகோர் வியக்கப்
பாம்பொடு மகளும் பாரினில் உதிக்கப்
பெற்றனர் அன்றே பேணினர் அவரை
நாளும் பொழுதும் நன்கு காத்தனர்
மக்கள் தமக்கு மணவினை முடித்து
மகிழ்வோ டவர்கள் மாண்புடன் விளங்கத்
தம்மிட முள்ள தனத்தை யெல்லாம்
மூன்றால் வகுத்து முறையே கொடுக்க
பங்கு பெறாத பாம்போ சினந்து
பரபரப் படையப் பார்த்தனர் பெற்றோர்
விட்ட பிழையை விளங்கிப் பிரித்தனர்
தம்மிடம் உள்ள தனத்தை யெல்லாம்
நான்கு கூறாக்கி நால்வரும் பெற்று
மகிழச் செய்தது மாண்புறு செயலே


அரவின் உரிமை அளித்த பின்னர்
பாம்புக் கூட்டம் பதியை அடைந்தன
கும்மாள மிட்டன கூடிக் குலாவின
வீட்டிலும் வளவிலும் விளையாட் டயர்ந்தன
எங்கும் அரவு எங்கும் நிறைந்தன
அல்லல் புரிந்தன அன்னையை வருத்தின
ஏதும் புரியா இயல்பினைச் செய்தன
முற்றம் பெருக்க முயன்ற தாயை
சுற்றிச் சுற்றிச் சூழ்ந்து தடுத்தன
அரவின் அல்லல் அளவின் மிஞ்ச
தாயும் பொறுமை தாங்கா ளாகி
எங்கேனுந் தொலைந்(து) ஏகுமின் என்ன
பாம்புக ளெல்லாம் பதியி னகன்று
புதூரென் கின்ற பொற்பதி சேர்ந்தன
ஆங்கது கண்ட அன்புத் தந்தை
அரவுகள் தம்மை அழைக்க எண்ணினர்
செய்வ தறியாது திகைத்தனர் நொந்தனர்
கனவிடை ஒருநாள் காளிங்கன் தோன்றி
உன்னது நகரில் ஓங்கு மாலயந்
தன்னை நிறுவித் தானழைப் பாயேல்
வந்து சேர்வோம் வாழ்வும் தருவோம்
என்று மொழிய இன்புறு தந்தை
ஏகினர் புதூர் ஏகி யவணுறை
அரவுகள் தம்மை யன்போ டழைக்க
அரவுகள் தாமும் அன்புடன் வந்து
புளியம் பொக்கணைப் பொன்னகர் சேர்ந்தன
பிறந்த பதியைப் பேணி வந்தன
கூடி வந்தன நாடி மகிழ்ந்தன
பொங்கல் செய்து புதுவிழாக் கண்ட
பொக்கணை மாந்தர் புனித மாயினர்
கோயி லெடுக்கக் குறைவிலா நிதிபெற
ஊர்கள் தோறும் ஊக்கமாய்ச் சென்று
வேண்டிய பொருளை விரும்பினர் கொடுக்க
பெற்றே வந்து மடுக்கரை சேர்ந்தனர்
மடுக்கரை யிடத்தே வழியை மறித்து
இடுக்கண் செய்தனர் இங்குள உலாந்தர்
பூசை என்ன? பொருளும் என்ன?
வேஷம் என்ன வேடிக்கை தானென்ன
உங்கள் செய்கை பொருந்தா தென்ன

N. SOMAKANDHAN
Justice of the Peace for A
Reg. No. 2000/07/W/AI/ E
215 G 1/1, Park Road, Co

மிலேச்சராம் உலாந்தர் மிடுக்குடன் கூற
பூசகர் பணிந்து பூசையின் கருத்தை
தெள்ளிதின் விளக்கத் தெளியாத் தலைவன்
உலாந்தர் தலைவன் உரப்பிக் கூறுவான்
பாம்போ கடவுள் பாரைப் படைக்குமோ?
ஊரைக் காக்குமோ? உறுதுயர் நீக்குமோ?
பித்துக் கொண்டாயோ பேதாய் நீதான்
பாம்பை அழைப்பாய் பார்க்க நாங்கள்
செய்யிதை உடனே செய்யா யாகில்
சுட்டுக் கொல்வோம் துயரைத் தருவோம்
விரைந்து செய்க விரைந்து செய்க
என்றே கூறி எடுத்தனன் துவக்கை
அஞ்சாப் பூசகர் அரனைத் துதித்துக்
குளத்தில் மூழ்கிக் குழைத்து நீற்றை
நிறையப் பூசி நிமலனை நினைத்து
வளந்துப் பானையை வலமாய் வந்து
வெண்துகில் மடித்து விரும்பி யுள்ளே
இறையுணர் வோடிட்டு இறைஞ்சினர் மண்ணில்
இறைஞ்சிய பூசகர் எழுந்து நின்று
மண்ணும் விண்ணும் மாறி மாறித்
தொழுது தொழுது தோத்திரம் சொல்லிப்
பானையைப் பார்த்தார் பக்கமும் பார்த்தார்
நின்றோர் பார்த்தனர் நெடிது பார்த்தனர்
ஐந்தலை நாகம் அரவின் அரசன்
மெல்ல எழுந்து விரித்தனன் படத்தை
கண்டவர் நம்மவர் கருத்துடன் கூப்பினர்
தம்பிரா னென்னத் தகுமொழி சாற்றினர்
நிலத்தில் வீழ்ந்தனர் நெடிது வணங்கினர்
காப்பாய் பிரானே காப்பாய் பிரானே
குறைதவிர்த் தெம்மைக் கொள்வாய் பிரானே
மறவோம் நாமே மறவோம் நாமே
என்றன ராய்நமர் இறைஞ்சி நிற்க
அதிசயங் கண்ட அறியா மிலேச்சன்
பயந்தனன் ஒடுங்கினன் பதைத்தனன் பாரில்
விழுந்தனன் எழுந்தனன் விம்மிதம் உற்றனன்
பாம்பை வணங்கினன் பாரை வணங்கினன்
பூசகர் தாளைப் பொருந்த வணங்கினன்
சுற்றி நின்ற தொண்டரை வணங்கினன்
ஆடினன் பாடினன் அரற்றினன் அரவை

ஐந்தலை நாகம் அவனைப் பார்த்தது
அறியாது செய்த அரும்பிழை பொறுக்க
வேண்டினன் கூப்பினன் மிக்க விருப்புடன்
வெள்ளியாற் செய்து விளங்கும் அரவைக்
காணிக்கை யாக்கியும் கனத்த பொன்னை
ஆலய மமைக்க அன்பொடு வழங்கியும்
தன்னது அன்பைத் தருமுறை செலுத்தியும்
பூசகர் தொண்டர் பொருந்திய பிறரையும்
வணங்கி வாழ்த்தி வழியனுப் பினனே
தன்னூர் போயும் தலைவன் உலாந்தன்
தம்பிரான் பெருமை தக்கவா றமையத்
தானும் சுற்றமும் தழைத்தற் பொருட்டு
ஆண்டாண்டு தோறும் அன்பளிப்புச் செய்தே
வந்தன னென்பர் வழிமுறை வந்தோர்
நாக தம்பிரான் நல்லருள் புரிதலால்
பல்வகை வளனும் பெற்றே பாரில்
சிறந்த பதியாய்ச் சீர்மை யோங்கி
கற்பகப் பதியெனப் பொற்பமை பதியாய்
காசினி போற்றப் புளியம் பொக்கணை
மக்களை யீர்த்து மகிழ்வு கூட்டி
வினையை ஓட்டி வேண்டிய நல்கிப்
புதுமை காட்டிப் புண்ணியர் ஆக்கி
தொழுபவர் துன்பம் துடைத்துக் காத்து
தம்பிரான் நம்பிரான் தண்ணருள்
தலைக்கூட்டி நிற்கும் தன்மைதான் என்னே.

வணக்கம்



செல்வம் முதலியவற்றினால் செருக்கு அடைந்து, முன் உன்னோடு பயின்ற சினேகிதரை மறந்து விடாதே.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

உ

சிவமயம்

# ஸ்ரீ நாகதம்பிரான் கும்மி.



— சி. நளாயினி —
( கோமதி )


கும்மியடி பெண்ணே கும்மியடி — நல்ல
கோல அருள்பாடிக் கும்மியடி;
எம்மிறை தம்பிரான் என்றுநாம் — பாடிட
எல்லோரு மாய்வந்து கும்மியடி. 1

நாகதம் பிரானெனக் கும்மியடி — நல்ல
நாத னவனெனக் கும்மியடி;
ஏகநா யகனெனக் கும்மியடி — அவன்
எங்கள் குலதெய்வம் கும்மியடி. 2

தம்பிரா னேயென்று கும்மியடி — பெண்ணே
தலைவ னவனென்று கும்மியடி;
நம்பினோம் வாவென்று கும்மியடி — நல்ல
நாத னவனெனக் கும்மியடி. 3

எக்கணந் தானுமே எங்களிடம் — வந்து
இன்னருள் செய்குவன் கும்மியடி;
மிக்கநல் லருள்பொழி தம்பிரா — னைப்பாடி
விரும்பிநின் றுடியே கும்மியடி 4

பாகம்பாம் புடையவன் கும்மியடி — அவன்
பரம னெனப்பாடிக் கும்மியடி;
நாககங் கணனெனக் கும்மியடி — அவன்
நாகதம் பிரானெனக் கும்மியடி. 5



10-2-66 முதலாம் நாள் திரு. H. B. புள்ளேநாயகம் காரியாதிகாரி குத்துவிளக்கேற்றி 2000 தொண்டர் மத்தியில் உரையாற்றி ஆரம்பிக்கின்றார்.

இடமிருந்து வலம்: திரு. மு. யோகலிங்கம் J. P., திரு. க. இராமச்சந்திரன் (தபால் நிலையத் தலைவர்), திரு. க. சங்கரப்பிள்ளை (செயலாளர்), திரு. S. S. சின்னத்தம்பி (ஷி. இயக்கத் தலைவர், கிராம சேவையாளர்), திரு. வி. ஆனந்தசங்கரி (கிராம சபைத் தலைவர்), திரு. M. சண்முகம் (உப தலைவர்), திரு. K. சோமசுந்தரம் (சுகாதாரப் பகுதித் தலைவர்)



11-2-66-ல் மாலை முன்னைநாள் கரைச்சி கிராம சபைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்களும் தற்போதைய தலைவர் திரு. கா. செல்லையா அவர்களும் இ. மு. சங்கச் செயலாளர் திரு. வே. மயில்வாகனத்துடனும் ஏனைய தொண்டர்களுடனும் தெரு வேலையைப் பார்வையிடுகின்றனர்.

# நாவலரின் நாவன்மை

**ஆர். ரி. சுப்பிரமணியம்**
அதிபர், குமரபுரம், பரந்தன்



ஒரு மாசி மாதம் பகல் முழுவதும் வெய்யில் இரவு பொல்லாத பனி. ஓர் அறிஞர் உடன்வர நாவலர் அவர்கள்—ஆம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தான் சென்று கொண்டிருந்த சமயம், அறிஞர் நாவலர் அவர்களை நோக்கி ''ஐயா பொல்லாத பனி'' என்றார். இதனை அநுவதித்த நாவலர் அவர்கள் ''பனிக்காலம் நன்று'' என்று ஓர் சிலேடை வசனம் மொழிந்தார். நன்று பனிக்காலம், என்றியம்பி ஆச்சரியத்தை வெளிக்காட்ட எண்ணிய அறிஞரை விளித்து நாவலர் ''பனிக்கு+ஆலம்+நன்று'' என்று விளங்கக் கூறினர் (ஆலம்-நஞ்சு; பனியிலும் பார்க்க நஞ்சு நன்று; சகிக்கத்தக்கது).

நாவலர் அவர்கள் ஆதீனங்களுக்கு எழுந்தருளுகின்றார் என்றால் இந்தியாவில் ஆதீனகர்த்தாக்களுக்கு குலைநடுக்கம் ஏற்படும். அநீதியைச் சுடச் சுடக் கண்டிப்பார் நாவலர். நாவலர் வருகிறார் என்றால் ஆதீனங்கள் மடங்கள் சுற்றுப்புறங்கள் அனைத்தும் புனிதமடையும். பாத்திரங்கள், தளபாடங்கள்கூட மினுக்கமடையும்.

மகேசுர பூசையென்றால் அன்னதானம் என்று வையுங்கள். நாவலர் பந்தியில் இருக்கின்றார், முருக்கங்காயும் பரிமாறப்பட்டது. யாழ்ப்பாண வழக்கின்படி எங்கள் நாவலர் ஐயா அவர்கள் முருங்கக்காய்தோலை ஈற்றில் முறைப்படி சப்பிச் சுவைத்து உமிழ்ந்து அப்புறம் வைத்தார்.

ஏதோ சபைப்பழக்கம் தெரியாத மகான் என்ற பார்வை தொனிக்க ''என்ன ஐயா! நாவலர் அவர்களே'' என்று ஒரு இந்திய மேதை குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்திலே முருங்கக்காயை 14 வகையாகப் பாகம் பண்ணுவர். துண்டல்களின் ஓர் ஓரத்தை பொரித்தும், மற்றப்பக்கத்தை மஞ்சளில் தோய்த்தும் பாகம் பண்ணுவர். இங்கு பாகசாஸ்திர முறை எவ்வளவு முன்னேறியுள்ளது என்பதை பக்கம் பக்கமாக சப்பியும் வித்தியாசமே தெரியவில்லையே! என்று வந்தது நாவலர் விடை.

தோட்டத்தில் ஓர் வாய்க்கால், நாவலர் பிறிதொருவருடன் செல்லும்போது நீர் விழும் தொனி கேட்கின்றது.

என்னை விழும் தூம் என்று நாவலரை நோக்கி கேட்கப்பட்டதாம். தூம்—தொனிக்குறிப்பு ''நீர் விழும் தூம்'' என்று அறைந்தாற்போல்

விடை நாவலரின் திருவாய் நின்று வெளிக்கிளம்பிற்றும். ''என்னை விழுந்தூம்பு'' என்று நாட்டுப்பேச்சில் வரும் வழக்கை கவனிக்க வேண்டும்.

நாவலர் வந்தார் என்றால் அவர் பின்னால் ஒரு அறிஞர் கூட்டம் திரளும். இந்தியாவில் பெருங்குடியர் என்ற வமிசத்துதித்த ஒரு நாவலருக்கு எமது நாவலர் சிஷ்ய கோடிகள் புடைசூழ நடமாடுவது கொஞ்சமும் சகிக்க முடியவில்லைப் போலும். நாவலர் அவர்கள் அறிஞர்கள் புடைசூழ வருவதைக் கண்ட பெருங்குடி நாவலர் என்ன ஐயா சீசாக்களுடன் வருகிறீர் என்று தன் வேக்காட்டை வெளிக்காட்டினார்.

பெருங்குடியரிடம் வரும்போது சீசாக்களுடன் வருவதுதானே முறை —என அறைந்தார் எம் நாவலர். (சீசா-போத்தல்)

நாவலர் அவர்கள் அதிகாலையில் சுமார் நான்கு மணிக்கே எழுந்து விடுவார். கடற்கரையோரம் அதிகாலையில் உலாவப்போவது அவர் வழக்கம். ஒரு உத்தமர் கப்பல் வைத்து வியாபாரம் செய்து வந்தார். இவரின் கப்பல் யாழ்ப்பாணத் துறையில் பொருட்களை இறக்குவதற்காக நங்கூரம் இடப் பட்டிருந்தது

இந்த உத்தம குணசாலியான வணிகருக்கும் வியாபார முறையில் வைரிகள் இருந்தனர். கூலிக்கமர்த்தப்பட்ட ஒருவன் அக்கப்பலுக்கு தீ மூட்ட ஒருப்பட்டிருந்தான். கரையிலிருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் உள்ள கப்பலுக்கு தி மூட்டிவிட்டு வருவதாயின் இரவு 12 மணிக்கே புறப் படவேண்டும். இக்கூலியாள் கொஞ்சம் பிந்தியமையால் கப்பலுக்கு தீ மூட்டி விட்டு கடலுக்கூடாகவர—நேரம் போய்விட்டது. கரையில் உலாவச் சென்ற நாவலர் கண்களில் பட்டுவிட்டான். நாவலர் கண்டபோது சந்தேகக் கண்ணுடன் நோக்கவில்லை. ஆனால் அவனோ விரைந்தான். கடற் பக்கம் பார்த்தபோது கப்பலிலிருந்து தீயெழுவது தென்பட்டது.

நீதித்தலம், நீதிபதி ஒரு பறங்கி. காசிப்பட்டும் உருத்திராக்கமும் பூண்ட நாவலர் ஐயா அவர்கள் ஒரு முக்கிய சாட்சி. அவர் கூண்டில் நிற்கிறார். விசுவாசப் பிரமாணம் ஆங்கிலத்தில் மொழிந்தார் நாவலர். மேற்கொண்டும் நாவலர் நீதிபதிக்குப் புரியும் மொழியில் ஆங்கிலத்தில் சாட்சியமளிக்க முயன்றார். ஆனால் இவரின் உடை நிறம் நீதிபதிக்கும் பிடிக்கவில்லைப்போலும். தமிழில் சொல்லும்படியும் அதை ஆங்கிலத்தில் முதலியாரை மொழி பெயர்க்கும்படியும் நீதிபதி கட்டளையிட்டார்.

ஆதித்தன் உதிக்க நானாழி நிற்புழி அடியேன் காலோட்டக் கடற்கரை புக்குழி என்று ஆரம்பித்தது நாவலரின் சாட்சியம். புரியாமொழியாயிற்று.

சூரியன் உதிக்க நான்கு நாழிகை இருக்கும்போது நான் காற்றை உள்ளுக்கு இழுத்து வெளிவிட கடற்கரை போனபோது—என்ற கருத்தமைந்த வசனம் நாவலர் தருணம் அறிந்து கடும் சொல்லில் பொழிந்தது. முதலியாருக்கு ஒன்றுமே புரியவில்லை. பாவம் பரிதவித்தார். இந்த திண்டாட்டத்தினைக் கண்ட நீதிபதி ''மொழி பெயரும்'' என்றார். முதலியார் தெரியவில்லை என்றார். ஏன் தமிழ்தானே பேசுகிறார் என்று நீதிபதி சொல்ல,

அது கடுமையான தமிழ் என முதலியார் வாயைப்பிளந்தார். பின்பு நாவலரை ஆங்கிலத்தில் பேசும்படி நீதிபதி வேண்டினர். ஆனல் அவர் மறுத்து விட்டார்.

'வாங்கா' என்பது காற்ரேட்டத்தைக் கூட்ட நீதிபதியின் மேல்—கூரையில் இருந்து தொங்கும் ஓர் பலகை போன்ற விசிறி. கயிற்றுடன் இணைக்கப்பட்ட அதை இழுப்பவனுக்கும் அரசினர் வேதனம். இது அக்காலம்.

நாவலரிடம் முறைப்படி பாடம் கேட்ட மயில்வாகனம் என்பார். "வாங்கா" இழுக்கும் பணியில் அங்கு இருந்தவர்.


அவரைக் கண்ட நாவலர் இவனைக் கொண்டு வேண்டுமானல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கலாம் என்று கூறினராம். அவரின் மாணவன் தற்காலிக மொழிபெயர்ப்பாளனகி பின்பு உயர்வு பெற்றதாக ஓர் கதை. (இஃது பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கூறக் கேட்கவல்லவோ வேண்டும்).

(சிவசக்தி—ரேயல் கல்லூரி ஆண்டுமலர் 1969)

---

கல்வுக்குப் பயன் அறிவும். அறிவுக்குப் பயன் ஒழுக்கமுமாம். ஆதலால், தம் வாழ்நாள் முழுவதும் சிவ நிந்தை, குரு நிந்தை, சிவனடியார் நிந்தை, வேதாகம நிந்தை, சிவத்திரவியங் கவர்தல், கொலை, களவு, புலாலுண்ணல், கள்ளருந்தல், பிறர்மனை விழைதல், வரைவின் மகளிர் விழைதல், பொய், அழுக்காறு, புறங் கூறல், செய்ந்நன்றி மறத்தல் முதலாகிய பாவங்களை ஒழித்து; சிவத்தியானம், சந்தியாவந்தனம், பஞ்சாக்ஷர செபம், சிவபூசை, தமிழ்வேத பாராயணம், சிவாலய சேவை, மகேசுர பூசை, தீக்ஷாகுரு, வித்தியாகுரு. தந்தை, தாய், தமையன் முதலிய பெரியோர்களை வழிபடுதல், இரக்கம், பொறை, அடக்கம் முதலாகிய புண்ணியங்களையுடையராய் ஒழுகுக.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்





சிவமயம்

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆண்டுற்சவ மலர்க்குழு

ஆர். ரி. சுப்பிரமணியம்
(தலைமை ஆசிரியர்)
தலைவர்

சி. சு. சின்னத்தம்பி
(கிராம சேவையாளர்)
செயலாளர்

## போஷகர்கள்

1. உயர்திரு. வீ. ஆனந்தசங்கரி (நாடாளுமன்ற உறுப்பினர்)
2. ,, அ. அருணாசலம் (இளைப்பாறிய உடையார்)
3. ,, க. செல்லையா (கி. ச. தலைவர்)
4. ,, த. செல்லத்துரை (முன்னாள் கி. ச. தலைவர்)
5. ,, இ. யோகநாதன் (காரியாதிகாரி, கிளிநொச்சி)
6. ,, சோ. அருணாசலம் (காரியாதிகாரி, பளை)
7. ,, அ. சிவசுந்தரம் J. P. (முன்னாள் நா. உ., கிளிநொச்சி)

## உப தலைவர்கள்

1. திரு. ஆர். ரி. சோமசுந்தரம்
2. திரு. வே. சுப்பிரமணியம்
3. ,, க. சங்கரப்பிள்ளை
4. ,, நா. வீரகத்திப்பிள்ளை
5. ,, செ. கந்தையா
6. ,, ந. வேலுப்பிள்ளை
7. ,, இ. கிருஷ்ணராஜா
8. ,, ப. நவநீதராசா
9. ,, A. வீரசிங்கம்
10. ,, K. வேலுப்பிள்ளை (பதிவுகாரர்)
11. ,, சி. கதிர்காமர்
12. ,, எஸ். செல்லையா (2-ம் யூனிற், முரசுமோட்டை)

துணைச் செயலாளர்: திரு. சி. செ. அச்சுதம்பிள்ளை (பச்சிலைப்பள்ளியூரான்)

பொருளாளர்: திரு. கு. ஐயம்பிள்ளை (தம்பிராசா) கி. ச. அ.

உப பொருளாளர்: திரு. த. இரத்தினராசா

## நிர்வாக ஆலோசகர்கள்

1. உயர்திரு. தி. முருகேசபிள்ளை A. G. A.
2. உயர்திரு. M. யோகலிங்கம் J. P.
3. ,, S. K. வேலாயுதபிள்ளை (காந்தி நிலையம்)
4. ,, த. மகாலிங்கம் G. S.
5. ,, S. K. இரர்சையர் G. S.
6. ,, K. நல்லையா G. S.
7. ,, கு. கந்தசாமி G. S.
8. ,, மு. கார்த்திகேசு

## நிர்வாகக் குழு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | திரு. | நா. சோதிநாதன் | 2. | திரு. | வே. மயில்வாகனம் |
| 3. | ,, | சி. சிதம்பரநாதர் (கி.ச. அ.) | 4. | ,, | வ. செல்லத்துரை |
| 5. | ,, | அ. வயிரமுத்து | 6. | ,, | ந. சுப்பிரமணியம் |
| 7. | ,, | க. சிவக்கொழுந்து | 8. | ,, | சி. செல்லையா |
| 9. | ,, | மு. செல்வமாணிக்கம் | 10. | ,, | சி. கதிர்காமநாதன் |
| 11. | ,, | மூ. செல்வரெத்தினம் (கி.ச.அ.) | 12. | ,, | K. கதிர்காமர் |
| 13. | ,, | அ. புஷ்பராஜா | 14. | ,, | இ. மாயாண்டி |
| 15. | ,, | இ. குணரத்தினம் (கி.ச.அ.) | 16. | ,, | வ. சின்னத்தம்பி (குருக்கள்) |
| 17. | ,, | க. நாகலிங்கம் | 18. | ,, | அ, வேலாயுதம் |
| 19. | ,, | சி. சிவகுரு | 20. | ,, | நா. க. கந்தையா |
| 21. | ,, | V. S. கந்தையா | 22. | ,, | மு நல்லையா |
| 23. | ,, | K. சடையர் | 24. | ,, | சி. தம்பிப்பிள்ளை |
| 25. | ,, | சி. கணபதிப்பிள்ளை உடையார் | 26. | ,, | M. குமாரவேலு |
| 27. | ,, | வ. சரவணமுத்து கி. ச. அ.) | 28. | ,, | V. கந்தையா (கி. ச. அ.) |
| 29. | ,, | சி. பொன்னுத்துரை (கி. ச. அ.) | 30. | ,, | சி. சிதம்பரப்பிள்ளை (இ. ச. அ.) |
| 31. | ,, | எஸ். காராளசிங்கம் | 32. | ,, | த, சண்முகம் |

## கணக்குப் பரிசோதிகர்கள்

திரு. இ. இரத்தினவிநாயகர்
திரு. பொ. தனபாலசிங்கம்

---

பிறர் பொருளானது, உடல், உயிர் இரண்டிற்கும் ஊறு செய்தலால், உடல் ஒன்றிற்கே ஊறு செய்யும் விஷத்திலும் கொடியதாம்.

நீ உன் உடம்பை வளர்த்தற்குப் பிறிதொன்றின் உடம்பை உண்பையாயின், எவ்வகையால் அருள் ஆளுவை?

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

உ

# பெருமானுடைய அற்புதங்கள்

## தன் அடியாரைத் தண்டித்து இரட்சிக்கும் பான்மை

— செல்வி பரமேஸ்வரி கனகசபை — கண்டி —



நாகேசுவர வித்தியாசாலை என நாகதம்பிரான் பெயரால் நிறுவப்பட்ட அவ்வூர் சைவப் பாடசாலையில் 1-1-64 முதல் ஐந்து வருடகாலம் ஆசிரியையாக — முதல் ஆசிரியையாக — பணியாற்றும் பேற்றைப் பெற்றிருந்தேன். அங்கு அதிபராக திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் அவர்கள் சேவை புரிந்தார். சைவசமய அபிவிருத்தியிலும் சமூக காரியங்களிலும் ஆர்வத்துடன் பணிபுரிந்த ஆசிரியர் அவர்களின் தூண்டுதலாலும் போதனையாலும் அடியேனும் பல மாணவ மாணவியரும் பெற்றோரும் நாகதம்பிரானின் சந்நிதியில் சமயதீட்சை பெற்றோம். சமய வாழ்வைப் பின்பற்றினோம். கடவுட்பக்தி கூடியது. சைவ மணம் பிரவாகித்தது. கூட்டுப் பிரார்த்தனை வழிபாடு ஆற்றினோம். மாணவ மாணவியரும் பெற்றோரும் கீரிமலை, திருக்கேதீஸ்வரம், புதூர் நாகதம்பிரான் முதலாய பல பல தலங்களுக்கும் அதிபர் அவர்களுடன் சென்றோம்.

1966-ம் ஆண்டு ஒரு தினம் கோயிலில் மணவாளக்கோல விழா. மறுநாட் பாடசாலை. ஆகவே திருவிழாவை முன்னிட்டு மாலை 5 மணியளவில் புளியம்பொக்கணைச் சந்தியில் இறங்கினேன். ஆசிரியரவர்களும் கூடவந்தார்.

கல்வாரிக் கமத்தடியில் வரும்போது அன்றிரவு மணவாளக் கோலம் என்றும் நேரடியாகக் கோயிலுக்குச் செல்வது நல்லது என்றும் கூறினேன். தேகநிலை சரியில்லை என்றும் அன்று தான் ஸ்நானம் செய்யவில்லை என்றும் கூறியவர் தான் கோயிலுக்கு வரமாட்டேன் என்று கூறினார். நீங்கள் வராவிடில் நானும் போகவில்லை என்று நான் சொல்ல அவர் "நீ போகில் போ. விடுகில் விடு. நான் வரமாட்டேன்" என்று மீண்டும் கூறிய அவர் தன் வசனத்தை முடிக்கு முன்பே ஒரு சிறிய உத்தமமான பளபளக்கும் நாக சர்ப்பத்தின்மீது — மிதித்து — தீண்டப்பட்டு — குதித்து முன்னேறினார். பாம்பைக் கண்டோம். அதுவும் ஆறுதலாகத்தான் சென்றது. பாம்பை அடிக்க ஆசிரியர் விடவுமில்லை அச்சர்ப்பத்தின் தோற்றம் படம், ஒளிமிகு கண்கள் இன்றும் என் கண்முன் நிற்பதாகத் தோற்றுகின்றது. எமக்கோ பெருந்துயரம். ஆனால் ஆசிரியர் துயரப்படவில்லை. "நல்ல தண்டனை. அவ்வளவு கவனமாக உடனே தண்டிக்கப்பட்டது நூதனம், உடையவன் தண்டித்தால் நாம் என்ன செய்ய முடியும்" என்று கூறி தனது முன்னைய முடிவை மாற்றிக் கோயிலுக்கு வந்து "விஷங் கலைத்திடின் உடனே ஸ்நானஞ் செய்வது தக்கதன்று எனக் கூறப்பட்ட யோசனை" யையும் நிராகரித்து கோயிற் கிணற்றில் மூழ்கி, ஆசார சீலராகி, உருத்திராட்ச மணிந்து வழிபாடு முடித்து கடிவாய்க்கும் வீங்கிய வலப் பாதத்திற்கும் விபூதி — சந்தனம், வில்வம் முதலியனவற்றையே ஔடதமாகப் பிரயோகித்து பெருமானைத் தியானித்து அன்றிரவு முழுதும் கோயிற் பணி பூண்டொழுகினார்.

மறுநாள் பாடசாலையில் பல பெற்றாரும் அக்காலத்தில் எம்முடன் கடமையாற்றிய திரு. ஆ. முத்துக்குமாரு அவர்களும் (புராண விரிவுரையாளர்) திருமதி தங்கம்மா, சிவபாத சுந்தரஞ் செட்டியார் அம்மா அவர்களும் பிறரும் குழுமி ஆசிரியர் அவர்களைப் பார்வை பார்க்கும்படியும் ஏற்ற மருந்து உட்கொள்ளும்படியும் (அவ்வூரில் சிறந்த விஷகடி வைத்தியர்கள் உள்ளனர்) வேண்டினோம். ஆசிரியர் உறுதியாக மறுத்து சிவநின் மாலியங்களையே ஔஷதமாகப் புரோட்சிக்க ஒருப்பட்டனர். ஆனால் எல்லாரும் ஆச்சரியப்படக்கூடிய வகையில் விரைவில் அவருடைய வீங்கிய கால் குணமடைந்தது. அவ்வூரே மகிழ்ந்தது.

சுமார் ஒரு மாசம் செல்ல — அவருடைய சிரேட்ட மகன் டாக்ரர் மூர்த்தி அவர்கள் "விஷம் கலைத்தால் விஷபேதி குடிக்க வேண்டும் அதுவும் ஒரு மாசகால எல்லையில் தவறாது குடிக்க வேண்டும்" என்று கூறினார். தன்னுடைய மகனாரில் நிறைந்த பற்றும், அவருடைய வைத்திய முறையில் மிகுந்த அபிமானமும் உடையவர் ஆசிரியர் அவர்கள். ஆகவே மகனுடைய இஷ்டப்படி மறுதினம் விஷபேதியைக் காலையில் குடித்தார். பேதி மருந்து அவரை வாட்டி வதைத்தது. பலமுறை வயிற்றோட்டம் தொடர்ந்து ஏற்படவே பகல் பன்னிரண்டு மணியளவில் கண்கள் ஒளியிழந்து, சோர்ந்து இயக்கம் அற்று அறிவு குறையும் நிலைமையும் ஏற்பட்டது. அனைவரும் அஞ்சினோம். அனைவரும் பதறினோம். அக்காலம் வட்டக்கச்சியில் கடமை புரிந்த அவர்மகன் டாக்ரர் மூர்த்திக்கு உடன் தெரிவிக்கப்பட்டு அவரும் அவரது வைத்தியப் பணியாளரும் விரைந்து வந்துகொண்டிருக்கும்போது "இப்போதுதான் புரிகிறது. இனி மாறும்" என்று தடுமாறிக் கூறிய ஆசிரியர் கோயில் விபூதியை அந்த நிலையில் எடுப்பித்துப் பூசினார். "விஷம் கலைத்தபோது ஒருவரின் மருந்தும் தேவையில்லை என்று என்னையே தஞ்சம் என்று நம்பிய நீ — சுகமாகி — ஒருமாச காலமானதன் பின்பு உன் மகன் கூறியதும் நான் வைத்தியநாதன் என்பதையும் மறந்து அவர் மருந்தை நாடினீரா" என்று எனக்கு எம் பெருமான் ஞானோதயம் ஏற்படுத்தினார் என அவர் மகன் சமூகத்தில் யாவருக்கும் விளக்கினார்.

அனைவரும் மெய்சிலிர்த்து — மகிழ உடன் அவர் குணமடைந்தார். வயிற்றோட்டம் உடன் நின்றது. இப்படியாக பல நிகழ்ச்சிகள் அங்கு நாம் அவதானித்தோம். இக் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக — வெளிப்படையாக — பல நிகழ்ச்சிகள் மூலம் கிருபை செய்யும் பெருமானை அனைவரும் வணங்கி நன்மையடைவோமாக.

வணக்கம்.

> நன்மை செய்தற்குச் சமயம் வாய்க்கும் பொழுது செய்யா தொழிவையாகில், பின் ஒரு காலத்தில் அது வாய்ப்பது அரிது.
>
> — ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

# அறிவியலும் அரும் சைவமும்

புலோப்பளையூர் ம. குமாரவேல்

—(  )—

இன்று நாம் அறிவியல் உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நாளுக்கு நாள் நாம் புதுவிதமான செய்திகளைக் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். இதனால் உலகிலே இரு சார்புக் கொள்கை படைத்த மனிதர்கள் வாழுகின்றார்கள். ஒரு சாரார் விஞ்ஞானம் என்றதும் சந்தேகக் கண்ணுடன் நோக்குகின்றனர். இனி விஞ்ஞானம் கற்ற ஒரு சிலர் சமய வாதத்தைத் தூற்றுகின்றனர். சமயம் என்பது வெறும் மூட நம்பிக்கை என்றும், ஒரு சிலர் பிழைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட தந்திரங்கள் என்றும் கூறுகின்றனர். இவ்வாறு இருசாராரும் ஒருவரை யொருவர் புரிந்து கொள்ளாமல் பகைத்து நிற்கின்றனர். விஞ்ஞானமும் சமயமும் ஒன்றிற்கொன்று பகையானவையல்ல, சமமானவையே. எதையும் ஆராய்ச்சிக் கண்கொண்டு அறிவியல் கல்வி பயிலும் இளைஞர்கள் ஏன்? எப்படி! என்று ஆராய முற்படுவது விந்தையல்ல, தகுந்த ஆதாரங்கள், விளக்கங்கள் இன்மையால் நம்ப மறுக்கின்றனர். அவர்கள் தகுந்த பக்குவ நிலையடைந்து விளக்கம் பெற காலத்திற்குக் காலம் சமய அறிஞர்கள் தக்க ஆதாரங்கள் கொடுத்து விளக்கம் காண்பிக்க வேண்டும்.

நமது இந்து சமயம் பழமைக்குப் பழமையாகவும்—புதுமைக்குப் புதுமையாகவும் இலங்குகின்றது. விஞ்ஞான உண்மைகள் பலவற்றை அது தன்னகத்தே உள்ளடக்கியுள்ளது. நமது சமய உண்மைகள் யாவும் அக உணர்வு படைத்த மெஞ்ஞானிகளால் நமக்கு காலத்திற்குக் காலம் அளிக்கப்பட்டன. இவை காலக் கருத்து வெள்ளத்தில் மறுக்கப்பட்டோ அளிக்கப்பட்டோ விடுவதில்லை; விஞ்ஞானப் புதுமைகள் பலவடிவங்களில் மாற்றமடைந்து புதிய வடிவம் பெறுகின்றது. காலப் போக்கில் ஏற்பட்ட சில மாற்றங்களினால் நமது சமயத்தில் சில மூடக் கருத்துக்கள் இடம்பெற்றிருக்கலாம். அறற்றைச் சமய உண்மைகள் என்று மயங்கி குறைகூறுவது மகா தவறு. அருவமும் - உருவமுமாகி — அநாதியாய் பலவாய் நிற்கும் எமது இறைவன் அடியவர்கள் நினைத்த வடிவத்தில் காட்சி கொடுத்து ஆட்கொள்ளுகின்றான். எவ்வெவ் வடிவங்களில் வந்த பொழுதும் இறைவன் ஒருவனே. பல நதிகள் கிளைகளாகப் பிரிந்தாலும் இறுதியில் கடலிலே சங்கமித்து ஒன்றுதல்போல இறைவனைப் பலவழிகளிலும் அடைவதற்கு சமயங்களும், வழிபாடுகளும் வழிவகுத்துள்ளன. இவ்வுண்மையை உணராது இன்று நம்மிடையே இளைஞர்கள் மட்டுமல்ல, பெரியோர்களும் கூட ஓயாத வாதங்களில் ஈடுபட்டு மயங்கி நிற்கின்றனர்.

பொருள் ஒன்று — உருவங்கள் பல. உருவத்திற் கேற்பப் பெயர்களும் பல. இவ்வுண்மையை இளைஞர்களாகிய நாம் எமது உள்ளத்தில் பதித்தல் வேண்டும். எப்படி தெளிவுபடுத்தலாம்! உதாரணமாக நாம் கண்ணாடித் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் அங்கு என்னென்ன வடிவங்கள் தோன்றுகின்றன, கூசா, போத்தல், மூடி. மின்குமிழ், கோப்பை, கிளாஸ். இன்னும் எத்தனையோ பொருட்களாகக் காணலாம். இவைகள் வடிவங்கள் வேறுபட்டாலும் இடப்பட்ட பெயர்கள் வேறுபட்டாலும், வண்ண வேலைகளில் மாறுபட்டாலும் உற்பத்திப் பொருளில் ஒன்றுபட்டே இருக்கின்றது. ஆம்! மண்ணை உருக்கி இத்தனை வடிவங்களும் சமைக்கப்பட்டுள்ளது.


இதைப் போன்று எமது சமயத்திலும் வெறும் உண்மையை மட்டும் உபதேசியாது அவ்வுண்மைகளைப் பலதரப்பட்ட ஆன்மாக்களும் தத்தம் தகுதிக் கேற்றவாறு கைக்கொண்டு கடைத்தேற வழி அமைக்கப்பட்டுள்ளது. உளவியல் ஆராய்ச்சியில் மேலைத் தேசத்தவர்கள் சில ஆண்டுகளாகவே ஈடுபட்டுள்ளனர். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த முது பெரும் தமிழ்குடிகள் கைக்கொண்ட சமய வழிபாடுகளை நுணுகி ஆராயுங்காலை மேல்நாட்டவர் இன்று கண்டுள்ள உளவியல் உண்மைகள் எமது சமயத்திற்கு பழமையானவையே.

இவை போன்றே இறைவனது வடிவங்கள் அம்பிகை பாகனாக, அருட்குருவாக, அம்பலவாணனாக, வேலொரு கரத்தனாக, கயமுகக் கணபதியாக, கார்முகில் வண்ணனாக, பார்தொழும் லிங்கமாக, உலகைக் காக்கும் ஆதிசேடனாக பல வடிவங்களில் உணர்த்தப்பட்டுள்ளது.

அடியவர் துயர்களைந்து, அல்லலுற்ற உலகத்தினை ஆதிசேடனாக, காத்தருளும் புளியம்பொக்கணையுறை நாகதம்பிரான் உலகெல்லாம் அருள்பாலித்து, தீயன அகற்றி உலகின் கொடுவினை அழித்து ஆன்மாக்களை இரட்சித்து காத்துவர அவனது திருவுருவைச் சித்தத்தினால் தியானித்து அருள் பெறுவோமாக. ★



11-2-66-ல் 2-ம் நாள் சிரமதான வைபவத்தை ஆரம்பித்து வைத்து சமாதான நீதிபதி, திரு. M. யோகலிங்கம் அவர்கள் உரையாற்றுகின்றார்.



10-2-66-ல் நாகதம்பிரான் ஆலய வீதி சிரமதான இயக்கத்தில் கலந்துகொண்ட தொண்டர்களுக்கு இடைவேளையில் உணவு வழங்கப்படுகின்றது.



10-2-66-ல் கரைச்சி கிராம சபைத் தலைவர் திரு. வி. ஆனந்தசங்கரி அவர்கள் நாகதம்பிரான் ஆலய வீதியைச் சிரமதான மூலம் மண்வெட்டி ஆரம்பிக்கிறார்.



காந்தி சேவா சங்கச் செயலாளர் திரு. சி. க. வேலாயுதபிள்ளையும் மலர்க்குழுத் தலைவரும் மற்றைய உறுப்பினரும் உணவு பரிமாறப்பட்டனர்.

# வருத்தான் வருத்த வழி

"கதைக் களஞ்சியம்" இ. த. சுப்பிரமணியம்

அந்தப் புலவர் தங்கமான குணம் படைத்தவர்; அன்றியும் சகல நூற்பயிற்சி மிக்கவர். அக்காலத்தில் அறிவாளர்களுக்கு வாழ வழி கிடையாது. சரஸ்வதி கடாட்சமுடையவரை இலக்குமி தேவி கடைக் கண்ணாலும் பார்ப்பதில்லை என்று கூறுவார்களே! இவ்வுரை புலவருக்கு விதிவிலக்கல்ல. புலவருடன் வறுமையும் கூடவே பிறந்து நன்கு வளர்ந்து வந்தது.

இவர் பின்வரும் இராமச்சந்திரக் கவிராயரின் செய்யுளுக்கு இலக்கியமாக, உதாரணமாக வறுமை வாழ்வு வாழ்ந்து வந்தார்.

ஆவின மழைபொழிய வில்லம் வீழ
அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதைகொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவ னெதிரே செல்லத்
தள்ளவொண்ணு விருந்துவரச் சர்ப்பந் தீண்டக்
கோவேந்த ருழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களோ தட்சணைகள் கொடு வென்றாரே.

இப்படிப்பட்ட பிரச்சினைகள் புலவருக்கு தினசரி நிகழ்ச்சி. அவருக்கு அவை தலைகீழ்ப் பாடம். அறம் உணர்ந்தவர். ஆகவே அவர் கிருமிநாசினிகளை நாடவில்லை.

உத்தமி ஒருத்தியுடன் இல்வாழ்வு வாழ்ந்த புலவருக்கு இறைவன் மக்கட் செல்வத்தை மனமார வழங்கியிருந்தான். சுருங்கச் சொன்னால் புலவர் குசேலர் வாழ்க்கை வாழ்ந்து வந்தார். ஆனால் இவருடன் கிருஷ்ணபகவான் ஒரு சாலையில் படிக்காதததுதான் வித்தியாசம். வறுமை வாட்டியது. புலவர் திகைத்தார்.

எவ்வாற்றானும் பொருள் தேடவேண்டிய நிலையை நன்குணர்ந்த புலவர் தன் சென்ம ஊரில் அறநெறிக் கமைவாகப் பொருள் தேடுவது அசாத்தியம் என்பதையுணர்ந்து வேற்றூர் செல்ல முடிவு கட்டிவிட்டார்.

ஒரு நாள் மாலை நாலு மணிக்குப் புறப்பட்டேவிட்டார். கையில் பொருளின்றி பாதயாத்திரையாகப் புறப்பட்டுவந்த புலவருக்கு அடர்ந்த காட்டுப் பாதை சற்றே பயத்தை வருவித்தது. திடத்தை வருவித்துக்கொண்டு விரைவாக நடந்தார். இரவு ஒன்பது மணி. ஒரு கிராமம் தென்பட்டால் அங்கு இரவைக் கழிக்கலாம் என்று அங்கலாய்த்தார். ஆனால் அவரது வாழ்வு போல், வந்த வழியும் இருளடைந்து விட்டது. வழியில் சிலர் சம்பாஷிக்கும் குரல்கேட்டு மனத்தைரிய மடைந்தார்.

ஒரு கள்வர் கோஷ்டியினர் வந்துகொண்டிருந்தனர். கள்வர் தலைவன் புலவரைக் கண்டான்; வெருட்டினான். நிலைகுலைந்த தன் வரலாற்றையும், அன்றைய பிரயாணத்தின் நோக்கத்தையும் அடக்கத்துடன் உருக்கம் ததும்பக் கூறினார்.

''ஆம் நாங்களும் வாழத்தான்—உடையவர்களிடம் கன்னம் வைத்துக் களவு செய்கின்றோம். கடவுள் அருளால் செல்வராக வந்தவர்கள் அச்செல்வத்தை உன்போன்றவர்களுக்கோ எம்போன்றவர்களுக்கோ பகிர்ந்தளிப்பதில்லை. ஆகவே நாம் களவுசெய்து வாழ்கின்றோம். முதலில்லாத இத்தொழிலைப் பண்புடன் நடத்துகின்றோம். புரிந்ததா வா-எம்முடன். ம்-நட! உனக்கும் எமக்குக் கிடைப்பதில் உரிய பாகம் கொடுக்கப்படும்.'' இஃது கள்வர் தலைவன் கூற்று. திகைத்த புலவர் திடுக்குற்றார். வேறு வழியின்றி தயங்கிய புலவரின் கால்கள் கள்வர் கூட்டத்துடன் நடந்தன.

அன்றிரவு சுமார் ஒரு மணிக்கு இக்கள்வர் கோஷ்டியினர் ஒரு ஜமீன்தார் வீட்டுக்குக் கன்னம் வைக்கத் திட்டமிட்டிருந்தனர். திட்டமிட்டால் அதன்படி நடந்தே தீரும். இக்கோஷ்டியினர் தமது தொழிலில் கைதேர்ந்தவர்கள்.

ஊர் அடங்கிவிட்டது. கள்வர் கோஷ்டி பின் வேலியால் சென்றது. இரவு ஒரு மணி. தலைவன் கட்டளைப்படி நால்வர் சென்று கட்டடத்தின் சுவர் ஒன்றைக் கன்னம் வைத்து ஓர் ஆள் உட்புகக்கூடிய அளவுக்குப் பிரித்து சுவர்க் கற்களை எடுத்தனர்.

ஒருவன் உட்சென்று பொருட்களை எடுத்தெடுத்துக் கொடுக்க வெளியே நிற்பவர்கள் வாங்கி அடுக்குவார்கள். சில சமயங்களில் உள்ளே சென்று பொருட்களை எடுப்பவன்பாடுதான் பெரிய ஆபத்தில் முடிவதுண்டு.

''டே - கிழவன் - போ உள்ளே எல்லாத்தையும் வெளியாலே கொடு. இனி முடியாதென்றமட்டில் வெளியாலே வா. பயப்படாதே! நாம் இங்கு நிற்கின்றோம்.''

புலவர் தயங்குமுன், சிலர் அவரைப் பிடித்து உள்ளே தள்ளிவிட்டனர். புலவருக்கு மனச்சான்று என்று ஒன்று இருந்திருக்குமேயாகில் அது கொல்லப்பட்டே விட்டது. புலவர் தன்னிலையை உணர்ந்து நடக்க முற்பட்டார். அறையுள் உள்ள பொருட்களை இருட்டில் கையால் தடவிப் பார்த்தார். பொறுக்கி எடுத்துக் கொடுக்கலாமோ என்றால் விஷயம் முழு ஏமாற்றமாகி விட்டது. அதாவது இவர்கள் கன்னம் வைத்த அறை பொருட்கள் சேமிக்கப்படும் களஞ்சியமல்ல. பின் படுக்கை அறை. அதுவும் ஜமீன்தார் துயிலும் அறை. புலவருக்கு ஜமீன்தார் மூச்சுவிடு மரவமே கேட்கிறது. புலவர் புதுக்கள்வன்! பாவம்! புலவர் செய்வதறியாது கட்டிலின்கீழ் பதுங்கிக் கிடந்தார். குழந்தைகள் தவழுவதுபோன்று புலவர் கட்டிலின் கீழேயிருந்தார். தருமர் பொறியுள் எலி அகப்படுமே; அதுபோல.

பஞ்சணையில் துயிலும் அந்த வீட்டு எசமானர் நல்லவர். படித்த மனிதர். பண்புள்ளவர். சமயப் பற்றும் நன்கு அமையப்பெற்றவர்.

அரவம் கேட்டோ அன்றியோ ஜமீன்தாரின் துயில் முறிந்தது. அன்று பகல் நெட்டுருப் பண்ணிய ஒரு சிறந்த பாடலின் ஈற்றடி ஞாபகத்திற்கு வரமறுக்கவே அப்பாட்டில் முதல் மூன்று வரிகளையும் பலமுறை பஞ்சணையில் படுத்த நிலையில் சொல்லிச் சொல்லிப் பார்த்தார். ஜமீன்தார் பன்னிப் பன்னிப் பார்த்தும் பாடல் வரமறுத்தது.

கலையுணர்வும் புலமையும் மிக்கவராய் புதிய கள்வர் தன்னிலையை மறந்து, அவதியுற்றவரின் கடைசி வரியை அபுத்தி பூர்வமாகக் கூறிவிட்டார்.

'யார் அது' என்று கேட்டபடியே ஜமீன்தார் இறங்கி கட்டிலின் கீழ் மின் வெளிச்சத்தை எடுத்து அடித்தார். புலவரும் தவழ்ந்து வெளியே வந்து தன் வரலாற்றைக் கூறினார்.

(அரவம் சம்பாஷணையாக மாறுவதனைக் கேட்ட கள்வர் கூட்டம் இவ்வேளை மெல்ல நடையைக் கட்டிவிட்டது)

"அன்ப தூய உள்ளம் படைத்த உன்னிலை கண்டு வருந்துகின்றேன். வா. இஃது களஞ்சிய அறை. நீ ஏதாவது ஒரு பொருளை எடுத்துக்கொண்டு போகலாம் — இஃது ஜமீன்தார் கூற்று. அவ்வண்ணமே, களஞ்சிய அறையை நன்கு நோட்டம் விட்ட புலவரின் நாட்டம் ஓர் இரும்புப் பெட்டியை நாடியது. ஜமீன்தார் அதனைக்கூடத் தூக்கி தலையில் வைத்து அதற்குரிய சாவியையும் ஒப்படைத்தார்.

புலவர் புதிய சுமையுடன் வீட்டை நோக்கிச் சென்றார். பொழுது புலர்ந்தது. வாழ்வும் புலரும் சமயம் வந்துவிட்டது என்று கருதிய புலவர் மனைவி, மக்கள் சந்நிதியில் உவகையுடன் பெட்டியைத் திறந்தார்.

என்ன ஏமாற்றம்; அதற்குள்ளிருந்தது வேலூர்ச் சர்க்கரை. அப்பாடா! சரி. ஒரு வருடத்திற்குத் தேநீராவது கஷ்டமின்றிக் குடிக்கலாம் என்று மனதில் சமநிலையை வருவித்துக்கொண்டு புலவர் அவர்கள் கொஞ்சம் பருமனை கட்டிகளாக - பத்துப் பதினைந்து எடுத்து தனது புத்திர பாக்கியங்களிடம் விநியோகித்தார்.

அச்சிறார் வாயில் போட்டதும் காறி உமிழ்ந்து "அப்பா – மண் – மண் - கல்" என்று வீசினர். தானும் ஒரு சிறு துண்டை வாயிற் போட்டுப் பின் உமிழ்ந்த புலவர் சற்றே மௌனமானார்.

சிந்தனை ஓடியது. அதன் விளைவு பின்வரும் பாட்டு.

நாடெலாம் செந்நெல் விளையினும் நாட்டு நதியெலாம் நவ நிதிதரினும்
காடெலாம் பருத்திபட் டாடை காய்க்கினும் கனகமே மழை பொழிமினும்
ஆடலே புரியும் அம்பல வாணன் அவரவர்க் களித்ததே அல்லால்
வீடெலாம் புகுந்து திருடினும் வருமோ விதியலால் வேறொன் றுளதோ.

வகுத்தான் வகுத்த வழியே நடைபெறும் என்பதை மேற்படி செய்யுள் மூலம் உலகிற்கு எடுத்துரைக்கின்றார் புலவர் சிகாமணி.

ஆனால் முயற்சி திருவினையாக்கும் எனவும், முயற்சி யுடையவர் இகழ்ச்சி யடையார் என்பதும், கடவுளா லாகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலி தரும் என்பனவும் இங்கு மறக்கப்பாலனவல்ல.

---

உ
சிவமயம்

# தேவாலயத்தின் பெயரில் அமைந்த வித்தியாலயம்

(திரு. வே. மயில்வாகனம், செயலாளர், கிராம முன்னேற்றச் சபை)



நாகேசுவர சைவ வித்தியா
சாலையை ஆரம்பித்த
தலைமை ஆசிரியர்
திரு. வை. நடராசா அவர்கள்

சைவப் பாடசாலைகளின் தாபகரும் காவலரு மான நியாயவாதி அமரர் திரு. சு. இராசரத்தினம் அவர்களின் நிர்வாகத்தின்படி, கல்வயல் திரு. வை. விஜயகமூர்த்தியவர்கள் புளியம்பொக்கணை, கலவெட் டித்திடல் என்னும் இரு கிராமங்களின் சைவப்பிள் ளைகளின் வளர்ச்சிக்காக திரு. வை. நடராசா ஆசிரி யரைத் தலைமையாசிரியராக நியமித்து, நாகேசுவர வித்தியாசாலை என்னும் எம்பெருமான் பெயரையே சூட்டி ஒரு சைவ வித்தியாசாலையைத் தாபித்தனர்.

ஊரபிமானிகள் துணையுடன் வள்ளல்கள் திரு. செ. கந்தையாவும், ஸ்ரீமதி. சரவணமுதது தங்க முத்துவும் (திரு. ஐயாத்துரையின் தாய்) காணி கொடுக்க கட்டடம் அமைக்கப்பட்டது.

ஆசார சீலரான நடராசாவின் மாண்பு மாண வர்களில் பிரதிபலித்தன — சீரிய சைவ சமுதாயம் உருவாயது.

மாதகல் ஈய்ந்த மாணிக்கமான திரு. வை. இராமசாமி — தனங்களப்பு தந்த தண்ணளியாளன் திரு. க. கந்தர், பொன்கொடுதீவு கொடுத்த புண் ணியசீலன் திரு. க. ஏரம்பு ஆகியோர் தலைமை தாங்கி நாகேசுவர வித்தியா பீடத்தை வளர்த்தனர். இங்கு வவனியாவில் வான்புகழ் கொண்ட கோதண்டர் இரத்தினசிங்கம் அவர்களும், ஆங்கில வித்தகர்-மேதை திரு. க. கணபதிப்பிள்ளையும் பற்பல சேவைகள் புரிந்தனர். முல்லைக்குமரனும் திரு. சி. முருகேசு ஆசி ரியர் பாம்பையும் கையில் எடுப்பவர் — வேலுடன் திரிந்து சைவப்பிரசாரஞ் செய்பவர் — மாண்புடன் தலைமை ஆசானாகி சிறப்பான சேவை புரிந்து மக்கள் மனத்தில் அமர்ந்தனர். கதிர்காமக்கந்தன் அருளும் பெற்றனர். கொடிகாமம் கொடுத்த திரு. ஐ. முரு கேசு அவர்களும் பல வருடங்கள் பண்புடன் படிப் பித்தனர். இப்பதியில் பதினொரு வருடங்கள் படிப் பித்த திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் கூட்டுப் பிரார்த்தனை நூல்களும் இயற்றி, பஜனைகளும் விசேட வகுப்புக்களும் நடாத்தினர்.

செல்வி. கனகசபை பரமேசுவரி முதலாவது ஆசிரியையாக கரம்பகத்தில் இருந்து 1964-ல் வந்து தொடர்ந்து ஐந்தாண்டுகள் சேவை செய்து சைவம் போற்றி உயர்ச்சியுடன் சென்றனர். அக்காலத்தில் ஸ்ரீமதி தங்கம்மா சிவபாதசுந்தரம் (லீலா அக்கா) அவர்களும் சீரிய கல்வியை விசேடமாகப் பெண் பிள்ளைகளுக்கு ஊட்டினர்.



சிறந்த தொண்டரும் சொற் பொழிவாளரும், நாகேசுவர வித்தியாசாலையில் தலைமையா சிரியராகப் பல்லாண்டு சேவை புரிந்த
திரு. சி. முருகேசு அவர்கள்

இங்கு காணி பெற்றவரும் சிறந்த சைவாபிமானியுமான திரு. ஆ. முத்துக் குமாரு அவர்கள் பாடசாலையில் சிறப்பான சேவை செய்ததோடமையாது எம்பெருமான் சந்நிதானத்தில் புராண படனமும் விரிவுரைகளும் நடத்தினர் — நடத்தி வருகின்றனர் இவருடன் சேர்ந்து திரு. சி. கணபதிப்பிள்ளை (கண்டாவளை) உடையார், திரு. செல்லப்பா கணபதிப்பிள்ளை, திரு. க. குமாரசாமி போன்ற பல உத்தமர்கள் அறிஞர்கள் புராண படனம் செய்வதை ஊக்கி எமது கோயிலை ஒரு சிறிய சர்வகலாசாலையாக மாற்றுகின்றனர்.

பிரதம பூசகர் திரு. வா வீரகத்திப்பிள்ளை அவர்களும் பண்முறை அமைய திருப் பதிகங்கள் படித்தும் புண்ணிய கருமங்கள் பல புரிந்தும் வருகின்றனர்.

எங்கள் செயலாளரும் கிராம சேவையாளருமான திரு. S. S. சின்னத்தம்பி அவர்கள் விதானையாராக விருந்தசமயம் (1964) பாடசாலையை மத்திய இடத்திற்கு அதிபர் திரு. ஆர். ரி. சுப்பிரமணியத்துடன் சேர்ந்து மாற்றினர். ஐந்து ஏக்கர் காட்டை அழித்து அதில் சிரமதான இயக்கத்தை ஊக்கி அரசினர் துணையுமின்றி கட்டடம் அமைத்து சரித்திரம் காணாத சாதனைகளைச் சாதித்தனர். இவர்களுக்கு சுவர்க்க வாயில் என்றும் திறந்திருக்கும்.

ஒரு ஆசிரியருடன் இயங்கிய இப்பாடசாலையை நவீன கட்டடமும் ஏனைய வசதிகளுடன் கூடிய சிறந்த கலைக்கூடமாக்கி ஒன்றுக்கு நாலாக ஆசிரியர்களைப் பெற்று பாடசாலையை விஸ்தரித்த பெருமை எமது மலர்க்குழுத் தலைவரும் சிறந்த சொற்பொழிவாளருமான அதிபர் திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் அவர்களையே சாரும்.

இங்கு தற்போது திரு. சி. மகாலிங்கம் ஆசிரியர் அவர்களைத் தலைமை ஆசிரியராகவும், திரு. வ. ஐயாத்துரை ஆசிரியர் அவர்களைத் துணையாசிரியராகவும், திரு. மு. சிவராசா அவர்களை ஆங்கில ஆசிரியராகவும் கொண்டு பாடசாலை இயங்கிவருகிறது.

ஓர் உத்தம கிராமசபை உறுப்பினராக விளங்கிய திரு. அ. வைரமுத்து அவர்களும், சமூக சேவையில் நல்ல ஆர்வங் கொண்ட திரு. சி. பாலசுப்பிரமணியம் (கிளி) அவர்களும், எங்கள் ஊர் அபிமானிகளும் சேர்ந்து பாடசாலைக்குரிய தெருவை சிறப்பாக அமைத்தனர். பரந்தன் சித்திவிநாயக ஸ்ரோர்ஸ் உரிமையாளர், பரந்தன் கணேசா ஸ்ரோர்ஸ் அதிபர் திரு. பரமு. சுப்பையா, திரு. ப. சு. பரமநாதன், திரு. அ. வை. வனேசுவரன் ஆதியோருடைய சேவையால் 9150 ரூபா பெறுமதியான தெரு செப்பனிடப்பட்டு கோயிற் றெருவும் பாடசாலையும் இணைக்கப்பட்டது. இது நல்ல சேவை. அனைவருக்கும் எமது நன்றி.

பாவம் செய்ய ஏவுகின்றவன், செய்கின்றவனோடு சமமாகத் தண்டிக்கப்படுவான்.

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம்.

நீ பிறர்க்குச் செய்த உபகாரங்களை நீயே எடுத்துப் புகழ்தல் தக்கது அன்று.

தங்கள் நயத்தின் பொருட்டு மாத்திரம் அன்றி, பிறர் நயத்தின் பொருட்டும் பிரயாசப்படுகின்றவரே உத்தமர்.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

# புளியம்பொக்கணை
# நாகதம்பிரான் தாள்கள் போற்றி



தமிழிசைக் கவிஞர், சைவப்புலவர், சங்கீதபூஷணம், அ. கி. ஏரம்பமூர்த்தி

மலர்தூவி யெழில்கூட மயிலாடு சோலைதனில்
மாங்குயில்க ளினிது கூவத்
தலைதாழு நிலையோடு செஞ்சாலி முற்றியே
தாள்தனைப் போற்றி செய்யும்
நலமேவு சூழல்தனில் நல்லோர் தவம்பெருக
நாளுமே வந்து கூடுந்
தலமான பெருமைமிகு புளியம்பொக் கணைநாக
தம்பிரான் தாள்கள் போற்றி

அஞ்சவரு நஞ்சதனை அமரருக்காய் உண்டு
அமிர்தமது பெற வைத்தவன்
கஞ்சமல ருறைஅயன் மாலுமே தேடியுங்
கண்டிடாப் பெருமை கொண்டோன்
நெஞ்சமதி லன்புடன் தொழுவோர்கள் மகிழ்வோடு
நித்தமுங் காண நிற்போன்
நஞ்சுநிறை யரவுதனை நயந்தணிந் திடுநாக
தம்பிரான் தாள்கள் போற்றி.

அண்டங்கள் யாவுமே ஆக்கியருள் செய்முதல்வ
னரவுருவு மாகி நிற்போன்
தொண்டர்கள் வினைதீர்ந்து திருவருளை யேபெறவுந்
தூய்மைமிகு மனதி னோடு
பண்டங்க ளென்றுமே இளநீர் பழக்குலைகள்
பால்பானை கொண்டு வந்தே
தண்டங்கள் செய்துஅன் பாய்ப்பொங்க ஏர்நாக
தம்பிரான் தாள்கள் போற்றி

சிரமீது கர்ப்பூர மெரிசட்டி யைக்கொண்டு
சுற்றிவரு வோர்க ளொருபால்
பரிவோடு விடபயந் தீர்த்துவைப் பாயென்று
பத்தியொடு பணிவ ரொருபால்
எரிமீது நன்நாம மோதியே கால்வைத்து
எளிதாக வருவ ரொருபால்
அறமோடு வாழுபவர் தனக்கின்ப மருள்நாக
தம்பிரான் தாள்கள் போற்றி

காவடிகள் கொண்டுபர வசமாக ஆடிமிகு
கருணைபெற வருவ ரொருபால்
பாவமது போக்கிநற் புதல்வரைத் தாவென்று
பணிந்துருகி நிற்ப ரொருபால்
நாவினிய பாடலைப் பாடநின் றேயுருகி
நயந்துதொழு திடுவ ரொருபால்
பூவுலகிற் புதுமைமிகு புளியம்பொக் கணைநாக
தம்பிரான் தாள்கள் போற்றி.

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

கடவுளையும், அவரை வழிபடும் நெறியையும், அதனால் எய்தும் பயனையும் உனக்குப் போதிக்கும் அருள்வடிவாகிய ஆசாரியார் ஒருவரே உன் உயிர்த் துணை; ஆகையால் அவரை ஒருகாலமும் மறவாதே.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

# நாகதம்பிரான் ஆண்டுற்சவப் பணியிலே......

பிரதம பூசகர்

## நா. வீரகத்திப்பிள்ளை (ஐங்கரப்பிள்ளை)

பொங்கல் தினத்திற்கு எட்டு நாட்களுக்கு முன்பதாக பிரம்புப்பூசை செய்து, பிரம்பும் நாகதம்பிரான் திருவுருவமும் தெய்வவிதிப்படி திரு. மு. சிதம்பரப்பிள்ளை (பூசாரியார்) அவர்களிடமும், பூசாரியர் திரு. நா. நவசிவாயம் அவர்களிடமும் கொடுக்க அவற்றை எடுத்துச் சென்று புத்தூர்ச் சந்திமரவடியில் தினபூசை செய்து, சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய சந்தைகளில் தண்டல் நடாத்திப் பண்டம் வாங்கப்படும்.

பண்டம் பொங்கற்றினத்திற்கு முதனாள் மாலை மீசாலை புத்தூர்ச் சந்தியிலிருந்து, மரவடி அன்னதானம் முடிய ஆரம்பமாகி, பண்டைக்காலத்து முறைப்படி தற்போதும் பல இரட்டைமாட்டு வண்டிகளில் பயணமாகி ஊர்வலமாக வாத்தியசகிதம் செல்லும். கொடிகாமத்திற்கும் பளைக்கும் இடையில் உள்ள நண்ணீர்ப் பந்தல்களில் தங்கி ஆனையிறவை அதிகாலை அடையும். அங்கு தொண்டர்களால் அன்னதானம் வழங்கப்படும்.

பின்னர் ஊர்வலம் முரசுமோட்டையை வந்தடையுமுன்னர் உமையாள்புரம், பரந்தன் சந்தி, பூங்காவனச் சந்தி—முரசுமோட்டை 3-ம்கட்டையடி ஆகிய இடங்களில் உள்ள தண்ணீர்ப் பந்தல்களிற்றங்கி முரசுமோட்டை பன்னைக்கண்டி அன்னதானப் பந்தலை வந்தடையும்.

அவ்விடமிருந்து கண்டாவளைச் சந்தைக்கு இடையில் அமைந்த தண்ணீர்ப் பந்தல்களிலும் தாகசாந்தி தீர்த்து, சந்தையை வந்தடைந்து அன்னதானம் முடித்து இளைப்பாறும். மீண்டும் ஊர்வலம் பொங்கல் தினத்தன்று சுமார் $2\frac{1}{2}$ மணியளவில் கோயிலை நோக்கிப் புறப்படும். இடையில் உள்ள தண்ணீப் பந்தல்களிலும் தங்கி, தாகசாந்தி முடித்து நாகதம்பிரான் சந்நிதானத்தை 5 மணியளவில் வந்தடையும்.

சந்நிதானத்தில் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்குத் தொண்டர்கள் அன்னதானம் வழங்குவர், புளியம்பொக்கணை 7-ம்கட்டைச் சந்தியாலேயே அதிகமாக பஸ் போக்குவரத்து நடைபெறுவதால், அவ்வழியே வரும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு 7-ம்கட்டை சந்தியில் தண்ணீர்ப் பந்தல் அமைத்து பொங்கல் அன்றும் மறுநாளும் தாகசாந்தி தீர்த்து அனுப்பப்படும்.

**மின்சார அலங்காரம்:** ஆண்டு தோறும் கண்டாவளைக் கிராமத்தைச் சோந்த மக்கள் பொங்கல் விழா இரவு இலவசமாக மின்சார அலங்காரம் செய்தார்கள், ஆனல் இவ்வாண்டு கண்டாவளை மக்கள் ஒரு மின்சார ஒளி இயந்திரமும், பன்றிசுட்டான் கிராமமக்கள் மேலும் ஒருமின்ஒளி இயந்திரமும் இலவசமாக பொங்கலுக்கு அளிக்க முன்வந்துள்ளார்கள்.

**ஒலிபெருக்கி:** ஆண்டுதோறும் ஆலய தேவைக்கு ஒரு ஒலிபெருக்கி திரு. V. S. கந்தையா அவர்கள் இலவசமாகப் அமைத்துத்தருவார்கள். அவர்களே அடியார்களின் சைக்கில்களை ஆலய சார்பில் பாதுகாத்துக் கொடுப்பார்.

**தண்ணீர் வசதி:** ஆண்டுதோறும் கரைச்சிக் கிராமசபை இலவசமாக அடியார்கட்கு தண்ணீர் விநியோகம் செய்வார்கள்.

**வீதிப்பாதுகாப்பு:** ஆண்டுதோறும் ஆலய வீதியில் பாதுகாப்புக்கு திரு. க. சடையர், திரு. கு. ஐயம்பிள்ளை, திரு. சி. நடராசா, திரு. சி. வாரித்தம்பி, திரு. திருநாமம் முதலானேர் இலவச தொண்டுபுரிவார்கள்.

**பொதுத் தொண்டுகள்:** மற்றும் ஆலயப் பொதுப்பணிகள் எவையோ அவற்றிலெல்லாம், சகல தொண்டர்களும் இரவும் பகலும் அயராது உழைப்பர். ★



உயர்திரு. நா. வீரகத்திப்பிள்ளை
பிரதம பூசகர்



திரு. மு. சிதம்பரப்பிள்ளை
உதவிப் பூசகர்



திரு. நா. நமசிவாயம்
உதவிப் பூசகர்



திரு. அ. வைரமுத்து
சிறந்த தொண்டரும், முன்னை நாள்
புளியம்பொக்கணை கி. ச. உறுப்பினரும்



அறிஞரும்
சைவப் பெரியாருமான
**திரு. க. பொன்னையா**



முன்னைநாள் கண்டாவளை
கி. ச. உறுப்பினரும்
சிரமதானத் தொண்டருமான
**திரு. K. சடையர்**



சிரமதானத் தொண்டர்
**திரு. செ. தம்பிஐயா**



சிரமதான இயக்கத்தில்
உணவுப் பிரிவில்
முக்கிய பங்கெடுத்த
**திரு. சி. தம்பிப்பிள்ளை**

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் நமக்கோர் அன்பர்

( நா. கணபதிப்பிள்ளை, ம. வ. திட்டம், No. 123, தருமபுரம் )

நாலா பக்கமும் தண்கடல் சூழ்ந்த நல்ல காவலுடைய ஈழவள நாட்டின் மார்பகமாக மிளிரும் வட பகுதியில் பச்சைப் பசும்புல் மேய்ந்து பாலாறு பாய்கின்ற ஆநிரையுறை களனிவயல் சூழ்ந்த மாநிலமாம் புளியம்பொக்கணையம்பதியில் கோவில் கொண்டருளிய நாகங்களால் சூழ்ந்த நாகதம்பிரான் நமக்கருளிய நன்மைகள் சொல்ல நம்மாலுமியலாது; ஆயிரநாவையுடைய ஆதிசேஷனாலும் முடியாதென எண்ணத்தக்க அருளும் சித்தியுமுடைய பிரானின் அருளையும், சித்தியையும் முன்னுள்ளார் பெற்றுப் பயன் அடைந்து வருவதிலும் பார்க்கப் பின்னுள்ளார்களும் காலாகாலந்தோறும் நாகசாபம் நீங்க, நல்வாழ்வும், செல்வமும், சீருமுடைத்தாய தம்பிரான் துணை கொண்ட ஆண்டுற்சவமலரையும் எண்ணுவோம்.

உன் உள்ளத்திலே செல்வமிகுதியால் அகந்தை தோன்றுமாயின், உன்னின் மிக்காருடைய செல்வத்தையும், வறுமை மிகுதியால் துக்கந் தோன்றுமாயின் உன்னின் இழிந்தாருடைய வறுமையையும் நினை; நினைப்பாயாகில், அகந்தை, துக்கங்கள் உன்னை எக்காலத்தும் அணுகாவாம்.

செல்வம் அழிவு உள்ளது, அதனால்வரும் பெருமையும் அழிவுள்ளது; கல்வி அழிவில்லாதது ஆதலால் அதனால்வரும் பெருமையும் அழிவில்லாதது.

அருட் செல்வமே அறிவுடையோர்களிடத்து மாத்திரம் உளதாகி, எவ்வுயிர்களாலும் நன்கு மதிக்கப்படும் பெருஞ் செல்வம்.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

உ
சிவமயம்

# ஸ்ரீ புளியம்பொக்கணை நாகதம்பிரான் சுவாமி போற்றித் திருப்பதிகம்

உயர்திரு. செ. சிவப்பிரகாசம்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர், கொக்குவில் இந்துக் கல்லூரி

ஆசிரிய விருத்தம்

திருவள ரீழத் துச்சிமேற் பொலியுஞ்
சிறப்புள வடமா நிலத்தினின் மருவும்
முருகலர் வண்டு மொய்த்துமே பாட
முறைமுறை மயில்நட மாடிடும் பொற்பார்
மருவளர் சோலை மன்னியெங் கெங்கும்
மணங்கமழ்ந் திலங்கிடும் புளியம்பொக் கணையிற்
கருதுவார் வினைகள் கழிந்துட னோடக்
கடவுளார் நாகதம் பிரானவர் வாழ்வார்

தம்பிரா னெவர்க்குந் தனிப்பெருந் துணைவர்
தாங்குபே ரருள்பொழி தருமரு மருந்து
நம்பினோ ரெவர்க்கும் நானுள னென்று
நாககங் கணங்கள் நலம்பெறப் பூண்டு
உம்பரா யோங்கும் உயர்மரக் காவுள்
உளமெலாம் உருக்கும் ஒருதனி முதலாய்
எம்பிரான் நாக தம்பிரான் வாழ்வார்
என்றும்நல் லருளும் இன்பமும் பொழிந்தே!

இன்பமும் வாழ்வும் ஏத்துனர்க் கீவர்
இவ்வுல கத்தவர் ஏவர்தாம் வரினும்
துன்பமுஞ் சோர்வும் சொலற்கரு நோயும்
சூரியற் கண்ட பனியென அகலும்
அன்புடன் பொங்கும் பொங்கலும் பொங்கி
ஆடவர் பெண்டிரென் றனேகருங் குழுமி
இன்பு னேத்த இன்னருள் புரிவார்
எம்பிரான் நாக தம்பிரா னவரே.

தம்பிரா னவரே தந்துணை யென்று
சாலவுந் தூய தண்ணளி யுடனே
நம்பிநன் மனத்தே நணுகுறு மன்பும்
நாவினு லேத்தும் நமச்சிவா யமுமாய்க்
கும்பிடு மரிய குணமுள கையிற்
குலமலர் பலவுங் கொண்டுநின் றேத்த
இம்பரி னெல்லா இனியவு மருள்வார்
எம்பிரான் நாக தம்பிரா னவரே.

நெக்குநெக் குருகி நின்றுநின் றேங்கி
நெஞ்சினு ளன்பு நீடிமேம் பட்டுத்
தொக்குள வுரோமஞ் சிலிர்த்துடல் நடுங்கித்
தூயகண் ணீரே சொரிந்திடு மன்பர்
எக்குலத் தோர்கள் ஏவரே வரினும்
இனியநல் லருளை அவரவர்க் கருளிப்
புக்குவிற் றிருப்பர் புளியம்பொக் கணையுள்
புனிதராம் நாக தம்பிரா னவரே.

உடல்நல மற்றோர் உருகிநின் றேத்த
உடல்நல மவரவர்க் கீந்தருள் செய்வார்
விடங்கடி புண்டோர் விடமகற் றென்ன
விடமெலாம் நீக்கி விதிவழி விடுவார்
தடங்கடல் நடுவே கலங்கவிழ் வுறுவோர்
தம்பிரா னென்னத் தானருள் புரிவோர்
மடங்கலந் தவிசின் மன்னவர் வந்து
வணங்குறும் நாக தம்பிரா னவரே.

நாகமே தீண்டி நலிவெலா மியற்ற
நலிந்தவர் நடுநடுங் குற்றுளம் வருந்தி
நாகதம் பிரானே நமக்கினி யுறுகண்
நணுகிடா விடர்துயர் ஒன்றுமே யென்று
நாகதம் பிரான்பால் நணுகுநல் லன்பர்
நாகமா விடமெலாம் நடந்திடப் பெறுவர்
நாகதம் பிரானே நல்லருள் புரிவீர் !
நம்பினேம் புளியம் பொக்கணை வாழ்வே !

பாம்பெலாங் கூடிப் படமெடுத் திட்டுப்
பயங்கர ரூப நயம்பல காட்டப்
பாம்பது கண்டு பயமது வின்றிப்
பலரும்வந் தீண்டிப் பணிபல புரிவர்
பாம்பெலா மொன்றும் பலவுமாய் வரினும்
பயப்படார் நாக தம்பிரா னருளால்
பாம்பினு லுறுகண் பயின்றிடா தொழிப்பர்
பரமராம் நாக தம்பிரா னவரே.

புளியம் பொக்கணையிற் புக்குநீ ராடிப்
புனிதராய் நல்ல பூவெலாம் பறித்துப்
புளியம் பொக்கணையிற் கோயில்கொள் ளீசன்
புனிதமா மலரடி புகழ்ந்துபா ராட்டிப்
புளியம் பொக்கணைவாழ் புண்ணியா வுன்றன்
புகலன்றி வேறும் புகலது வுண்டோ ?
புளியம் பொக்கணைவாழ் ஈசனே என்னப்
பொலிவுட னருளுவர் நாகதம்பிரானே !

வேறு

ஏகநா யகனே போற்றி ! இனிதருள் புரிவாய் போற்றி !
நாகமார் பணியாய் போற்றி ! நம்பினோர்க் கருள்வாய் போற்றி !
வேகநோய் தீர்ப்பாய் போற்றி ! வேண்டிய தருள்வாய் போற்றி!
நாகதம் பிரானே போற்றி ! நற்பதம் போற்றி ! போற்றி ! !

# எங்கே? புளியம்பொக்கணையில்

வழிகாட்டும் தெய்வம் எங்கே — அம்மா நல்
வழிகாட்டும் தெய்வம் எங்கே ? (வழி)

பழி பாவம் பகைதடுத்து பசிவேளைக் குணவளித்து
விழிகாக்கும் இமைபோல விருப்போடு உயிர்காத்து (வழி)

கண்ணில் ஒளியிழந்து கதைக்கும் குரலிழிந்து
பண்ணில் இசையிழந்து பார்வைக் கழகிழந்து
தண்ணீர்ப் பசையிழந்து சருகாய் உலர்ந்ததென
மண்ணில் நிலையிழந்த மடையன் எனக்கொருநல் (வழி)

கண்கள் இரண்டிருந்தும் கடவுளைக் காணாது
புண்கள் இரண்டுடைய பொய்க்கண் நிலையினில்நான்
எண்காண முடியாத எழுத்தென்றும் தெரியாத
மண்பொம்மை போலான மாயஇருள் அகற்றி (வழி)

அன்பின் வடிவெடுத்து அறிவுத் தெளிவெடுத்து
இன்ப அருள் சுரந்து இதயத் தொழி பிறந்து
துன்ப இருள் அகற்றி தூய்மை நிலைக்கவென்று
அன்பர் இதயத்து நடமாடிக் களிக்க வந்து (வழி)

சேகரித்தது
உயர்திரு. K. V. சுப்பிரமணியம், புளியம்பொக்கணை
,, மு. மகேசுவரன், கண்டாவளை

விஜயம் செய்யுங்கள்!

# ஆனந்த பவான்

( முன்னாள் முருகன் கபே )

**கண்டி வீதி — பளை**

✠ சிறந்த உணவு

✠ சுவைமிக்க சிற்றுண்டிகள்

✠ பசும் பால்

✠ தேனீர்

✠ கோப்பி

# ANANDA BHAWAN

Prop: V. NAGALINGAM

KANDY ROAD — PALLAI

---



இத்தாவில் ஆறுபடை வீடமைந்த ஓர் ஆலயத்தின் அறிகுறிகளைக் கண்டுகளியுங்கள்.

எல்லாம் இறைவன் அருள்.
மிகுதியை சாயிபாபாவிடம் கேள்.

அன்பளிப்பு:

நாகதம்பிரான் ஆலய ஆண்டு விழா உற்சவ மலருக்கு

**பளை, வைரவிப்பிள்ளை நாகலிங்கம்**

( அப்பன் தொண்டன் )

உதவியது.

# PIYASENA & SONS

**KANDY ROAD — KILINOCHCHI**



உங்கள் கடிகாரங்கள் பழுதா?

உத்தரவாதமுள்ள வேலை! நிதான விலை !!

இவைகளுக்கு எம்மிடம் விஜயம் செய்யுங்கள்.

கைக்கடிகாரம், மேசை-மின்சார மணிக்கூடுகள்,
டைப்றைட்டர், நம்பர் மெசின் ஆதியன
பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்.

சகல விதமான மணிக்கூட்டு உப-உறுப்புக்களும்
பெற்றுக்கொள்ளலாம்.

# பியசேன அன் சன்ஸ்

பதிவு இல. 5823

**கண்டி வீதி — கிளிநொச்சி**




* பலவித வைபவங்கள்
* அறிமுக அட்டைகள்
* வர்ணப் படங்கள்

ஆகியவற்றிற்கு திறமையும் தரம் குறையா
படப்பிடிப்பாளர்

# குகன் ஸ்ரூடியோ

சாவகச்சேரி

புளியம்பொக்கணை ஸ்ரீ நாகதம்பிரான் ஆசியைப் பெற்ற

முரசுமோட்டை

# வேல்ஸ் பேக்கரி

சுகாதார முறைப்படி தயாரிக்கும் ருசிமிக்க

கேக், பிஸ்கற் வகைகளுக்கும்

நாளாந்தத் தேவைக்குரிய

பாண், பணிஸ் வகைகளுக்கும்

ஒருமுறை ஓடர் செய்து சுவைத்து மகிழுங்கள்.

உரிமையாளர் :-

சி. குமாரவேல் அன் சன்ஸ்

முரசுமோட்டை, பரந்தன்

அன்பளிப்பு :- திரு. பொன்னையா, பொ. அழகரத்தினம், வை. வேலையா.

# வேலானந்தன் ஸ்ரோர்ஸ்

(உரிமை:- வை. வேலையா)

கண்டி வீதி — பளை

எம்மிடம் உங்கள் விவசாய, உணவுப் பொருட்கள் முதலானவற்றிற்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

**VELANANTHAN STORES**

(Prop:- V. VELAIAH)

KANDY ROAD — PALLAI

# சித்தி விநாயகர் ஸ்ரோர்ஸ்

**கண்டி வீதி -:- பரந்தன்**

நம்பிக்கை — நாணயம் — மலிவு

நாடுங்கள் நம்மை

எங்களிடம்:-

எல்லா விதமான சாய்ப்புச் சாமான்கள், சில்லறைச் சாமான்கள், கிருமி நாசினிகள், பசளை வகைகள், பீடி, சுருட்டு, மற்றும் உங்கள் தேவைக்கேற்ற சாமான்கள் யாவும் சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளளாம்.

உங்கள் தேவையைப் பூர்த்தி செய்ய

இன்றே விஜயம் செய்யுங்கள்.

# SITHTHY VINAYAGAR STORES

**KANDY ROAD —:— PARANTHAN**

# சாந்தி வாச் வேக்ஸ்

(உரிமை:- K. செல்வத்துரை)

**கண்டி வீதி.** (தெய்வேந்திரா தியேட்டர் முன்பாக) **சாவகச்சேரி**



※ கைக்கடிகாரம்

※ சுவர் மணிக்கூடு

※ மேசை மணிக்கூடு

ஆகியவற்றைப் பழுதுபார்ப்பதில் தேர்ச்சி மிக்கவர்கள்.

ஒருமுறை விஜயம் செய்து உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யுங்கள்.

# KAMALA STUDIO

KANDY ROAD — KILINOCHCHI

உரிய காலத்தில்
உரிய படங்களை
தத்ரூபமாகத் தயாரித்து வழங்குபவர்கள்.

## கமலா ஸ்ருடியோ

கண்டி வீதி -:- கிளிநொச்சி



## ஏ. எம். கந்தையா தளபாட நிலையம்

7-ம் கட்டைச் சந்தி -:- புளியம்பொக்கணை

உங்கள் வீடுகளை அலங்கரிக்க ஏற்ற தளபாடங்கள்
உங்கள் கடைகளுக்குத் தேவையான
மேசை, கதிரை, அலுமாரி முதலியனவற்றிற்கு

ஒருமுறை எம்மிடம் வாருங்கள்.

"உங்கள் சேவையே எங்கள் இலட்சியம்"

நாகதம்பிரான் ஆலய மணிக்கூட்டு நிதிக்கு
எமது அன்பளிப்புகள்
உரித்தாகுக.

உங்கள் தேவைகளுக்கு எம்மிடம்
விஜயம் செய்யுங்கள்

யாழ் றைஸ் மில்
இணுவில் றேட் — மானிப்பாய்
போன்: 553

YARL RICE MILL
INUVIL ROAD -:- MANIPAY
Phone: 553

நாகதம்பிரான் ஆலய மணிக்கூட்டு நிதிக்கு
எமது அன்பளிப்பு

# ராஜ கமலாஸ் கபே

( உரிமை: K. A. S. மணியம் )

பஸ் நிலையம் — பளை

❊ சிறந்த தேனீர்
❊ சுகாதார முறைப்படி அமைந்த உணவுகள்
❊ சிற்றுண்டி வகைகள்
❊ குளிர்பானங்கள் முதலியவற்றிற்கு

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்
உங்கள் திருப்தியே எங்கள் நோக்கம்

# RAJA KAMALAS CAFE

( Prop: K. A. S. MANIAM )

BUS STAND — PALLAI

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய
மணிக்கூட்டுக் கோபுர நிதிக்கு எமது
இதயம் கனிந்த அன்பளிப்பு
உரித்தாகுக.



# புஸ்பா சைக்கிள் வேக்ஸ்

( உரிமையாளர்: ச. செல்லையா )

சின்னத்துரை பில்டிங்

கண்டி வீதி -:- பளை

# துரைராஜா ஸ்ரோர்ஸ்

( உரிமையாளர்:- க. துரைராஜா )

முல்லைத்தீவு றோட் -:- தருமபுரம்

எம்மிடம் சகலவிதமான

* பலசரக்குச் சாமான்கள்

* எண்ணெய் வகைகள்

* கயிறுகள்

* குளிர்பானங்கள் மற்றும்

* சில்லறைச் சாமான்கள்

மலிவான விலையில் எப்பொழுதும் வாங்கலாம்.

ஒருமுறை விஜயம் செய்தால் உண்மை தெரியும்

# THURAIRAJAH STORES

( *Prop*: K. THURAIRAJAH )

MULLAITIVU ROAD — THARMAPURAM

உ

சிவமயம்

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில்
மணிக்கூண்டுக் கோபுரம் இல்லையே என்ற
குறையைப் போகக எமது சிறு
நன்கொடையும் ஆசியும் உரித்தாகுக.

# துரை அன் கோ.

23/3 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

கிளை: கண்டி றோட், பரந்தன்

யுஆசா பற்றறி

| YUASA BATTERY |
|---|

இலங்கையில் உற்பத்தியாகும்
அதி உன்னதமான - தரமான பற்றறிகள்

**யுஆசா பற்றறிகளே**

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய

அசையா மணிக்கூண்டு நிதிக்கு

எமது அன்பளிப்பு

கதிர் ஹாட்வெயர்ஸ்

11/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

தந்தி: கதிர் போன்: 7130

KATHIR HARDWARES

GENERAL HARDWARE MERCHANTS

11/1, STANLEY ROAD

JAFFNA

Grams: **KATHIR** Phone: **7130**

விரைவில் எதிர்பாருங்கள் :

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய

ஆசையார மணிக்கூண்டு நிதிக்காக

# நாமகள் கலா மன்றத்தினர்

பெருமையுடன் அளிக்கும் அதி உன்னத நாடகம்

## என்ன நாடகம்?

## எங்கே?

## எப்பொழுது?

விபரம் விரைவில் அறிவீர்கள்.

குறிப்பு : இவ் நாடகத்திற்கு விலைப்படும் ரிக்கற்றுகளுக்கு செலுத்தப்படும் ஒவ்வொரு சதமும் நாகதம்பிரான் மணிக்கூண்டு நிதிக்கு என்பதை மறந்து விடாதீர்கள்.

---

தூய்மைக்கும் வெண்மைக்கும் :

**மெனிக் பார் சோப்**

**மெனிக் நீல சோப்**

**மெனிக் ரேபிலந் சோப்**

தயாரிப்பாளர் :

**ஆர். எம். பி. இண்டஸ்றீஸ், களனி**

ஏக விநியோகஸ்தர்கள் :

## யாழ் மேர்க்கண்டையில் ஏஜென்சீஸ்

402, நாவலர் வீதி — யாழ்ப்பாணம்

*With the best compliments*

*of*

# CHANDRA KNITTING Co.

46/1, BROWN ROAD

JAFFNA

புளியம்பொக்கணை நாகதம்பிரான்

மணிக்கூட்டு நிதிக்காக

வெளியிடப்படும்

**ஆண்டுற்சவ மலருக்கு**

எமது அன்பளிப்பு

— உரித்தாகுக —

# நவரத்தினம் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி, பருத்தித்துறை

அன்பளிப்பு

N. SOMAKANDHAN
Justice of the Peace for All Island
Reg. No. 2000/07/W/AI/ B/311
215 G 1/1, Park Road, Colombo-5

அரஸ்கோ தொழிற்சாலை
நல்லூர், யாழ்ப்பாணம்
தொலைபேசி : 7051

---

உ



புளியம்பொக்கணை நாகதம்பிரான்
மணிக்கூட்டுக் கோபுர நிதிக்கு உதவ விரும்புவோர்
கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிப் பற்றுச்சீட்டுப்
பெற்றுக்கொள்ளவும்

செயலாளர், மலர் வெளியீட்டுக்குழு

இ. த. சுப்பிரமணியம்
அதிபர்
குமரபுரம் வித்தியாசாலை
பரந்தன்

உ
சிவமயம்

இவ்வாண்டு

இம்மலர் மணம்பெற்று ஒளி வீச

அடுத்த ஆண்டு

ஓங்கார மணியோசை ஒலிவீச

எல்லாம் வல்ல நாகதம்பிரான் நல்லருள் புரிவானாக.

V

# V. நடராசா

இளைப்பாறிய கிராம விதானையார்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

K. SOMAKANDHAN
Justice of the Peace for All Island
Reg. No. 2000/07/W/AJ/ B/311
215 G 1/1, Park Road, Colombo-5

அருள்மழை பொழியும்
புளியம்பொக்கணை
நாகதம்பிரான் திருவருள்
அனைவருக்கும் உரித்தாகுக!

## விவேகானந்த அச்சகம்-புத்தகசாலை

விவேகானந்தாக் கட்டிடம்
யாழ்ப்பாணம்

தொலைபேசி: 517 தந்தி: 'பிறின்ரேஸ்'

---

ஈழத்தின் ஒப்பற்ற நகைச்சுவை ஏடு

## சிரித்திரன்

மட்டுமே

சிரிப்புடன் சிந்திக்க வைப்பது சிரித்திரனே

புகழ்பெற்ற "சவாரித் தம்பர்" ஆசிரியரை
ஆசிரியராகக் கொண்டது சிரித்திரனே.

# நன்றியுரை

சொல்லென்ற மலரினிலே பொருள் என்ற மது சொட்டிச் சுரக்கும் அமிர்தசுரபியாக ஒளிரும் பண்டிதமணியவர்களின் எழுத்தோவியங்களுடன் அவருடைய சிஷ்யர்களின் படைப்புக்களும், அன்பர்களின் பாமாலைகளும் கலந்து விரவ வெளியாகும் இம்மலருக்கு, அர்த்தபுஷ்டியும், கனசங்கதிக ளும் நிறைந்த ஆசியுரைகளை மேதைகள் வழங்கினர். பலித்துவிட்டது அவர்தம் ஆசிகள். எனவே, அவர்களுக்கும்—இம்மலரினை வாடாமலராய் மணம்வீச வைத்த அனைவருக்கும்—எமது இதய கமலமலரிலிருந்து பாய்ந்து வருகிறது—நன்றியூற்று.

கரைச்சி கிராமசபைத் தலைவர், திரு. M. செல்லையா அவர்களும் ஏனைய உறுப்பினரும் இத்திசையில் செய்து வரும் சேவைகளுக்கு எமது நன்றி.


எமது குழுவின் உபதலைவர்களாய திரு. K. T. சோமசுந்தரம், திரு. வே. சுப்பிரமணியம் ஆகியவர்கள் தமது வாகனத்தில் சமாதான நீதிபதி திரு. M. யோகலிங்கம், ஆசிரியர் திரு. நா. சோதிநாதன், திரு. இ. கிருஷ்ண ராசா, திரு. கே. குமாரவேலு, துணைச்செயலாளர் திரு. S. S. அச்சுதம் பிள்ளை ஆகியவர்களையும் கூட்டி வணிகப்பெருமக்களிடம் சென்று விளம்பரம் பெற்று உதவினர். மணிக்கூட்டு நிதியையே இலட்சியமாகவுடைய இம்மல ருக்கு விளம்பரம் சேர்க்க சமாதான நீதிபதி திரு. M. T. சுப்பிரமணியம் அவர்களும், சாவகச்சேரி நகரசபைத் தலைவரும், அன்பர் திரு. வ. செல்லத் துரையும் அவ்விடத்தில் பெரிதும் உதவினர். கரம்கூப்பிப் பணிவன்புகனி வுடன் இவர்களனைவருக்கும் தெரிவிக்கின்றோம்.

சினக்காமல்—அத்துடன் எம்மைச் சுணக்காமல்—முகமலர்ந்து விளம் பரம் தந்துதவிய அனைவரின் நிறுவனங்களும் சிறக்க எமது வாழ்த்துக்கள்.

---

1966-ம் ஆண்டு நடைபெற்ற சிரமதான இயக்கத்தில் பங்குபற்றிய அடியார்கள் அனைவருக்கும் மற்றும் சிரமதானத்திற்கு பல்வேறு துறைகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றி.

# மணிக்கூட்டுக் கோபுர நிதி



மெய்யன்பர்களும் அடியார்கள் பலரும் 1969-ல் ரூபா 320-60 சதமும், 1970-ல் ரூபா 623-85 சதமும் உதவியுள்ளனர். மேலும் இந்நிதிக்கு இன்று இம்மலர் மூலம் பெருந்தொகை வந்து கொண்டிருக்கின்றது. மிகுந்த பெரும் நிதியம் வழங்கக்கூடிய பாரிவம்சத்தினர் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் உதவி சிமேந்தாகவும், கல்லாகவும் வரும். ஆகவே, மீண்டும் கூறுகின்றோம்—அடுத்தாண்டு பொங்கலன்று இங்கு வானளாவிய கோபுரத்திலிருந்து ஓங்கார நாதம் நாலாபக்கமும் பிரவாகித்துக் கேட்கும். ஆம், தாராளமாகக் கொடுங்கள் இந்நிதிக்கு. உங்கள் ஒவ்வொருவருக்கும் சுவர்க்கவாயில் திறந்திருக்கும். வணக்கம்.

தன்னுடைய காரினையே எமக்குதவி எமது செலவினங்களைக் குறைத்து எம்மை நன்கு போஷித்த கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்களுக்கு எமதன்பு கலந்த நன்றி.

இவ்விழாவை நன்கு பரிபாலிக்கும் கரைச்சி காரியாதிகாரி திரு. இ. யோகநாதன், உதவி மாகாணதிபர் திரு. தி. முருகேசபிள்ளை, C. T. B. நிர்வாகிகள், அதிகாரிகள், தெருவை ஏற்கனவே ஒப்பனிடுவித்த பொறியிலாளர், எங்கும் ஒழுங்கை நிலைநாட்டிய பொலிஸ் பிரிவினர், சுகாதார வசதிகளைக் கண்காணிக்கும் M. O. H. டாக்ரர் திரு. இராசநாதன் அவர்கள், மற்றைய உத்தியோகத்தர்கள், சகல கிராமசேவகர்கள், கி. மு. ச. தொண்டர்கள், தமது செலவில் மின்னொளி, ஒலிபெருக்கி இன்றமைத்துதவியவர்கள், அங்காங்கு அன்னதானமும், குளிர்நீர்பானமும் குறைவுபடாது அடியார் கூட்டம் வரவர விநியோகித்தவர்கள், ஏனைய பொதுசேவை புரிந்தவர்கள் ஆதிய அனைவருக்கும் தலைவணங்குகின்றோம்.



சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 7000/ ரூபா செலவில் திறந்த வெளி அரங்கும், வீரசிங்கம் மகாவித்தியாலயத்திற்கு கிணறும், விக்கினேசுவர வித்தியாலயக் கட்டடங்களுக்கு ஓடும், நயினாதீவு நாகபூஷணி அம்மாளுக்கு மணியும் இப்படி சிவப் பணியும் சமூகப் பணியும் புரியும்
''கற்பகதரு''
**உயர்திரு M. T. சுப்பிரமணியம் J. P. அவர்கள்**



ஆதி வட்டக்கச்சி வைத்தியர்
**திரு. க. வே. வீரசிங்கம் உடையார் அவர்கள்**
வழித்தோன்றல்
**க. வே. அருணாசலம் உடையார் அவர்கள்**



கோவில் சந்நிதியில் இசை விருந்தளித்த மகா வித்தியாலய இசையாசிரியை
"சங்கீத ரத்தினம்"
**ஸ்ரீமதி கமலம் மகாலிங்கம்**



இனிய பண்ணிசைக் கச்சேரி வைத்தவர்களின் குருமூர்த்தி
சங்கீதபூஷணம்
**திரு. சி. விஜசித்தம்பியார்**



# சமர்ப்பணம்



இம்மலரை செப்பமுற ஆரம்பிக்க முன்பு நாம் உதவி மாகாணதிபதியைக் கண்டு அவரது ஆலோசனையைப் பெற எமது தலைவர், திரு. ஆர். ரீ. சுப்பிரமணியம் அவர்களைக் கூட்டிக்கொண்டு கச்சேரிக்குப் போக வந்தேன். இம்மலர் அவருடைய மனதிலே கருக்கொண்டது. அவர் பெருமானை வணங்கிய பின்பே புறப்பட்டு பரந்தன் சந்திக்கு வந்தார். நாம் வந்த உடன் கார் ஒன்று வந்தது, அது உதவி மாகாணதிபதியின் வாகனம். எமக்குரிய உதவியையும் அவர் செய்துவிட்டே சென்றார். நாம் நினைத்தவரை உடன் கொண்டுவந்தவர் யார்?

இம்மலரை நன்கு பிரதிபண்ணுவதற்குத் துணைச் செயலாளரைத் தேவைப்படவே தந்தியடிக்கச் சென்றோம். அவர் தபால் நிலையத்தில் நின்றார். இது யார் செயல்?

கடதாசி இல்லை—என்ன செய்வது? என்று விவேகானந்த அச்சக முதல்வர் வேதனைப்பட்டுத் தலைவருக்கு முறையீடு செய்தனர். அவர் ஷெ காரியங்களைக் கூறிப் போயினர். மறுநாள் பல றீம் கடதாசிகள் குறைந்த விலையில் எங்கோவிருந்த பழைய நல்ல "ஸ்ரொக்" அகப்பட்டது. புதையல் போல் அக்கடதாசி அவருக்குத் தோற்றியதாம். இது எப்படி நடந்தது?

இப்படி இப்படி தோன்றாத்துணையாக மாத்திரமல்ல இன்னும் சமீபமாக வந்து வெளிப்பட நின்று அரும் பெரும் துணைபுரியும் (ஆடலே புரியும்) அம்பலவாணன் புளியம்பொக்கணை நாகதம்பிரான் திருவடிகளுக்கு இம்மலரை சிரம் தாழ்த்திக் கரம் கூப்பி, சமர்ப்பணமாக்கி ஆனந்த சாகரத்தில் மூழ்கின்றோம். பக்திப் பிரவாகத்தில் அமிழ்ந்திய—அவருடைய அடியார் கூட்டத்திற்கு மீண்டும் வணக்கம்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"

திருச்சிற்றம்பலம்

சி. சு. சின்னத்தம்பி
கௌரவ செயலாளர்

ஆண்டுற்சவ மலர்க்குழு
புளியம்பொக்கணை

Please

Patronise

Our

Advertisers

எங்கள்

விளம்பரதாரர்களை

ஆதரியுங்கள்.

With the Best Compliments

of

# YARL METAL INDUSTRIES

*Manufacturers of:* Aluminium, Brass & Copper Hollow Ware

*Agents:* **KUBOTA POWER TILLERS**

250-254, K. K. S. ROAD, JAFFNA
Tel: 7049

**Branch:**

63, BANKSHALL STREET, COLOMBO 11
**Tel: 26150**

# சிலோன் இன்ரநாஷனல் றேடிங் கம்பெனி

## கண்டி வீதி, கிளிநொச்சி

**கிளை : K. செல்வராசா அன் பிறதர்ஸ்**

நிர். 37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி. 7318

## THE BEST ALL ROUNDER IN ITS FIELD!

**that's the new 276 and 432**



உலகிலே சிறந்ததும் மக்களால் பெரிதும் விரும்பப்படுவதுமான 'இன்ரநாஷனல் காவஸ்ரா' உழவு யந்திரங்களுக்கு வட மாகாண விநியோகஸ்தர்களாகவும் கொழும்பு வாக்கர் அன் சன்ஸ் கொம்பனி வட மாகாண விநியோகஸ்தர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கிறேம்

**மற்றும்**

- இறக்குமதி செய்யப்பட்ட வூல்ஸிலி நீர்ப்பாசன இயந்திரங்கள்.
- பீ. எம். ஸீ. லூக்காஸ், ஸீ. ஏ. வி. மற்றும் கேர்ளிங் மாற்றுறுப்புக்கள்
- றேடியோக்கள், பைசிக்கிள் உறுப்புக்கள்
- மணிக்கூடுகள், பெற்றேமாக்சுகள் எம்மிடம் கிடைக்கும்.

சேற்று உழவா? புழுதியா? எதுவானலும் சரி

**இன்ரநாஷனல் உழவு யந்திரங்கள் பிரசித்தியானவை**

இதை வாங்குபவர்கட்கு ;-

**மாதத் தவணையில் பணம் கட்ட ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்,**

**எம்மிடம் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.**


விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம்